# பவள விழா நாயகன்

## ஆரையூர் அருள்



மூத்ததம்பி அருளம்பலம்



தொகுப்பாசிரியர்

வயிரமுத்து துசாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பவள விழா நாயகன்

## ஆரையூர் அருள் (மூத்ததம்பி அருளம்பலம்)

## பவள விழா சிறப்புமலர்

## 2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : பவள விழா நாயகன் ஆரையூர் அருள்

பதிப்பு : புரட்டாதி 2024

வெளியீடு : வீரமாணிக்கன் குடிமக்கள்

**Title : Pavalavila nayakan araiyur arul**

**Edition : 19 November 2024**

**Published By : Veeramanikkan kudimakkal**

ISBN : 978-624-98705-2-9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரையூர் அருள் அவர்களின் 75 ஆம் ஆண்டின் பவள விழா மலருக்கான புகழுரை

**சிவஶ்ரீ ப.மானாகப்போடி ஐயர்**
நாகலிங்கேஸ்வரர் ஆலய பிரதம குரு, முனைக்காடு

ஆரையூர் அருள் என்பான் ஒரு நற் குடி பிறப்பாளன் இறையருளோடு இவ்வுலகில் ஜனித்த இன்பமுறு மானிடன். அன்பும் கருணையும் அசைவற்ற மனமும் பெற்ற இயல்பினன் இனிமையுடன் பேசி இயல், இசை, நாடகம் தரும் முத்தமிழ் வித்தகச் செல்வன். கொடுப்பார்க்கு குறைவில்லை என்பது இவருடைய பாடல்களின் தொகையை வைத்து எங்கிருந்து வருகிறது என்று தெரியாததால் அமுதசுரவி போல் அள்ள அள்ள குறையாமல் வருகின்றதினால் இப் பழமொழியை முன்னோர்கள் சொன்னார்களே என்று வியப்புற வைக்கின்றது.

பொருள்,அணி,நடை தத்துவார்த்தமான வார்த்தைகள் இசை நயம் என்பன கூடி வந்து இவரை ஒரு எழுத்தாளன், கவிஞன் என உலகம் வியந்து பார்க்கின்றது. "அறிமுகம் செய்கின்றது" சாதாரணமாக பகட்டு இன்றி தன்னை உயர்வாக எண்ணாமல் அடியவர்கெளியவன் என்கின்ற பதத்தின் படி செயல்படுவோன். சொத்து, சுகம், சொகுசு என்பன விடுத்து தமிழ் என் சொத்து இதுதான் என்னை உயர்த்தும் என்று உணர்ந்து உய்தி பெற வகைதேடும் உணர்வாளன். இறைவனின் படைப்பில் இதற்கென்று உருவாக்கப்பட்ட செம்மல், செம்மொழி வித்தகன், கலையின் சொரூபம், அன்பின் ஊற்று, அறிவின் சிகரம் பண்பின் இருப்பிடம், பணிவின் உறைவிடம், மரியாதைக்குரிய மாமனிதன், ஆசான், அண்ணாவி இவ்வகை பெருமை கூடியோனை சொல்லால் போற்றி புகழ்வது கலைஞனுக்கும் ரசியனுக்கும் கட்டாயம் வேண்டுவதே.

**கல்விப் பணி**

ஆசிரியன் என்பதின் இலக்கணம் அடியோடு இல்லை இவரிடம் தலைக்கனம் பண்பினிலே உயர்ந்ததொரு பாவலன் பாரினிலே இல்லை இவன் போல் தமிழ் காவலன். இவர் கணித ஆசிரியராக பயிற்றப்பட்டாலும் தமிழ், சமயம் ஆகிய பாடங்களையும் கற்பிக்க வல்லவர். முக்கியமாக இவரது காலத்தில் சகல பாடங்களையும் கற்பிக்க வல்ல திறமை இவரிடமிருந்தது. தலைமைத்துவ பண்பு நிறைந்ததினால் பாடசாலைகளின் தலைமைப் பொறுப்பையும் மிகச் சிறப்பாக செய்தவர். கணித பாடத்தின் ஊடாகவும் கலை வளர்த்த திறமையும் உண்டு. பழமொழிகள், பாடல்கள் என்பதே வைத்து எளிமையாக கணிதம் செய்பவர். அதனால் ஏற்பட்ட உணர்வின் வெளிப்பாடு கலை வளர்க்கத் தூண்டியது. முக்கியமாக இவரின் படைப்பு வில்லுப்பாட்டு இது கன்னி முயற்சியாக தோன்ற நாடகம், கும்மி, வசந்தன் என விரிந்து நாட்டுக்கூத்து கலைஞனாக உச்சம் புகழ் பெற்றவர் பாடசாலையில் இவர் ஒரு எடுத்துக்காட்டான ஆசிரியராக பண்பின் சிகரமாக சார்ந்தசொருவியாக மாணவர்களின் மனதில் இடம்பிடித்த மறக்க முடியாத ஆசானாக மதிக்கப்பட்டார். விபூதி சந்தனம் வேட்டி நீளக்கை சட்டை என்பன இவருடைய உள்ளத்தின் தன்மையினை உணர்த்துகின்றது. சில விடயங்களை சுருக்கமாக விளங்க வைக்கும் திறமையுண்டு பெரியோர்கள் பெற்றோர்கள் மாணவர்கள் மட்டுமல்ல மனிதமுடைய சகலரும் இவரை போற்றினர். என்றும் மதிப்பு மரியாதை இருந்து கொண்டே செல்லும் வகையில் நடந்து கொள்வார் இவரைப் போன்று இனி ஒருத்தர் தோன்ற முடியாது என்பதை இட்டு பெருமைப்படுவோம் .

**கலைப்பணி**

இவரின் கலைப்பயணத்தில் முதலில் இறையின்பபாவரங்கள் இவருடைய இறை உணர்வை சொல் வளர்த்தை, இசை நயத்தை, பொருள் ரசத்தை கற்பனை கெட்டதா உச்சத்தை தொட்ட இறையருளை காட்டுகின்றது. இலங்கையினுடைய தெய்வீக திருத்தலங்கள் அத்தனையும் இவரது உணர்வில் தோன்றி அங்கிருந்து அருள்பாலிக்கும் தெய்வங்களது புகழ், வரலாறு, பூசை முறைகள் அற்புதங்கள், அமைவிடம் என அனைத்து விடயங்களையும் சொல் பிசகாது உண்மைத் தன்மையுடன் வெளிப்படுத்தி பாடலாக்கி சொல்லால் அல்ல உள்ளத்தினால் உரைத்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகள் காவடிப் பாடல்,காவியம்,கும்மி,தாலாட்டு ஊஞ்சல் என வகைப்படுத்தி மேற்கூறிய அத்தனை விடயத்தையும் சொல்லால் பேசியிருப்பது சிறப்பான விடயமாக அமைகின்றது அத்தோடு பத்தாலய பாவரங்கள், தனித்தனியான ஆலயங்களுக்கான பாடல்கள். இறுவெட்டுக்கள் இதைவிட நூலாக்கம் செய்யப்பட்டு நாட்டுக்கூத்து வடமோடி, தென்மோடி பாடல்கள் வில்லுப்பாட்டு என பலதரப்பட்ட பொக்கிசங்கள் இவரினால் ஆக்கப்பட்டுள்ளது. இதில் மிகப் பெருமை பெறுவது உயர்வு பெறுவதும் தேடியும் கிடைக்காத பொக்கிஷமாக இருப்பதும் தமிழ் கூத்தியல் எனும் நூல் மறைந்துள்ள விடயங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளது .

இவரால் ஆக்கப்பட்ட பல்தரப்பட்ட பாடல்கள் ஆயிரமாயிரம் இதை தமதாக்கி பெருமை பெறும் வல்லமைகண்டு ஐயா அவர்கள் புன்னகை செய்வார். இறைவனுடைய அற்புத படைப்பில் இவர் புதுமையானவர் படுவான்கரைக்கும் புகழ் சேர்த்தவர் எழுவான்மை மண்ணின் கலைவெள்ளி கலைஞர்களை,பாடல்களை,பாடலாசிரியர்களை உருவாக்கியவர் .

**நாட்டுக் கூத்து பணி**

கலை கற்பனைக் கெட்டாத ஒன்று இவ்விடயத்தில் அதி திறமையும் சக்தியும் வாய்ந்தது கூத்து எனில் கூத்தை தில்லையில் சிவப்பரம்பொருள் ஆடி, தில்லைக் கூத்தன் எனப் பெயர் பெற்றார். கூத்தாடும்போது உடல் வலிமை, உளவலிமை மிக முக்கியம் அத்துடன் நாவன்மை, தொனி, பாவனைகள் என்பன கவனிக்கப்படும். இதில் மத்தளம், சல்லரி தாளக்கட்டு, பாவனையாட்டம், குரல் வளம், பாடல் எழுதுவது, மெட்டு அமைப்பது,வடமோடி தென்மோடி இவைகள் கலப்படமற்று இருக்க வேண்டும். இத்தனை திறமைகளும் வன்மையும் ஒருங்கே அமையப்பெற்றவர் அருள் அவர்கள். இவருக்கு முன்னோடியாகவும் அதற்கு முன்னாலும் தலைமுறை கடந்தும் பல அண்ணாவிமார்கள், பாட்டு எழுதுவோர், கொப்பி பார்க்கின்றவர்கள், அதாவது பாட்டை பாடி காட்டி பழக்குபவர்கள் சல்லரி அடிப்பவர்கள் கூத்துக் கலைஞர்கள் என பலதரப்பட்ட கலை உணர்வாளர்கள் இருந்துள்ளனர். இவர்கள் தனித்தனி விடயங்களில் தங்கள் திறமையை வெளிக்காட்டினார்கள். இவை அனைத்தையும் தன்னகத்தே கொண்டு அட்டாவதனையாக சகலகலா வல்லவன் ஆக இருப்பவர் பெருமதிப்பிற்குரிய அருளம்பலம் ஐயா அவர்கள் அத்தனை சிறப்பையும் பெருமையும் திறமையும் பெற்ற இவர் இக்கூத்தின் மீது வைத்துள்ள பற்றும் ஆற்றலும் இதை உலகறிய செய்யவேண்டும் என்கின்ற அவாவும் பாமரனிடமிருந்த கலையை பல்கலைக்கழகம் வரை விரிவு படுத்தியவர் புத்தாக்கம், புதுமை, இடைமோடி என்பனவற்றுக்கு அப்பால் சென்று பழமை, பண்பு தவறாமல் கலை வளர்ப்பவர். இவர் காட்டிய வழியில் சென்று புதுமை புகுந்து கலைநாசம் செய்யும் அறிவாளிகளும் எம்மிடை உண்டு. இத்தகைய கலையையும் அறிந்து விளக்கும் வல்லமை இருந்து விளக்குவதை இரட்டிப்பு செய்து கலை பரப்புவது மிகவும் வேதனைக்குரியது

ஐயா அவர்கள் எழுதிய தமிழ் கூத்தியல் எனும் நூல் பலதரப்பட்ட சான்றுகளை கூத்தின் உயர்வை வெளிப்படுத்துகின்றது. முக்கியமாக 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அண்ணாவியார் பாடல் . மத்தள பாட்டு, உடுக்கைப், பாட்டு, குருக்கள் கோடலி என்னும் பாடல்கள் இருப்பதாக அறிந்து பெயர் பெற்ற அண்ணாவிமாரிடம் இதைப் பற்றி வினவி பழி காரணமாக விதண்டாவாதியாக பேரெடுத்துள்ளேன். இப்படி பாடல் இல்லை என்கின்ற வார்த்தையையும் கேட்டுள்ளேன். இதை உலகுக்கு வெளிப்படுத்தியவர் அருளம்பலம் ஐயா அவர்கள். நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதற்கு உதாரணமானவர். சராசரியாக 30 கூத்துகளுக்கு மேல் பாடியுள்ளார் ஆடி இருக்கின்றார், பாடியிருக்கின்றார் மத்தளம் அடிப்பதிலும் வல்லவர் அண்ணாவி என்ற பெயரும் இவருக்கு உண்டு. இவ்வகை சிறப்புக்கள் மட்டுமின்றி தான் எழுதிய பாடல்கள் சொற்பிரயோகங்கள் பற்றிய கருத்துக்களை சுருக்கமாக விவரிப்பதில் வல்லவர்.

இத்தகைய பெருமை பெறும் மூத்ததம்பி அருளம்பலம் அவர்கள் 75வது ஆண்டு பவளவிழா காணுவதையிட்டு தமிழ் கூறும் நல்லுலகு பெருமை பெற வேண்டும். இவ்வாறான சகலகலா வல்லவர் இருப்பதையிட்டு பெருமை கொள்வதோடு இவரை வாழ்த்துரைப்பதில் வாழ்த்துவதில் படுவாங்கரையுடன் முனைக்காட்டு ஊர் நாகலிங்கேஸ்வரர், ஆலயம் நாகசக்தி கலை மன்றம் என இணைந்து போற்றி புகழ்ந்து இருக்கின்றோம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# என்னுரை

ஆரையூர் அருள் என அறியப்படும் மூத்ததம்பி அருளம்பலம் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று பிரதேசத்தில் ஆரையம்பதி எனும் இடத்தில் பிறந்தவராவார். இவர் 1949ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி பிறந்தார்.

எழுத்தாளரும், கலைஞருமான இவர், இன்றுவரை பல்வேறு ஆக்கங்களை எழுதி வெளியீட்டு வருகின்றமை எடுத்துக்காட்டத்தக்கதாகும்.

அப்போது ஆரைப்பற்றை என அழைக்கப்பட்ட இப்போதைய ஆரையம்பதி கிராமத்தில் பிறந்த இவர், ஆரம்பக்கல்வியை ஆரையம்பதி இராமகிருஸ்ணமிசன் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்தார். பின்னர் மட்டக்களப்பு கல்லடி சிவானந்த வித்தியாலயத்தில் உயர்கல்வியைத் தொடர்ந்தார்.

பாடசாலைப் பருவத்திலேயே கலைமீது ஆர்வம் கொண்ட இவர், பாடசாலை போட்டிகள் பலவற்றிலும் பங்கேற்றார். கற்பனைவளமும் கவிவளமும் கொண்ட இவர், நாடகங்கள், கவிதைகள் எழுதுவதிலும் புலமையைச் செலுத்தியதுடன் தமிழரின் கூத்துக்கலையில் அதித ஈடுபாடு கொண்டவராகக் காணப்பட்டார். இதனால் கூத்துக்கலையில் கூத்தராகப் பாத்திரமேற்று நடித்தமையுடன், பாடசாலைகளிலும் பிள்ளைகளை அக்கலைகளுக்குள் ஈடுபடுத்த அயராத முயற்சி கொண்டு செயற்பட்டார். கூத்துக்கலைஞனோடு மட்டும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாது, கூத்து எழுவதிலும் புலமையை வெளிக்காட்டினார். இதன் காரணமாக கூத்தியல் என்ற நூலினையும் வெளியீடு செய்திருக்கின்றார்.

ஆசிரியராக பணியை ஆரம்பித்த இவர், கணிதப்பாடத்தினை கற்பிப்பதில் சிறந்த ஆசானாக விளங்கினார். நாட்டில் பல்வேறு இடர்பாடுகளும், பிரச்சினைகளும் எழுந்த காலத்திலும் கூட அதிகஸ்ட, கஸ்ட பாடசாலைகளில் கல்வியைக் கற்பித்தார். வீட்டிற்கு வரமுடியாத சூழலிலும் கூட பாடசாலைகளில் தங்கியிருந்து மாணவர்களுக்கான கல்வி புகட்டுவதில் ஆர்வம் செலுத்தினார். மாணவர்களுக்கு அர்ப்பணிப்பான சேவையை வழங்கியதன் பயனாக அதிபர் சேவைக்குள் உள்வாங்கப்பட்ட இவர், அதிபராக தனது பணியைத் தொடர்ந்தார். அதிபர் சேவையில் முதலாம் தர அதிபராக வரை தனது பணியைத் தொடர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

"ஆரையூர் அருள்" என சிறப்பித்துக் கூறப்படும் மூத்ததம்பி அரும்பலம், பெயருக்கேற்றால் போல் இலக்கிய, ஆன்மிகத்துறைக்கு பலமானவர். இவரின் ஆளுமையை "பவளவிழா நாயகன்" என்ற நூலின் ஊடாக தொகுத்து வழங்கக்கிடைத்தமைக்கு இறைவனுக்கு முதற்கண் நன்றி கூறுகின்றேன்.

பழைமைவாதிகள் பெருமைவாதிகளாக தம்மை தாமே புகழ்ந்து கொள்வதில்லை. இதற்கு இலக்கணமானவர் ஆரையூர் அருள். இம்மண்ணில் அவதரித்து 75ஆண்டுகள் கடந்திருக்கின்ற சூழலில் தமிழ் இலக்கியத்துறைக்கு இவர் ஆற்றிவருகின்ற சேவை அவரின் வயதின் பல மடங்குகள் கடந்தவையென்றே கூறமுடியும். அவ்வாறிருந்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியாக, ஆடம்பரமின்றி இருந்து கொண்டிருக்கின்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஆலயங்கள் பலவற்றின் வரலாறு, அற்புதங்களை அறிய வேண்டுமாயின் இவரது "இறையின்ப பாவாரம்", "பத்தாலய பாவாரம்" போன்ற நூல்கள் மிகவும் துணை புரிகின்றன. இந்நூல் பாடல்களாக அமைந்திருக்கின்றன. இதுபோன்றதொரு நூல் ஈழத்தில் 20,21ஆம் நூற்றாண்டுகளில் எழவில்லையென ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மேலும் இவரால் எழுதப்பட்ட "வில்லடிப்பாட்டு", "தமிழ் கூத்தியல்" போன்ற நூல்கள் ஈழத்து தமிழ் இலக்கியத்துறைக்கு கிடைத்த பொக்கிசங்களாகும்.

இலக்கியத்துறையில் ஆர்வமும், தமிழ்மீதான பற்றும், கலைகள் மீதான ஈடுபாடும் கொண்டவருமான "ஆரையூர் அருள்" பற்றிய நூலொன்றினைத் தொகுக்க வேண்டுமென்ற அவா ஏற்பட்டது. இதன் காரணமாக அவரின் 75வது ஆண்டு பிறந்த தினத்தில் "பவளவிழா நாயகன்" என்ற பெயரில் நூலினை வெளியிட எண்ணியிருந்தேன். இதற்காக அவரின் ஆளுமை குறித்த விடயங்களை கட்டுரைகளாகவும், கவிதைகளாகவும் பெற்றுக்கொண்டேன். அவை அனைத்தும் இந்நூலில் வெளிவருகின்றன.

இளைஞர்கள் முதல் பெரியோர்கள் வரை அனைவரையும் ஊக்கப்படுத்துவதோடு, சந்தர்ப்பத்தினையும் வழங்கும் பண்பும் இவருக்குண்டு. அதற்கேற்றால் போல் இளையோர், பெரியோர்களின் ஆக்கங்கள் இந்நூலில் இடம்பிடித்துள்ளன. கவிதை, கூத்து, பக்தி இலக்கியம், நாடகம், சிறுகதை, கட்டுரை போன்றவைகளில் நாட்டம் மிக்கவராக உள்ளார். இவற்றின் ஈடுபாடு தொடர்பிலேயே இந்நூலில் உள்ள கட்டுரைகளும் கவிதைகளும் ஆராய்கின்றன.

இந்நூலினை வெளியீடு செய்வதற்கு புகழுரை, வாழ்த்துரையை வழங்கியவர்களுக்கு முதற்கண் நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன். இதில் உள்ள ஆக்கங்களை உரிய நேரத்தில் வழங்கி வைத்த அத்தனை உள்ளங்களுக்கும் உளமார நன்றி கூறுகின்றேன். மேலும் இந்நூலினை வெளியீடு செய்த வீரமாணிக்கன் குடிமக்களுக்கும், அச்சிட்டுத்தந்த காந்தள் அச்சகத்தினருக்கும் பெரும் மனதோடு நன்றி தெரிவிக்கின்றேன். அத்தோடு தன்னைப்பற்றிய நூலொன்றினை வெளியீடு செய்ய வேண்டுமென்ற போது, தான் செய்ய வேண்டிய கடமையைத்தான் தான் செய்திருப்பதாகவும் இவ்வாறான ஆடம்பரங்கள் தேவையில்லையென மறுத்தும், தொடர்ச்சியாக வேண்டிக்கொண்டதற்கு அமைய இதனை வெளியீடு செய்ய அனுமதித்த "ஆரையூர் அருள்" அவர்களுக்கு மனதார நன்றி கூறுவதோடு, இவரின் இலக்கிய பயணம் தொடரவேண்டும். பல நூல்களை இன்னும் வெளியீடு செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றேன்.

வயிரமுத்து துசாந்தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


01. பவளவிழா வாழ்த்து 01

02. ஆரையூர் அருளின் கூத்திலக்கியம் பற்றிய பார்வை 02

03. ஆரையூர் அருளின் கவிதைகள் மீதான பார்வை 06

04. பக்தி இலக்கியப் படைப்புக்கள் ஓர் விமர்சனப்பார்வை 11

05. ஆரையூர் அருளம்பலத்தின் பன்முக ஆளுமைக்குக் கிடைத்த சிறப்புக்கள் 19

06. ஆரையூர் அருளின் கட்டுரைகள் பற்றிய நோக்கு 23

07. ஆரையூர் அருள் 27

08. ஆரையூர் அருளின் கலை, இலக்கியச் செயற்பாடுகள் 28

09. பன்முக ஆளுமையான ஆரையூர் அருள் அவர்களும் முத்தமிழின் அங்கமான நாடகத் துறையில் அவர்களின் பங்களிப்பும் 31

10. பத்தாலய பாவாரங்கள் 33

11. அகவை எழுபத்தைந்தில் கால்பதிக்கும் ஆரையூர் அருள் 38

12. இலங்கையில் மட்டுமின்றி உலகளாவிய ரீதியிலும் பலராலும் ஈர்க்கப்பட்ட கலைஞர் 39

13. ஈழத்தில் எழுந்த முன்னோடி பக்தி இலக்கியம் 40

14. ஆரையூர் அருளம்பலம் 42

15. நெறி தவறாத நீங்கள் நீண்ட புகழோடு நிறைவாக வாழ்வீர் 43




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவளவிழா வாழ்த்து



**பேராசிரியர். வ. கனகசிங்கம்**
**உபவேந்தர்**
**கிழக்கு பல்கலைக்கழகம் இலங்கை.**

"ஆரையூர் அருள்" எனும் புனைபெயரில் தனது கலை இலக்கிய பயணத்தை வெவ்வேறு துறைகளில் முன்னெடுத்துக்கொண்டிருக்கும் திரு. மூத்ததம்பி அருளம்பலம் அவர்கள், தமது வாழ்நாள் முழுவதையும் பிரதேசத்தின் கலை பண்பாடு வளர்ச்சிக்கு அர்ப்பணித்தவர். இவர் தமது சிறுவயதிலேயே தமக்கான கலை பயணத்தை தொடங்கியதுடன் தமது பிரதேச வாழ்வியலினூடாகவும், கூத்துக் கலையினூடாகவும், சடங்கினூடாகவும் தம் கலைப்பணியை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறார்.

மட்டக்களப்பின் கூத்தரங்கு மரபிலும் இடையறாத பணியினை ஆற்றி வருகின்றவர். வடமோடிக் கூத்து, தென்மோடிக் கூத்து, வசந்தன் கூத்து, சமூக கூத்து போன்ற கூத்து வடிவங்களைத் தம் புலமைத்துவத்தைப் பயன்படுத்தி எழுதி, கிராமத்திலுள்ள அண்ணாவிமாருடன் இணைந்து அவற்றை பயிற்றுவித்தும் வருகிறார்.

ஒரு கலைஞரின் சமூக பணிக்கு, சேவைக்கு கொடுக்கும் மதிப்பும் சிறப்பும் பாராட்டும் அவரை மேலும் ஊக்கப்படுத்தும் அந்தவகையில் அருளம்பலம் அவர்களது அயராத கலை பணிகளுக்கு வழங்கப்பட்ட விருதுகள், பட்டங்கள், பாராட்டுக்கள், கௌரவிப்புக்கள் எண்ணிக்கையற்றவை அவற்றில் சில பட்டங்களும் விருதுகளும் அவரின் சேவையை உணர்த்தி நிற்கின்றன. 1997ஆம் ஆண்டு அரசாங்க அதிபரால் கொடுக்கப்பட்ட சிறந்த "கூத்து கலைஞர்" விருது தொடங்கி 2023ஆம் ஆண்டில் அனாமிகா பண்பாட்டு மையத்தால் கொடுக்கப்பட்ட "தலைக் கோல்" விருது அந்தமான் இலக்கிய மன்றம், போர்ட்பிளேயர் வள்ளலார் சன்மார்க்க சங்கம், பிரான்சு செம்மூதாய் பதிப்பகம், செம்புலம் ஆய்விதழ், சென்னையால் 2024இல் வழங்கப்பட்ட "முத்தமிழ் மாமணி" விருது ஈறாக ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியாக ஏதோ ஒரு வகையில் அவரது திறமைக்குப் பட்டங்களும், விருதுகளும், கிடைத்துக்கொண்டே வந்துள்ளன.

ஆரையூர் அருள் அவர்கள் ஈழத்தமிழர்களின் பண்பாடு நடைமுறைகளுக்கும் அப்பண்பாடு இன்றும் உயிர்நாடியாக இருப்பதற்கும் உரிய செயற்பாட்டினை தனது கலை இலக்கிய செயற்ப்பாட்டின் ஊடாகவும் நாடக செயற்ப்பாட்டினூடாகவும் புரிந்துள்ளார் என்பதோடு, பன்முக ஆளுமையாளராகவும் இன்று வரையும் தொடர்கின்றார். இவரது செயற்பாடுகள் அனைத்தும் வருங்கால தலைமுறைகளுக்கு ஒரு படிப்பினையாக அமையும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை, கிழக்கு மாகாணத்தில் முதன்மை சாதனையாளராக ஆரையூர் அருள் அவர்களின் கலை, கலாச்சார, பண்பாடு செயற்பாடுகள் மேலும் தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்து அத்துடன் அவரது 75வது பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் சிறந்த ஆரோக்கியத்துடனான சுகவாழ்வுவாழ பிராத்திப்பதுடன் இக்கலைப்பணி மேலும் தொடர வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரையூர் அருளின் கூத்திலக்கியம் பற்றிய பார்வை

**திரு.ம.கேதீஸ்வரன்**
**(கலைஞர், கலைப்பட்டதாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர்)**



ஈழத்திருநாட்டின் கிழக்கு தமிழகத்தில் தொன்மையும் பழமையும் பண்பாடும் மங்காது மரபுடமை காக்கின்ற மட்டக்களப்பு மண்ணின் மைந்தன் ஆரையம்பதி தந்த அருளாளன் ஆரையூர் அருள் என்று சிறப்பித்து அழைக்கப்படும் மூ.அருளம்பலம். அன்னைத்தமிழ் மீது கொண்ட அடங்காத தாகத்தால் அவர் தந்த படைப்புக்கள் அத்தனையும் அற்புதமே. அதிபராக, ஆசிரியராக கலைஞனாக, கவிஞனாக பக்தி பாவலராக அண்ணாவியாராக என்று பல தளங்களில் நின்று தமிழ் காக்கும் காவலனாக மிளிர்கின்றார். எனில் அது மிகையாகது.

"தில்லைக்கூத்தனே" என்று மாணிக்கவாசகப்பெருமான் சிவபுராணத்தில் இறைவனைச்சிறப்பித்து பாடுகின்றார் " கூத்து" எனும் சொல் புராண, இதிகாச, சங்க இலக்கியங்களில் ஆடற்கலைக்கு கொடுக்கப்பட்ட பழந்தமிழ்ப்பெயராகும். இறைவன் உலக உயிர்களை உய்விக்கும் பொருட்டு எழுவகைக் கூத்துக்களை ஆடியதால் "கூத்தன்" என அழைக்கப்படுகின்றார். இவ்வாறு தொன்மையும் பழமையும், கொண்டு விளங்கும் கூத்துக்கலையின் காவலரனாக நின்று மிளிர்கின்றார். அருளம்பலம். இவர் கூத்துக்களை ஆடியும் அவற்றை அண்ணாவியராக இருந்து பழக்கியும் வந்துள்ள அதேவேளை கூத்துக்கள் எழுதியும் தன்பணி செய்து வருகின்றார்.

பல்கலை வித்தகரான இவர். எழுதிய கூத்துக்களை இவ்வாறு பிரித்து நோக்கலாம். புராண காலம், இதிகாச காலம், காப்பிய காலம். நவீன காலம் கூத்துக்களின் கதைக்காலத்தைக் குறிப்பிடலாம். அந்தந்த காலத்திற்கு பிசகாத வகையில் கூத்துக்களின் கதையோட்டத்தை கச்சிதமாக கையாண்டுள்ளார். அதனடிப்படையில்,

**புராண காலக்கதைகள்**

இறைவனும் புலவனும். இராவண சொரூபம். இரணிய சங்காரம், சூரசங்காரம். சத்தியவான் சாவித்திரி, மானீன்ற வள்ளி, மறலியை வென்ற மங்கை, காத்தவராயன், அரிசந்திர காண்டம், அரிச்சந்திர மயான காண்டம்.

**இதிகாச காலக்கதைகள்**

இடும்பன் வதம். குருதட்சணை. பாதுசாபட்டாபிசேகம். லவகுசா

காப்பிய காலக்கதைகள்

கண்ணகி சபதம்

**நவீன காலக்கதைகள்**

வழிதவறிய வஞ்சி, பணச்செருக்கு. மங்கள தீபம். மட்டக்களப்பு மகிமை, மனிதம் மாறியதால். கல்யாணப்பரிசு, ஞானம் பிறந்தது. குருபக்தி. நாகரிகமோகம். உயர்ந்தவர்களும் தாழ்ந்தவர்களும்.

ஆரையூர் அருள் தனது கலையுலகப் பயணத்தில் மொத்தம் 26 கூத்துக்களை எழுதியுள்ளார். இது ஈழத்து கூத்துக்கலைக்கு கிடைக்கப்பெற்ற பெருங்கொடையாகும். இவர் எழுதிய கூத்துக்களில் 11 வடமோடிக்கூத்துக்களும் 09தென்மோடிக்கூத்துக்களும் 03சிந்து நடைக்கூத்துக்களும், மூன்று இசை நாடகமும் அடங்குகின்றன. இவற்றுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமோடி, தென்மோடி, சிந்துநடை கூத்துக்களுள் வழிதவறிய வஞ்சி, பணச்செருக்கு, மங்களதீபன், மனிதம்மாறியதால், கல்யாணப்பரிசு, ஞானம்பிறந்தது, நாகரீக மோகம், உயர்ந்தவர்களும் தாழ்ந்தவர்களும் போன்ற கூத்துக்கள் சமூகப்பிரச்சினை, சமூக எழுச்சியை பறைசாற்றுவனவாக அமைந்துள்ளது.

கூத்துக்கலையின்பால் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட அருள், "இறைவனும் புலவனும்" இராவண சொரூபம்" எனும் இரு தென்மோடிக் கூத்துக்கள் அடங்கிய "தமிழ் கூத்தியல்" எனும் நாமத்தோடு 2020ஆண்டு நூலாக வெளியிட்டமை குறிப்பிடத்தக்கதாகும். 1962ஆம் ஆண்டு பேராசிரியர் சு.வித்தியானந்தன் " அலங்காரரூபன்" எனும் தென்மோடிக்கூத்தை தொகுப்பித்து நூலுருவாக்கினார். 1969ஆம் ஆண்டு பண்டிதர் வி.சீ.கந்தையா " அனுருத்திரன் தென்மோடிக்கூத்தும் இராமநாடகம் வடமோடிக்கூத்தும் தொகுப்பித்து நூலுருவாக்கினார். ஆனால் ஆரையூர் அருள் தனது புலமையால் எழுதி வெளியிட்ட முதலாவது கூத்திலக்கியம் என்பதோடு இதுவே கிழக்கிலங்கையின் முதலாவது தென்மோடிக் கூத்து நூல் எனவும் கருதலாம்.

1997ஆம் ஆண்டு வெளியாகிய தினக்குரல் பத்திரிகையில் சண் தவராசா புலவரை இவ்வாறு விழிக்கின்றார். நாட்டுக்கூத்து அருகி விடாமல் காக்கும் அருளம்பலம் என இரத்தத்தில் ஊறிய இக்கலையை நவீனப்படுத்த நவீன நாட்டுக்கூத்தாக மாற்றி நாடக மேடைகளில் அவற்றை மேடையேற்றி அதனை ஜனரஞ்சகப்படுத்தி வரும் வல்லோன். மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய போது "சுந்தரி விடுதா து" எனும் நாட்டுக்கூத்து தமிழ்த்தினப்போட்டியில் முதலிடத்தினைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது என பதிவு செய்கின்றார்.

1994ஆம் ஆண்டு வெளியாகிய தினக்குரல் பத்திரிகையில், ஆரையூர் அமரன் வித்தகரின் வித்தாரம் கண்டு இவ்வாறு குறிப்பிடுகின்றார். "நாட்டுக்கூத்து வளர்ச்சிக்கே தன்னை அர்ப்பணித்த அருளம்பலம் எனவும் ஆரையம்பதியில் வாழையடி வாழையாக கலைத்தொண்டு புரிந்துவரும் ஒரு கலைஞர் எனவும் 1974ஆம் ஆண்டு பொலநறுவை முத்துக்கல் தமிழ் வித்தியாலய மாணவர்களைக் கொண்டு " வள்ளி திருமணம்" எனும் வடமோடிக்கூத்தை ஆடி அரங்கேற்றம் செய்து பொதுமக்களின் பெரும் பாராட்டினைப் பெற்றார்.

1992ஆம் ஆண்டு "வழிதவறிய வஞ்சி" எனும் வடமோடி நவீன நாட்டுக்கூத்தை தயாரித்து நெறியாள்கை செய்ததுடன் வஞ்சியின் தாயாக பாத்திரமேற்று ஆடி அரங்கேற்றியதும் குறிப்பிடத்தக்கதாகும். இக்கூத்தானது மட்டக்களப்பில் பல பகுதிகளில் ஆடப்பெற்று மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. 1993இல் "அனுமன் கண்ட சீதை" என்ற இதிகாச வடமோடிக் நாட்டுக்கூத்தை தயாரித்து நெறியாழ்கை செய்து சீதையாக பாத்திரமேற்று நடித்து அரங்கேற்றம் செய்தமை குறிப்பிடத்தக்கது. 1994ஆம் ஆண்டு "மங்களதீபம்" என்ற வடமோடி என்ற நவீன நாட்டுக்கூத்தை எழுதி நெறியாள்கை செய்து தருமசொருபி எனும் தந்தையின் பாத்திரமேற்று ஆடி அரங்கேற்றம் செய்து தனக்கே ஒரு தனித்துவத்தை ஏற்படுத்தியுள்ளார்.

1997ஆம் ஆண்டு மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தினால் முதன்முதலாக பிரதேச சாகித்தியவிழா நடாத்தப்பட்ட போது நாட்டுக்கூத்துப்போட்டியும் சேர்க்கப்பட்டது. அப்போட்டியில் ஆரையம்பதியில் பண்டுதொண்டு நாட்டுக்கூத்து ஆடப்பட்டுவந்தபோதும் அப்போட்டியில் பங்குபற்ற எந்த கலைஞர்களோ குழுக்களோ விண்ணப்பிக்காத துர்ப்பாக்கிய நிலை இருந்தது. மண்ணின் பெருமை காக்க "மறிலியை வென்ற மங்கை" எனும் தென்மோடிக்கூத்தை எழுதி ஆரையம்பதி கலைஞர்களைக் கொண்டு நெறியாள்கை செய்து "சாவித்திரி" எனும் பெண் பாத்திரம் ஏற்று நடித்து நடுவர்கள், பார்வையாளர்களின் பாராட்டையும் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றதோடு சாகித்திய விழாவிலே மீண்டும் ஆடப்பட்டு அமோக வரவேற்பை பெற்றுக்கொடுத்த பெருமை ஆரையூர் அருளையே சேரும்.

ஆரையூர் அருள் கூத்துப்பனுவலோடு மட்டும் நின்றுவிடாது கூத்துச் சார்ந்த ஆய்வுக்கட்டுரை எழுதுவதிலும் பின்நிற்வில்லை. அந்தவகையில் மட்டக்களப்பில் வடமோடி, தென்மோடி கூத்துப்பிரதிகளின் கட்டுரையில், கூத்துக் கையெழுத்துப் பற்றிய தெளிவான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம், கூத்து கையெழுத்துப்பிரதிகளை கையாளும் விதம், வாய்மொழி எழுத்துரு மரபின் தாளக்கட்டுக்கள், இரு வகையான கூத்துப்பாணிகளும், கூத்துப்பிரதிகளும், அச்சுவாகனத்தின் செல்வாக்கும் கூத்துப்பிரதிகளும், சமூகச்சூழலின் போக்கும் கூத்துப்பிரதிகளும், கூத்துப்பிரதிகளும் கையோட்ட சீராக்கமும், போன்ற தளங்களில் நின்று இக்கட்டுரைகளை விபரிக்கின்றார். இவ்வாய்வுக்கட்டுரையில் மட்டக்களப்பு தமிழகத்தில் 132 வடமோடிக் கூத்துக்களும் 50தென்மோடிக்கூத்துக்களும் உள்ளதை சான்றுபகின்றார்.

2018ஆம் ஆண்டு வெளிவந்த தென்றல் சஞ்சிகையில் தென்மோடிக்கூத்தில் "சிருங்கார இரசனை" எனும் கட்டுரையில் தலைவன் தலைவிக்கிடையிலான, தலைவி தோழிக்கிடையிலான தர்க்க தருவில் சிருங்காரசுவை மேலோங்கியுள்ளமையை இவ்வாறு விபரிக்கினறார்.

தரு

நன்ன நன்ன நான நன்ன நானா - நன்ன
நான நன்ன நான நன்ன நானா
பாங்கியரே நானுரைக்கச் கேளும் - இரவு
தூங்கு மஞ்சும் மீதிலுறங்கும் போது
வாங்குசிலை மதனைப் போலொருவன் - எந்தன்
வீங்குதனம் பிடித்திடக்கண்டேன்
முகத்தோடே முகத்தை வைத்துக் கொஞ்சி - முலை
அகத்தோடே நகத்தை வைத்துக் கெஞ்சி - வெகு
சுகத்தோடே அனைந்தாரடி வஞ்சி -அந்தத்
துரையை விட்டிங்கிருப்பதினிப் பஞ்சி.

மண்முனைப் பற்று பிரதேசத்தில் ஆரையம்பதியில் கூத்துக்கலை எனும் ஆய்வுக்கட்டுரையில் ஆரையம்பதிக் கிராமமும் நாட்டுக்கூத்துக்கலை அண்ணாவிமாரும் மத்தாளக் கலைஞர்களும் ஆகிய தாளங்களில் நின்று அவற்றை விபரிக்கின்றார்.

"முத்திரைப்பல்லவி" எனும் கட்டுரையில் அனுருத்திரன், இந்திரன் பூங்காவனம், சாம்பேந்திரன், அலாங்கருபன், வாளவீமன் போன்ற கூத்துக்களின் முத்திரைப்பல்லவியின் தாக்கம் பற்றி விபரிக்கின்றார். முனைக்காடு ம.கேதீஸ்வரன் அவர்களால் வெளியிடப்பட்ட "கூத்தியல்" எனும் நூலில் அண்ணாவிமார் "வான்மைவிருத்தி" எனும் கட்டுரையின் ஊடாக அண்ணாவி எனும் சொல்லின் பொருளை இவ்வாறு விளக்குகிறார்.

"அண்ணாவி என்பதற்குப் பொருளைச்சொல்லு
அடிக்கும் இரு கரங்களுக்கும் சொரூபம் சொல்லு
பண்ணான தாளமதின் பண்பு சொல்லு
பரிதியென வளைந்த தோலின் பொருளும் சொல்லு
கண்ணான வாருக்கு கருத்துச்சொல்லு
கட்டி வந்த வேட்டிக்கும் பொருளும் சொல்லு
திண்ணமுடன் களரி நிற்கும் இடத்தைச்சொல்லு
திறமுடனே சால்வைக்குத் தீரம் சொல்லு
மண்மகனே மத்தாளம் சக்தி சொல்லு
மனமுவந்து தென் வாசல் சந்தம் சொல்லு
கின்னென இசைக்கும் சல்லாரிச் சந்தம் சொல்லு
கிருடமெனும் தலைப்பாகைக் அருந்தச் சொல்லு
மண்வளரும் மண்ணுயிரின் மகவைப் பாடும்
மத்தளத்தை எடுத்து நீர் அடிக்கும் முன்னம்
அண்ணாக்குள் நின்றிலங்கும் ஆதி ஆணை
அல்லது களரியை விட்டு அகலுவாயே"
இவ்வாறு அண்ணாவியிடம் கேள்வி கேட்க அதற்கு பதில் கூறுகிறார் அண்ணாவியார்.

"அண்ணாவி என்று சொன்னால் ஆதி மூர்த்தி
அடிக்கும் இரு கரங்களுமே சிவத்துள் சக்தி
பண்ணான தாளந்தான் ததிந்ததித்தா
பரிதிவட்டம் பரமசிவன் உரித்த தோலாகும்
கண்ணான வாரதுவோ வாசுகிதான்
கட்டிவந்த வேட்டியதோ புலித்தோல் ஆடை
திண்ணமான களரியது தில்லையம்பலம்
திறமுடைய சால்வையது நாகபாம்பு
மண்மகனே மத்தளம் நந்திதேவன்
மணமுடனே தென்வாசல் திருவிலானே
கிண்ணென இசைக்கும் சல்லாரியது பொற்றாளம்
கிரீடமெனும் தலைப்பாகை கங்கை, திங்கள்
மண்வளரும் மத்தாளத்தை அடிக்கும் முன்னம்
அண்ணாக்குள் நின்றிலங்கும் ஆதியாணை
அகன்றிடுவாய் இக்கருத்தை அறிந்து தானே"
என கூத்தின் மகத்துவத்தை விளக்குகிறார்.

2014ஆம் ஆண்டு தேசிய பல்சுவை குடும்பச் சஞ்சிகையான தென்றல் சஞ்சிகையில் "மட்டுநகர் மறவா நாட்டுக்கூத்து நாயகன் த.நல்லலிங்கம்" எனும் கட்டுரையில் த.நல்லலிங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக்கூத்து கலைஞர் பற்றி இவ்வாறு பதிவு செய்கின்றார். 05.10.1938 ஆண்டு மட்டு நகரின் வடபாலுள்ள வாகரையில் பிறந்து சென் செபஸ்தியார் பாடசாலையில் கற்று எஸ்.எஸ்.சி பரீட்சையில் சித்தி பெற்று ஆசிரியர் பணிக்கு அமர்த்தப்பட்டார் தான் கல்வி கற்கும் ஏழாவது வயதிலிருந்தே கலையுலகில் கால் வைத்தார். செல்லத்தம்பி அண்ணாவியார், வந்தாறுமூலை செல்லையா அண்ணாவிமார்களின் "கற்பலங்காரி" வாளவீமன் கூத்துக்களில் முறையே சிவதருமன், வாளவீமன் பாத்திரமேற்று கூத்தாடி பாத்திரப்பொருத்தம் ஆடல் பாடலால் அனைவராலும் பாராட்டுப்பட்டார்.

1965இல் கர்ணன் போரில் கர்ணனாகவும் 1970களில் மார்கண்டேயர் எனும் கூத்தை பழக்கி பரிகாரி பாத்திரமேற்று நடித்து மட்டக்களப்பு அரசாங்க அதிபர் பிரிவில் முதலாம் இடத்தினையும் பெற்று பெருமை சேர்த்தார்.

இவ்வாறு கலையுலகின் பல்துறைப்பட்ட நாயகனான ஆரையூர் அருள் தன் கலைப்படைப்புக்களை செய்து வருகின்ற அதே சமயம் கலைகாத்த கலைஞர்களை மதித்து மகிடம் சூட்டுவதிலும் பின்னிற்கவில்லை. தற்கால கட்டத்தில் ஊர் ஊராக தனது வயதுக்கு சவால்விட்டு, துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்து கூத்துக்களை பார்வையிட்டு தான் எழுதிய கூத்துக்களை பழகியும் கூத்தை செம்மையாக மரபு மாறாத வகையில் நிகழ்த்த வேண்டும் எனும் முனைப்போடு செற்பட்டு வருகின்ற இயங்கியல்வாதியாக கூத்துக்கலை காக்கும் காவலராக உள்ளார். பவளவிழா நாயகனின் உலகறிந்த உண்மையாக நிலைக்கப் போகின்றது உளமகிழ்வை தருகின்றது.

வீனம் மரபு நாடிப் போற்றி
நல்ல நூல்கள் நயமுற யாத்து
நாடும் வீடும் நலந்தான் காண
நல்ல வழியை நயம்பட உரைத்தீர்
கேடு முனிந்து கோடு அகற்றிக்
குணமது மொழிந்தீர் குவலயம் காக்க
வாது அற்ற வியன்தமிழ்ப் பாக்கள்
வழங்கி வைத்தீர் வையகம் ஏற்றமுறவே.


கட்டுரை கவிதை கவின்தமிழ்ப் பாக்கள்
கருத்து நிறைந்த சிறுகதை நாடகம்
நாட்டுக் கூத்து நலந்தரும் வில்லுப்பாட்டு
கேட்டு மகிழ நன்று தந்தீர்
ஏட்டிலும் இறுவட்டிலும் எண்ணிலாக் கவியெழுதி
எழுத்து வாழ என்றும் உழைத்தீர்
நாட்டில் உள்ளோர் நன்மை பெறவே
நற்கலை பழகி வளர்த்து வந்தீரே.

ஈழத்து ஆலயங்கள் இன்புகழ் கூறும்
இறையின்பப் பாவாரம் இயற்றித் தந்தீர்
வாழ்த்துப் பாக்கள் வாரி வழங்கி
வார்த்தையில் பற்பல வித்தைகள் செய்தீர்
மண்வாசனை கமழும் மாத்தமிழ்க் கவிகள்
மட்டின் மணம்வீசும் மனமகிழ் கவிகள்
எம்மவர் அறிய இல்லங்கள் நிறைய
ஒற்றுமை மந்திரம் ஓதி வைத்தீரே.

அவளந்த நினைவு நெஞ்சக நினைவு
அகத்தே அழிந்த ஆசை எனநல்
சமுதாயத் தராசு உயர்ந்த உள்ளம்
நினைவலை மனமாற்றம் எனப்பல சிறுகதை
சமர்ப்பணம், நல்லதம்பி, சதிமதி, விதியும்,
புதிய விதி சமைப்போம், நல்ல
கல்வியே கலங்கரை விளக்கம் எனப்பல
நாடகங்களும் நவின்றனன் நற்றமிழ் அதிலே.

மண்வாசம் கமழும் மண்முறைப் பற்றெழிலாள்
மட்டின் மாண்புகூறும் கவியெனும் களஞ்சியம்
ஒற்றுமை விதைக்கும் ஒற்றுமைக்
கரவொலியொலிக்கட்டும்
நாட்டுப் பற்றையூட்டும் எங்கள் இலங்கைநாடும்
முத்தமிழ்ப் புகழ்கூறும் தமிழைப்
போற்றிப்பாடுவோம்
நீதி நான் ஏன் மறைந்தேனென்று
முத்தெனக் கவிகள் நயமுடன் தந்த
வித்தகக் கவிஞர் அருளம்பலம் வாழ்கவே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரையூர் அருளின்
# கவிதைகள் மீதான பார்வை

திரு.த.கி.ஷர்மிதன்
(இளங்கலைமாணி)

ஈழத்து இலக்கியப் பரப்பில் பாரறிந்த தமிழ் எழுத்தாளர் ஆரையூர் அருளாவார். தனது உரையாலும் எழுத்தாலும் தமிழை வளர்த்துவரும் இவரது தமிழ்ப்பணி போற்றத்தக்கது. அடக்கம், பணிவு, விட்டுக் கொடுப்பு, அர்ப்பணிப்பு, சேவை என்பன மிக்க வித்தகக் கலைஞர் இவரென்பது சாலப் பொருந்தும்.

கிழக்கிலங்கையில் மட்டக்களப்புத் தமிழகத்தில் நன்னகராம் ஆரையம்பதியில் வசித்துவரும் மூத்ததம்பி அருளம்பலம், "ஆரையூர் அருள்" எனும் பெயரில் தனது எழுத்துப் பணியில் ஈடுபட்டு வருகிறார். "செம்மொழிப் புலவர்" எனும் பெயரை விரும்பியேற்று தனது எழுத்துநாமத்தின் முன்னேயிட்டுப் பயன்படுத்தி வருகின்றமையும் குறிப்பிடற்குரியது.

கவிதை, கட்டுரை, செய்யுள், பாடல் எனப் பல்வகைமைகளில் சமூகம், சமயம், வாழ்வியல் எனப் பல பொருள்களிலும் ஆக்கங்களை ஆக்கித் தமிழ் உலகிற்கு அளித்துவரும் இவர், நவீன கவிதை, மரபுக் இகவிதை, கரகம், கும்மி, பின்னல் கும்மி, நாட்டார் பாடல், கிராமியப் பாடல், வாழ்த்துப் பாக்கள், இறையின்பப் பாவாரங்கள், கூத்துப் பாடல்கள், கொம்புமுறிப் பாடல்கள், நவீன கூத்துப் பாடல்கள் என இதுவரை 10,758 பாடல்களை எழுதியுள்ளதுடன், இளயாது இன்றும் தொடர்ந்து எழுதிவருகின்றமை போற்றத்தக்கதாகும்.

இவரது ஆக்கங்கள் உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகைகள் பலவற்றிலும் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வீரகேசரி, சிந்தாமணி, தினகரன், தினக்குரல், தினக்கதிர், தினமணி, கதிர், தளிர், கதிரவன், விடிவானம், ஒளி, சிகரம், கீழ்வானம், விடிவானம் எனப் பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. அவை இவரது தமிழ் ஆளுமைக்குச் சான்று பகர்வனவாய்த் திகழ்கின்றன. மாவட்ட முதன்மை வாழ்நாள் சாதனையாளர், தேசிய கலைஞர், உலக சாதனை விருது பெற்றவர் எனத் தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆரையூர் அருள் எழுதிய கவிதைப் படைப்புகளாக,

1) "பாரதி நீ மீண்டும் பிறக்காதிருப்பதே நன்று" (1992) கிழக்கொளி கதிர்-02

2) "ஒற்றுமைக் கரவொலி ஒலிக்கட்டும்" (1996) ஒளி சஞ்சிகை

3) "வித்தகன் விபுலானந்தன்" (1999) கிழக்கொளி கதிர்-04

4) "மண்முனைப்பற்றெழிலாள்" (2003) சிகரம் சஞ்சிகை

5) "தாயவள் ஏங்கி நிற்கிறாள்" (2006) தினக்குரல்

6) "கவி" மண்முனைப் பற்று சாகித்திய விழா வெளியீடு (2009) சிகரம் சஞ்சிகை

7) "மண்முனை பற்றுச் சிறப்பு" (2009) கதிரவன்

8) "சிறுவர் உரிமை" (கும்மி பாடல் - 2010) கதிரவன்

9) "ஆரையூர் அமரன் (2010) தினகரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) "தென்றல் பேசிது" (2011) தென்றல்

11) "கவிஞர் திரு.க.அன்பழகன் பாராட்டுப் பாவோலை" (2011)

12) "நாட்டாரியலில் சிறுவர் உரிமை" முதலாமிடம், பட்டிருப்பு வலயம்

13) "அமர தீபம் அமரசிங்கம்" (2012) தென்றல்

14) "பொதிகை மலரட்டும்" (2013) பொதிகை

15) "எல்லாம் வேசமே" பாடலாக்கம் (2014) முதலாமிடம், மண்முனை பற்று பிரதேசம்

16) "எங்கள் இலங்கை நாடு" (2014) முதலாமிடம், மண்முனை பற்று பிரதேச செயலகம்

17) "பிஞ்சுமழலை பூங்கவிதை" (2016) மண்முனை பற்று பிரதேச செயலகம்

18) "பாடுகிறோம் கேளீர்" (2019) இரண்டாமிடம், தேசிய இலக்கிய விழா

19) "வாழ்த்துப் பாடுவோம்" (2020) முதலாமிடம், மண்முனை பற்று பிரதேச செயலகம்

20) "ஆடவர் தோளிலுங் "கா" அரிவையர் வாயிலுங் "கா" ஆரையூர் அருள் கவியிலுங் "கா" -1987" (2020) சுபீட்சம்

21) "என்னென்று சொல்வது" (2021) சுபீட்சம்

22) "விலை பேச முடியாதது அன்பு" (2021) சுபீட்சம்

23) "தமிழ் மகளாய் அத்தை மகள் வந்தாள்" (2021) சுபீட்சம்

24) "வாழ்வு மலர்ந்தது" (2021) சுபீட்சம்

25) "நீதி நான் ஏன் மறைந்தேன்" (2021) சுபீட்சம்

26) "தாயன்பூ" (2021) சுபீட்சம்

27) "நெஞ்சம் மறப்பதில்லை" (2021) சுபீட்சம்

28) "ஔவை இலக்கியங்கள் அத்தனையும் ஔடதங்கள்" (2021) முதலாமிடம், மட்டக்களப்பு

29) "ஆலயமும் நூலகமும்" பாடலாக்கம் (2021) இரண்டாமிடம், மட்டக்களப்பு

30) திருக்குறள் அதிகாரம் "பகை மாட்சி" (2022) உலக சாதனை

31) "வாசிப்பை நேசிப்பதால்" (2023) கவிமுளரி

32) "தமிழைப் போற்றி பாடுவோம்" (2023)

33) திருக்குறள் அதிகாரம் "அறன் வலியுறுத்தல்" (2023) உலக சாதனை

34) "இசை பாட வாருங்கடி", "எங்கள் அன்புமணி" அன்புமணி பாராட்டு விழாச் சஞ்சிகை

35) "ஆயிரம் கவிதைகள் ஆயிரம் கவிஞர்கள்" உலக சாதனை

36) "ஆ.மு.சி.வேலழகன் தத்துவ வித்தகங்கள்" சந்தனக்காடு

37) "மனிதம் மாண்புற"

38) வாசிப்பை நேசிப்பதால் (கவிமுளரி, 25.10.2023)

39) கதிரவன் காசினி காதல் (கவிமுளரி 25.11.2023)

40) புனிதம் புதைகின்றது (கவிமுளரி, 25.12.2023)

போன்ற சிலவற்றை நாம் கூறமுடியும். இவற்றுள் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கவிதைகளில் வெளிப்படும் சிந்தனைகளை எடுத்தியம்புவதாக இக்கட்டுரை அமைகிறது.

**தாயவள் ஏங்கி நிற்கிறாள்**

தாய்நாட்டின் (இலங்கையின்) நிலைமையை எடுத்தியம்பும் கவிதையாக இது திகழ்கின்றது. நம்மை ஈன்ற தாய்மண்ணை, நம்மைத் தாங்கும் தாய் மண்ணை நமது சுய இலாபத்திற்காய் கவனியாது இருக்கும் நிலைமையை நன்கு எடுத்துவிளக்கும் கவிதை இது. எளிமையான சொல்லாடல்களால் சொல்லவந்த உயர் பொருளை நன்கு எடுத்துரைக்கும் பாங்கு சிறப்புக்குரியதாகும். பெற்ற தாயையே விலைபேசி விற்கும் ஈனச் செயலைச் சாடிடும் கவிஞரின் ஆதங்கம் எம்மில் சாட்டையாக வந்துவிழுகின்றது.

"சுகபோகச் சாக்கடையில் வீழ்ந்து
தம்மினம் விற்க விலை பேசும் - சொந்த
மைந்தர்கள் மனநிலை யறியாத
மாதா ஏங்கி நிற்கிறாள்"

என்ற வரிகள் தரமற்றவர்களின் செயலால் தாய்நாடு ஏங்கி நிற்கும் நிலையை நன்கு புலப்படுத்துகிறது.

ஒற்றுமைக் கரவொலி ஒலிக்கட்டும்.

இலங்கையில் இன ஐக்கியத்தை ஏற்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்திக் கூறும் கவிதை இது. இலங்கையில் பிரிவினை வாதம் தலைதூக்குவதற்கான காரணம், அதனைச் சரிசெய்யும் முறைமை, இன ஐக்கியத்தால் ஏற்படும் நன்மை என்பவற்றை கவிஞர் கவிதையூடாக வெளிப்படுத்துவதைக் காணலாம்.

இன ஐக்கியத்திற்குத் தடை சாதியம்தான் என்பதை,

"பேசிடின் ஜாதிகள் பற்றி - மன
அந்தகாரம் தினம் முற்றி"

எனப் பாடுகின்றார்.

இன ஐக்கியத்தை ஏற்படுத்துவதன் அவசியத்தை,

"சங்கிலி பிணைந்திட்டால் வலிமை - இன
சங்கம இணைப்பினால் பெருமை"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பாடி நன்கு வலியுறுத்துகிறார்.

இலங்கைத் தீவில் மகிழ்ச்சி மலரும் வழியையும் நன்கு வலியுறுத்தியுள்ளார்.

"மதத்தினை ஒன்றாய் மதிப்போம் - மற்ற
இனத்தினைச் சேர்த்தே அணைப்போம்
குணத்தினால் கூடி இருப்போம் - தேசிய
உணர்வினால் ஒன்றி உழைப்போம்""

என்ற வரிகள் இன ஒற்றுமைக்கான பாதையைக் காட்டி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஔவை இலக்கியங்கள் அத்தனையும் ஔடதங்கள்

தமிழ்ப் பெண்பாற் புலவரான ஔவையாரின் இலக்கியங்கள் மானிட குலத்திற்கு மருந்து போன்றவை என்பதை வெளிப்படுத்திக் கூறுகிறது இக்கவிதை. ஔவையாரின் நூல்களை வரிசைப்படுத்திக் கூறி, அவரின் தமிழ்ப் புலமை, அவர் இலக்கியங்களின் வளமை, அவை மனித சமுதாயத்திற்குக் காட்டும் நன்னெறி, ஔவை இலக்கியங்களை நாம் போற்ற வேண்டியதான் அவசியம் போன்றவற்றை இக்கவிதை எடுத்துரைக்கிறது.

"நெறிதவறா நீதிவாழ்வை நிதம் நேரில்காட்டி
அறநெறியாமிவ் விலக்கியங்கள் வாழ்வின் வழிகாட்டி
அத்தனையும் மானிடமுன்னேற்ற நல்வழித் திசைகாட்டி
அறியுள்ளங்கை நெல்லிக்கனியென நெஞ்சில் நிலைநாட்டி"

எனும் வரிகள் ஔவை இலக்கியங்களின் பயனை நன்கு எடுத்துக்கூறுகின்றன.

**வாழ்வு மலர்ந்தது**

வாழ்வு எவற்றால் மலர்கிறது என்பதைக் கூறும் கவிதை இது. கூட்டுறவில்தான் வாழ்வின் மலர்ச்சி என்பதை இக்கவிதை அடித்துச் சொல்கிறது. கவிஞரின் தமிழ் ஆற்றலும் கற்பனை வளமும் மிகுந்திருக்கும் எளிமையான, மனதிற்கு இதத்தைத் தரும் கவிதை இது. சமூகப் புரட்சி சிந்தனைகளையும் நன்கு வெளிப்படுத்துகிறது.

"நல்லுறவாம் கூட்டுறவில் நன்மை
விளைந்தது
கூட்டாளியாகக் கூடி உழைத்ததால்
பாட்டாளி வாழ்வு மலர்ந்தது"

எனும் வரிகள் தொழிலாளர் ஒற்றுமையை வலியுறுத்தி நிற்பதை உணரலாம்.

**மனிதம் மாண்புற**

சமூக நோக்கிலான கவிதை இது. சமூகத்தில் காணப்படும் பழுதுகள் சரிசெய்யப்படும் போதுதான் மனிதம் மாண்பு பெறும் என்பதை வெளிப்படுத்துகிறது. சமூகத்திலுள்ள மனித மாண்புக்கு எதிரான விடயங்களைப் பட்டியலிட்டு, அத்தகு தீங்குகள் இல்லாதொழியும் போது மனித சமுதாயம் மென்மேலும் மேன்மை பெறும் என்பதை எடுத்தியம்புகின்றது.

"பாலியற் கொடுமைகள் பட்டிட வேண்டும் - அந்த
பாவிகள் நொந்தே செத்திட வேண்டும்
பெண்ணியம் கண்ணாகப் பேணிட வேண்டும் - அதற்கு
திண்ணிய நெஞ்சோடு செயற்பட வேண்டும்"

எனும் வரிகள் எமது சமூகத்திலுள்ள பெண்கள்சார் கொடுமைகள் அழிய வேண்டியதன் அவசியத்தையும் அத்தகு கொடுமைகள் அழிந்து பாலின சமத்துவம் வளரும் போதுதான் மனிதம் மாண்பு பெறும் என்பது வலியுறுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**விலைபேச முடியாதது அன்பு**

அன்பின் ஆழ, அகலத்தை எடுத்தியம்பும் கவிதை இது. அன்பு விலை மதிப்பற்றது, அகிலத்தின் ஆணிவேர் அது என்பதை வரலாற்றின் துணையுடன் எடுத்துவிளக்குகிறது.

"பின்ன மில்லா
உயருண்மை
அன்புதான்

உருவமற்ற மொழிகளிலே சிறந்த
தன்புதான் - என்றும்
பருவமாற்ற பாதிப் படையாததும்
அன்புதான்
சமயமனைத்தும் போதிக்கும் தத்துவம்
அன்புதான்"

எனும் வரிகளில் எம்மை அன்பால் கட்டிப்போட்டுவிடுகிறார் கவிஞர்.

**பாரதி நீ மீண்டும் பிறக்காதிருப்பதே நன்று**

பாரதியின் சிந்தனைகளுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரணாகச் சமூகம் மாறியுள்ளதை வெளிக்காட்டுகிறது இப்படைப்பு. சமூகத்தின் போக்குப் பற்றியதான தனது ஆற்றாமையைப் பாரதியைத் துணையாக்கி கவிஞர் வெளிப்படுத்திய பாங்கு சிறப்பிற்குரியது.

பாரதி இனி மண்ணில் பிறக்காமல் இருப்பதுதான் பாரதிக்கு நல்லுது என்பதற்கான காரணங்களைப் பட்டியல் படுத்துவதனூடாகச் சமூகம் பிறழ்வான போக்கில் போய்க்கொண்டிருக்கும் தன்மையை எடுத்துக்காட்டுகிறார்.

"தீண்டாமை ஒழித்திடு என்றாய் - இன்று
வேண்டாமை பேசிடும் வீணர் வாழ்கிறார் நன்றாய்
வேற்றுமை முரசெங்கும் முழங்கும்
ஆற்றாமை கண்டு நீ அழுதிட வேண்டும் - அதனால்
பாரதி! நீ மீண்டும் பிறக்காதிருப்பதே நன்று"
என்ற வரிகள் கவிஞரின் மனநிலை நமக்குத் தெட்டத்தெளிவாகப் புலப்படுத்தி நிற்கின்றது.
என்னென்று சொல்வது

நாட்டில் நடக்கும் குழப்பங்களைப் பார்த்துப் புலம்புவதாக இக் கவிதை திகழ்கிறது. மனதிற்கு ஒவ்வாத, நீதிக்குப் புறம்பான பல்வேறு விடயங்கள் நாட்டில் நடந்தேறுகின்றன. அதனை எதிர்த்துக் கேட்பதும் குற்றம் எழுத்தில் கேட்பதும் குற்றம். வாய்பேசா ஊமைகளாய் மக்கள் புலம்பும் தன்மையை எதுகை, மோனைச் சுவைபட எளிய சொற்களால் வடித்துத் தந்திருக்கின்றார் கவிஞர்.

நாட்டில் என்னதான் நடந்தேறினாலும் எதிர்த்துக் கேட்கமுடியாத கருத்துச் சுதந்திரம் மறுக்கப்படும் தன்மையை,
"என்ன? ஏது? நடக்குதிந்த நாட்டில - என்று
சொல்ல முடியாதிருக்கு பாட்டில
எல்லாத்தையும் மெழுதிவிட்டா - ஏட்டில
எம்மப் பிடிச்சடைப்பா கூட்டில"
எனும் வரிகள் நன்கு புலப்படுத்தி நிற்கின்றன.

**மண்முனைப்பற்று எழிலாள்**

இலங்கையின் கிழக்குமாகாணத்தில் அமைந்துள்ள மண்முனைப்பற்று எனும் பிரதேசத்தின் புகழ்கூறும் கவிதைஇதுவாகும். மரபுபாவகையில்கலித்துறையில் அமைந்த இப்பா மண்முனை பிரதேசத்தைப் பெண்ணாக உருவகித்து அதன் வளத்தையும் வரலாற்றையும் கூறி மண்வாசனையைத் தூண்டி மனதை நிறைத்துவிடுகிறது.
உலகநாச்சியால் ஆளப்பட்ட சிறப்பிற்குரிய பிரதேசம் மண்முனைப்பற்று என்பதை,
"மண்முனைப்பற்று இராட்சியம் இளவரசி உலகநாச்சி
கோலதோட்சி
திண்ணமுடன் சிகரம் சிறப்புற்று விளங்கிய மாட்சி"
எனும் வரியில் கவிஞர் பதிவுசெய்துள்ளார்.

நெய்தல், மருதம், குறிஞ்சி, முல்லை நானில வளமும் கொண்ட நற்பூமி என்றும் பல்லின மதத்தவரும் பண்புடன் வாழ்ந்திருக்கும் பிரதேசம் என்றும் மண்முனைப்பற்றின் வளங்கூறி மண்முனைப்பற்றின் எழில் முகத்தை எமது கண்முன்னே கொண்டு நிறுத்தும் பாங்கு சிறப்பிற்குரியது.

"பாலோடு தயிர் நெய்யளிக்கும் கறவையினம் பல்கிப்
பெருகும்
தேனோடு முக்கனி முந்திரி நற்கனித்தருக்கள்
தழைத்து வளரும்
தெங்கோடு நுங்குநிறை பனைகள் செறிந்துசெழித்து
விளையும்
எங்கும் எத்தொழிலும் செய்திடுதவோர்கள் நிறைந்து
விளங்கும்

செந்தமிழர் இஸ்லாமியர் தாய்மொழியாலொன்றி
சமத்துவமாயிருக்க தன்மடிவிரித்தாள் .

இந்திஸ்லாம் கிருஸ்தவம் இன்சுவை
முக்கனியாயிருக்க வுயர்வளித்தாள்"
என்ற வரிகள் மண்முனை எழிலாளிடம் எம்மை அழைத்துச் செல்கின்றமை மறுக்கமுடியாத உண்மை.

**கவி**

மட்டக்களப்பின் மண்வாசம் வீசும் மற்றுமொரு கவிப் படைப்பு இதுவாகும். கணவன், மனைவி இருவருக்கிடையிலான உரையாடலாய் அமைந்த இக் கவிதையில், மட்டக்களப்பு பிரதேச வழக்குச் சொற்கள் மிக இலாவகமாகக் கையாளப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

கணவன் பல்வேறு தொழில்களுக்குச் செல்லும் போது மனைவி கூறும் வார்த்தைகளை வரிகளாக்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மண்ணின் பண்பாட்டை நமது கண் முன்னே காட்சியாகப் பதிவு செய்துள்ளார்.

மட்டக்களப்பிலுள்ள ஆண்கள் புரியும் தொழில்களாக பட்டியில் பால்கறக்கப் போதல், காலைப் பாதுகாப்பு, உரமெறியப் போதல், பாயிழைத்தல், கதிரறுத்தல், வீசுதல், விறகு வெட்டல், தோட்டவேலை போன்ற தொழில்களைப் பட்டியல் இடுகிறார் கவிஞர்.

"பாயிழைக்கப் பன்னறுக்கக் கிரான்குளம் போறமச்சான்
திராய்கிடக்கும் புடுங்கிவாங்க சுண்டி வெகுநாளாச்சிது"

எனவும்

"புதுக்குடியிருப்பு பொன்விளையும் வயலுக்குள்ள
கதிறுக்க போறநீங்க புதுருக்கதிர் கொண்டுவாங்க"

எனவும் வரும் கவி வரிகள் ஆடவர் புரியும் தொழில்களைச் சுட்டி நிற்கின்றன எனலாம்.

மட்டக்களப்புப் பாரம்பரிய உணவு முறைகள் பலவற்றையும் இக்கவிதையில் கவிஞர் பதிவுசெய்துள்ளமை சிறப்பம்சமாகும். கொழுக்கட்டை, திராய்ச் சுண்டல், கண்ணாக்கடியன் மீன், மட்டுறால் குழம்பு, மண்டுப்புட்டு, சீலாமீன் பொரியல், தாமரைக் கிழங்கு போன்ற உணவு வகைகளைக் கவிஞர் கூறியுள்ளார்.

"பாலன்முனை கடற்கரைக்கு வெள்ளாப்போடபோற மச்சான்
சீலாமீன் வாங்கிவாங்க கீலமாக வெட்டி பொரிச்சுத்தாறன்"

எனும் வரிகள் மண்வாசனையை மணக்கச் செய்கின்றன.

ஊருக்குள் கோயில் கதவு திறந்தால் மச்சம் விடுதல், பேய் பார்வையாதல், குறிகேட்டல், புதுக்கதிர் எடுத்து வீட்டில் கட்டுதல் முதலான மட்டக்களப்பு மரபுவழிப் பழக்கவழக்கங்களைப் பதிவு செய்துள்ளார்.

"சீலாமீன் வாங்கிவாங்க கீலமா வெட்டி பொரிச்சுத்தாறன்
செல்வாநகர் கிழக்குக் காளிகோயில் திறந்திருக்கு
எல்லையெங்கும் மச்சமில்ல"

என்ற வரிகள் இதனை வெளிக்காட்டி நிற்கின்றன.

கிராமியவாசம் வீசும் மட்டக்களப்புப் பிரதேச வழக்குச் சொற்கள் பல இக்கவிதையில் கையாளப்பட்டுள்ளன.

""உமலுக்க ஒருதுண்டு ஓட்டு கொழுக்கட்ட இருக்கு
மறவாம தின்னுமச்சான் மதியம்வர பசியெடுக்கா""

எனும் வரிகளில் வரும் உமல் எனும் பிரதேசக் கிளைமொழி குறிப்பிடத்தக்கதாகும். (உமல் என்பது பனை ஓலையால் செய்யப்பட்ட பொருட்களைக் காவுவதற்குப் பயன்படும் ஒரு பையாகும்)

இவ்வாறாகச் சமூகத்தின் மரபுகளைப் படம் பிடித்துக்காட்டும் சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவும் பல கவிதைகளை ஆக்கி அளித்த ஆரையூர் அருளின் தமிழ் ஆளுமைப் பண்பு நயந்து போற்றுதற்குரியது என்றால் மறுப்பதற்கில்லை.



ஆரையூர் அருளம்பலம்
ஆரைநகர் வாழ்கின்ற அருளம் பலனார்
அருந்தமிழ் வளர்க்கும் அகன்ற அகனார்
பாரோர் அறிந்த பைந்தமிழ்ப் பாவலர்
பண்புடன் பழகும் பல்துறைக் கலைஞர்
சான்றாய் விருதுகள் சாலப் பெற்றவர்
சங்கத் தமிழுரைக்கும் செந்தமிழ்க் காவலர்
ஈன்ற மண்ணிற்கு ஏற்றம் தன்னை
இனிதே சேர்த்திடும் ஈழத்து மைந்தரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தி இலக்கியப் படைப்புக்கள் ஓர் விமர்சனப்பார்வை

கலாநிதி. பிரியதர்ஷினி ஜெதீஸ்வரன்
முதுநிலை விரிவுரையாளர், இசைத்துறை,
சுவாமி விபுலாநந்த அழகியல் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம் , இலங்கை

ஈழத்தின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மண்முனைப்பற்று பிரதேச சபைப்பிரிவுக்கு உட்பட்ட ஆரையம்பதியைச் சேர்ந்த ஓய்வு நிலை அதிபரும் கவிஞரும் எழுத்தாளருமாகிய செம்மொழிப் புலவர் ஆரையூர் மூ.அருளம்பலம் அவர்கள் ஓர் கலைஇலக்கியச்செயற்பாட்டாளராவார். தனது வாழ்நாளில் கல்விப்பணியை சிரமேற்கொண்ட அவர் தன் பிரதேசமாகிய மட்டக்களப்பின் பாரம்பரியக் கலைபண்பாட்டு விழுமியங்களை பேணிப் பாதுகாப்பதோடு மட்டுமன்றி அதன் மரபுமாறா புதிய ஆக்கங்களைப் படைக்கும் ஓர் படைப்பாளியுமாவார். இயல் இசை நாடகம் என பல்துறை சார்ந்த அவரது படைப்புக்கள் கவிதை , சிறுகதை, கட்டுரைகள், நாடகங்கள் , வில்லுப்பாட்டுக்கள் ,கூத்துக்கள் ,பக்தி இலக்கியங்கள் என விரிந்துசெல்வன. ஏறத்தாழ அறுபது வருட கலை இலக்கியப் பயணம் அவருடையது. அப் பெருமை மிக்க பெருந்தகையை அவரது எழுபத்தைந்தாவது அகவை நிறை நன்னாளில் வாழ்த்தி இப் பவளவிழா மலருக்கு இக் கட்டுரையை வரைவதில் பேருவகை அடைகிறேன்.

இலக்கியங்களை காலக்கண்ணாடி என்பர். தன் வரலாறு தெரியாத அல்லது போற்றிப் பாதுகாக்கத் தவறிய சமுகம் தன்னைத் தக்கவைக்க முடியாத ஓர் நிலையில்லா சமுகமாகும் . அந்தவகையில் நம் தொல்தமிழ்க்குடிகள் தீர்க்கதரிசனம் மிக்க சமுகமாக வாழ்ந்திருப்பதும் தம் வரலாற்றின் செழுமையினை இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் ஓலைச்சுவடிகளிலும் கட்டிடங்களிலும் பதித்துச் சென்றிருப்பதும் இன்று எம் வரலாற்றை அறியவும் அதன் தனித்துவங்களையும் மேலும் பிற சமுகங்களிலிருந்து கொண்டவற்றையும் கொடுத்தவற்றையும் கண்டறியவும் வழிசமைத்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் கிழக்குப்பிரதேசம் மானிடவியலாளர்களின் ஓர் ஆய்வுச்சுரங்கம். அதனைத் தவிர்த்து இலங்கையின் வரலாற்றை குறிப்பாக தமிழர் வரலாற்றை எழுதிவிட் முடியாது. இங்கு காலத்திற்குக்காலம் வந்தேறிய இந்திய குடிகளும் பட்டாணிகளும் மேலைநாட்டவரும் கிழக்கின் பூர்வீக குடிகளுடன் பண்பாட்டாலும் இனக்கலப்பினாலும் விட்டுச் சென்ற தொன்மங்கள் இன்றுவரை இனங்களாகவும் மதங்களாகவும் காணப்படுகிறன .அந்தவகையில் கிழக்கு பிரதேச சமுகம் ஓர் பன்மைத்துவ பண்பாட்டைக் கொண்ட சமுகமாகும். இங்கு வாழும் சைவமக்கள் ஆகமவழிபாடுகளைப் பின்பற்றினாலும் தம் வழிபாட்டு முறைகளிலும் வாழ்வியல் நெறிகளிலும் பூர்வீக மக்களின் பண்பாடுகளை சடங்குகளாக இன்றுவரை நம்பிக்கையுடன் பேணிப்பாதுகாத்து வருவதை கண்கூடாகக்காணலாம். இங்குவாழும் வேடர்கள் எனும் பழங்குடிமக்கள் தம் வாழ்வியலில் தமக்கென குமாரத்தன் , புள்ளிக்காரன், பொல்லுக்காரன் , மாநீலி, குடாநீலி, தெவுத்தன் ,மாறா , மறுமுந்தநாச்சி, எனப்பல தெய்வங்களை அவர்களுக்கான குறித்த சடங்குகளை இயற்றி பாடல்களைப்பாடி கொட்டு எனும் வாத்தியத்தை வாசித்து மிகுந்த பயபக்தியுடன் வழிபடுகின்றனர்.

மேலும் ஏனைய மக்கள் பிராமணர்களாலும் சைவக் குருக்கள்மார்களாலும் மந்திரம் ஓத ஆகம விதிக்கமைவான வழிபாடேற்கும் பிள்ளையார்,முருகன், சிவன், அம்பாள், கிருஸ்ணன் போன்ற பெருந்தெய்வங்களை வணங்கும் மக்களாக காணப்படுவதுடன் தம் பூர்வீக கிராமியத்தெய்வங்களான காளியம்மன்,கண்ணகையம்மன், மாரியம்மன் , பேச்சியம்மன், கடல்நாச்சியம்மன், திரௌபதையம்மன்.வீரமாகாளி, நரசிங்கவைரவர், நாகதம்பிரான்,வீரபத்திரர்,நாகம்மை, வாசுகியம்மன் போன்றஆகமம்சாராதசடங்குவழிபாடுஎன்னும்பத்ததி விதிமுறைக்கிணங்க நடைபெறும் வழிபாட்டினை ஏற்கும் தெய்வங்களையும் மிகுந்த பயபக்தியுடன் சடங்காற்றி வழிபடுகின்றனர்.வருடம் ஒருமுறை இம்மடாலயங்களின் கதவுகள் திறக்கப்பட்டு குறித்த மூன்று அல்லது ஐந்து நாட்கள் இச்சடங்குகள் தேவாதிகளின் ஆடலுடனும் பாடலுடனும் மந்திர உச்சாடனங்களுடனும் நடைபெறும். அக்காலங்களில் அவ் ஊரே கோலாகலமாகக் காட்சியளிக்கும். எங்கும் சடங்குப்பாடல்கள் கேட்டவண்ணம் இருக்கும் .அக்காலங்களில் அம்மக்களின் நடைமுறை வாழ்க்கையின் அனைத்து விடையங்களும் சடங்கை நோக்கியதாகவே காணப்படும். இன்று காலமாற்றங்களால் சிலகோயில்கள் ஆகமமுறைக்கேற்ப தினப்பூசைகள் நடைபெறும் கோயில்களாக காணப்பட்டாலும் குறித்த காலங்களில் அவற்றிற்கான சடங்குகளும் நடைபெறக்காணலாம்.

இந்தகைய பண்பாட்டினைக் அடிப்படையாகக் கொண்ட மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆரையம்பதி என்னும் ஊர் ஏராளமான கோயில்களை தன்னகத்தே கொண்டது. இவ்வூரில் பிறந்து வளர்ந்த திரு.மூ.அருளம்பலம் அவர்கள் தன் இயல்பான நற்குணாம்சங்களாலும் இறைபக்தியினாலும் இவ்விருவழிபாடுகளிலும் தன்னை இணைத்துக்கொண்டவர். அவரது பல்திறப்பட்ஆளுமைகள் கிராமியக் கலைகளிலும் இலக்கியங்களிலும் பரிணமித்தன. சடங்கு வழிபாட்டினைப் பிரதான வழிபாடாகக் கொண்ட இம்மக்களிடையே காணப்படும் பக்தி இலக்கியங்கள் பலவும் அக் கோயில்களின் வரலாறு கூறும் நூல்களாகவும் அத்தெய்வங்களின் மேல் பாடப்பட்ட பாடல்களாகவும் காணப்படுகின்றன. இவை பெருந்தெய்வக்கோயில்கள், அவற்றின் தெய்வங்கள் , சடங்குவழிபாட்டை ஏற்கும் கிராமியத் தெய்வங்கள் எனப் பலதிறப்பட்டன. இங்குதான் திரு மூ.அருளம்பலம் அவர்களின் பக்தி இலக்கியங்கள் விதந்துரைக்கப்படுகின்றன. இவரது பக்திசார்ந்த படைப்புக்கள் ஏராளம். அவை கட்டுரைகள், நாடகப்பிரதிகள் , கூத்துப்பிரதிகள், வில்லுப்பாட்டுக்கள், பக்திப்பாடல்கள் என பல துறைப்பட்டன. அந்தவகையில் இவரது படைப்புக்களில் பெரும்பகுதியாக காணப்படுபவை இறையின்பம் பயக்கும் பக்திப் பாடல்களாகும்.

அவர்களது பக்தி இலக்கிய வெளியீடுகளை நாம் மூன்று பெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம். ஒன்று எழுத்துருப்பெற்று ஆற்றுகை செய்யப்பட்ட இலக்கிய வகை .மற்றயவை எழுத்துருப் பெற்ற பக்திப் பாக்கள். ஏனையவை இசை இறுவட்டுக்கள்.அந்தவகையில் ஆற்றுகை செய்யப்பட்ட இலக்கிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவங்களில் அவர் 20 வில்லுப்பாட்டுக்களை இயற்றி பயிற்றுவித்திருக்கிறார்.அவற்றுள் சித்திரபுத்திரர் (1987), இளையான்குடிமாறநாயனார்(2013), போன்றவை பக்திசார்ந்தன. அவர் இயற்றிய 20 நாடகங்களுள் "குந்தியின் வரம்"(1981) , "திருநாவுக்கரசர்" (1986) , "ஊர்வசி பெற்ற சாபம்"(1998) "குந்தியின் மடியில்" (1994),இறைநம்பிக்கை"(2004) ,போன்றன இதிகாச ,புராண நாடகங்களாகும். அவர் எழுதி ஆற்றுகைசெய்த 26 வடமோடி ,தென்மோடிக் கூத்துக்களில் பலவும் பக்தி சார்ந்தவை . இவை ஒருவகை .

மேலும் அவர் எழுதியுள்ளபக்தி சார்ந்த நூல்கள் இன்னெருவகை. அவர் பல பக்திப் பாடல்களை நூல்களாக வெளியிட்டிருக்கின்றார். அவற்றுள் " ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயம் சிதானந்த த்போவனம் ஸ்தாபகர் ஓம்காரானந்த சரஸ்வதி சரிதம்" (2010) . " பேச்சியம்மன் அவதாரம் ஆலயமும்" (2012) என்பவை சரித்திரம் கூறும் நூலல்களாகவும் "கிராமத்து உள்ளங்கள்" (2013) என்னும் நூல் நாட்டார் இலக்கியமாகவும் காணப்படுகின்றது. மேலும் சிவநேசனார் ஆலயம் (1992- காவடி, ஊஞ்சல்), "செல்வாநகர் சிவன்மேல் காவடிப் பாட்டு" (1992) ஆரையம்பதி பேச்சியம்மாள்(1993) காவடி, கும்மி, தாலாடடு, கரகம், காவியம்), செல்வாநகர் காளிகோயில் (1995- தாலாட்டு, கும்மி, ஆக்கப்பாடல்கள்), வம்மிக்கேணி மாரியம்மாள் (1996- காவடி, கரகம். தாலாட்டு, ஆக்கப்பாடல்கள்), கோளாவில் மாரியம்மன் கோயில் (1997- காவடி, கும்மி, ஆக்கப்பாடல்கள்),கல்லடி உப்போடை பேய்ச்சியம்மாள் பாடல்கள் (2001), கல்லடி திருச்செந்தூர் முருகன் (கும்மி. காவடி, பக்திப்பாடல்கள், திருப் பள்ளியெழுச்சி) ஆகிய புத்தகங்களையும் வெளியிட்டார். மேலும் கல்லடி உப்போடை பேச்சியம்பாள்(2001- காவடி, கும்மி, தாலாட்டு, பக்திப்பாடல்).மட்/புதுக்குடியிருப்பு கற்பரசி கண்ணகி அம்பாள் பாடல்கள் (2002) ,) மஞ்சந் தொடுவாய் வீரபத்திரர் காவியம் (2002), ஆலயடி வீரபத்திரர் காவியம் (2003) திமிலதீவு கிறிஸ்ணர் (2004- காவடி, ஆக்கப்பாடலக்ள்), ,புன்னைச் சோலைக்காளி(2006- காவடி, கும்மி, ஆக்கப்பாடல்கள்,பக்தி பாடல்கள்), புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் பாடல்கள் (2006), ஆனைப்பந்தி பிள்ளையார் (2008- காவடிப் பாடல்கள்), ,கல்லடி உப்போடை நொச்சிமுனை ஸ்ரீ சித்திவினாயகர் ஸ்ரீ பேச்சியம்மன் பாடல்கள்( 2010,கல்லடி உப்போடை பேச்சியம்மாள் பாடல்கள் (2010) என ஏராளமான பக்திப் பாக்களை எழுதியுள்ளார்.

அவரது பெரும் பக்தி இலக்கியமாகக் கொள்ளப்படுவது "இறையின்பப் பாவாரம்" ஆகும். 714 பக்கங்களையுடைய மிகப்பெரும் கவிதை நூல் என்ற பெருமையைப் பெறுகிறது. மொத்தம் 3010 பாடல்களைக் கொண்ட இந்நூலே ஈழத்தின் பக்திப் பாடல் வரிசையில் மிகப்பெரிய நூலாகும். பக்திப் பாடல்கள், பஜனைப் பாடல்கள், ஊஞ்சற் பாடல்ள், தெம்மாங்குப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், கும்மிப்பாடல்கள்,காவடிப்பாடல்கள்,காவியம் , திருபப்ள்ளியெழுச்சி பாடல்கள் என பல வகைக் கிராமியப் பாடல்களை இந்நூல் கொண்டாமைந்துள்ளது. இவை கிழக்குமாகாணத்திலே கோவில் கொண்டு அருள் பாலித்துவரும் விநாயகர், சிவன், முருகன், விஷ்ணு, வைரவர், வீரபத்திரர், அனுமன், நரசிங்கர், நாகலிங்கேஸ்வரர் ஆகிய ஆண் தெய்வங்களின் மீதும் கண்ணகை, பேச்சி, மாரி, காளி, கடலாச்சி, காமாட்சி ஆகிய பெண் தெய்வங்களின் மீதும் பாடப்பட்டுள்ளன. இப் பாடல்களைத் தங்கள் ஆலய வரலாறு .தெய்வ முகூர்த்தங்களின் அவதாரம், அற்புதம். பூசை சடங்கு முறைகள், ஆலய அமைவிடங்கள் என்பவற்றை வைத்து அமைத்து தரும்படி அவ்வவ் ஆலய பரிபாலன சபைகள், ஊரவர், பக்த அன்பர்கள் கேட்டுகொண்டதற்கு அமையவே பாடல்கள் எழுத்துருப் பெற்றன. இப் பாடல்கள் ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பதில் இருந்து இரண்டாயிரத்து பதினாறு வரை இயற்றபட்ட பாடல்களின் தொகுப்பாகும். பெரும்பாலும் ஒவ்வொரு பாடல்களின் கீழும் அப் பாடல்கள் ஆக்கப்பட்ட ஆண்டு, மாதம், திகதி குறிப்பிடப்பட்டுள்ளன. அக்காலங்களில் நடைபெற்ற சமகால சம்பவங்களும் பல பாடல்களில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பது எதிர்கால சந்ததியினர் காலக் கண்ணாடியில் உண்மைகளை கண்டறிவதற்காகும்.

விநாயகர் துதியுடன் ஆரம்பித்து தொடர்ந்து நாமகள் துதி பாடி தனது தாய்க்கு அந்நூலை சமர்ப்பணம் செய்கிறார். தொடர்ந்து விநாயகர் மீது 28


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்மிப்பாடல்களைப் பாடி தன் கும்மிப் பாடலை ஆரம்பிக்கிறார். இதனை விநாயகரது பிரதாபங்களை கூறி வேண்டி ஒரு காப்புக் கும்மியாக பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.அவரது கும்மிப்பாடல்கள் மாமாங்கப் பிள்ளையார் ,களுதாவளைப்பிள்ளையார், கல்லடி உப்போடை சித்திவிநாயகர் ,கொக்கட்டிச்சோலை தான்றோன்றீஸ்வரர்,திருமலை திருக்கோணேஸ்வரர், சித்தாண்டி சித்திரவேலாயுதர், ஆரைநகர் கந்தன். தாந்தாமலை முருகன். ஈழத்து திருச்செந்தூர் முருகன் ,தில்லை மண்டூர் முருகன். ஆரைநகர் விஸ்ணு. தாழங்குடா நிசப்த ஸ்ரீ கிருஸ்ணன், ஐயப்பன், முனைக்காடு ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர், ஆரைநகர் கண்ணகியம்பாள் (இரு கும்மிப்பாடல்கள்) செட்டிபாளையம் கண்ணகியம்பாள், புதுக்குடியிருப்பு கண்ணகியம்பாள் , மகிழடித்தீவு கண்ணகியம்பாள் , ஆரைநகர் பேச்சியம்பாள் கல்லடி உப்போடை பேச்சியம்பாள் , ஆரைநகர் வம்மிக்கேணி முத்துமாரி , கோளாவில் முத்துமாரி , நாவற்குடா ஸ்ரீ மாரி , ஆரைநகர் செங்குந்தார் வீதி முத்துமாரி , காளியம்பாள் , செல்வநகர் பத்திரகாளி , ஆரைநகர் பத்திரகாளி , திருகோணமலை பத்திரகாளி , வேலூர் பத்திரகாளி , புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளி பெரிய போரதீவு பத்திரகாளி ,ஏற்றம் புல்லுமலை நாக கன்னி , மயிலம்பாவெளி ஸ்ரீ காமாட்சி , போன்ற கோயில்களிலும் மடாலயங்களிலும் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் தெய்வங்கள் மீது இயற்றிப்பாடியிருக்கின்றார். இக் கும்மிப்பாடல்களை மட்டக்களப்பில் இவரால் இயற்றப்பட்ட கும்மிப்பாடல்களின் பாரம்பரிய தருவான

தானினத் தானினத் தானானத் - தன
தானினத் தானினத் தானானம்
தானினத் தானினத் தானானத் - தன
தானினத் தானினத் தானானம்

என்னும் தருவுக்கமைவாக இயற்றியிருக்கின்றார். இத்தருவினை சில பாடல்களின் முன்னே குறிப்பிட்டுள்ளார். மேலும் ஒவ்வொரு கும்மிகளும் ஏறத்தாழ 20 பாடல்களிலிருந்து 66 பாடல்களைக் கொண்டதாகக் காணப்படுவதோடு காப்புப் பாடலுடன் ஆரம்பிப்பது சிறப்பு.

இறைபக்தி விஞ்சிடும் இறைப்பாக்கள் அடங்கிய அருள் அவர்களின் காவடிப்பாடல்கள் மிகச் சிறப்பானவை .விநாயகர் (13 பாடல்கள்) . ஆனைப்பந்தி சித்திவிநாயகர் ( 32 பாடல்கள்) ,ஆரையம்பதி அரசடிப்பிள்ளையார் (16 பாடல்கள்), நாவற்குடா கண்காணிப் பிள்ளையார் (27 பாடல்கள்) . கல்லடி உப்போடை ஸ்ரீ சித்தி விநாயகர்( 25 பாடல்கள் ) சிவன் (24 பாடல்கள் ), கந்தன் (29 பாடல்கள் ) ஈழத்து திருச்செந்தூர் (14 பாடல்கள் ) .தில்லை மண்டூர் முருகன் (21 பாடல்கள் .ஆரைநகர் ஐயப்பன் (21 பாடல்கள்) ,கண்ணன் (29 பாடல்கள் ) ,முனைக்காடு நாகலிங்கேஸ்வரர் ( 23 பாடல்கள் ) , கண்ணகை அம்பாள் (37 பாடல்கள் ), புதுக்குடியிருப்பு கண்ணகை அம்பாள் (29 பாடல்கள் ) , ஆரைநகர் பேச்சியம்மன் ( 24 படல்கள் ) ,கல்லடி பேச்சியம்மன் (28 பாடல்கள் ) ,கோளாவில் முத்துமாரி ( 20 பாடல்கள் ) , வம்மிக்கேணி முத்துமாரி (13 பாடல்கள் ) ,நாவற்குடா ஸ்ரீ மாரி ( 27 பாடல்கள் ) ,பட பத்திரகாளி (26 பாடல்கள் ) ,வேலூர் பத்திரகாளி ( 31 பாடல்கள் ) ,புன்னைச்சோலைக் காளி (22 பாடல்கள் ),போரதீவு பத்திரகாளி (22 பாடல்கள் ) , ஸ்ரீ காமாட்சி அம்பாள் ( 30 பாடல்கள் ) என அவருடைய காவடிப் பாடல்கள் காணப்படுகின்றன. அத்தனை பாடல்களும் எட்டு அடிகளைக் கொண்ட நடைக்காவடி அமைப்பில் மட்டக்களப்பில் பயில் நிலையிலுள்ள களுகுமலைப் பத்தின் இசைக்கமைவாகவே காணப்படுகின்றன. இப்பாடல்களில் வரும் சில சொற்களுக்கான ஒத்த சொற்களையும் இவற்றின்பின் 335 ஆம் பக்கத்தில் கொடுத்திருக்கின்றார் . ஒட்டாரம் - பிடிவாதம் , ஊதவனம் -கடல் , குறுகலர் - பகைவர் . குச்சிதம் - இழிவு , கெழுவுடை - நட்பு , கெழுதகை உரிமை , கேசரர் - கந்தருபர் , கையர் - வஞ்சகர் போன்ற 28 சொற்களுக்கான ஒத்த விளக்கச் சொல்லினைத் தந்தள்ளமை பாடல்களை மேலும் புரிந்துகொள்ள இலகுவாக உள்ளது. மேலும் இவை பெருந்தெய்வங்களின்மீதும் கிராமியத் தெய்வங்களின் மீதும் பாடப்பட்டுள்ளமை காவடி எடுத்தல் என்பது இங்கு இரு வழிபாட்டிற்கும் பொதுவானதென்பதைக் குறிக்கின்றது.

கிழக்குப்பிரதேசத்தில் சடங்கு வழிபாட்டின் பிரதான இசைவடிவம் தாலாட்டு . அருள் அவர்கள் தன் இறையின்பப் பாவாரத்தில் கண்ணகையம்மன் (53 ஈரடிப்பாடல் ) .புதுக்குடியிருப்புக் கண்ணகையம்மன் (34 நான்கடிப்பாடல் ) , பேச்சியம்மன் தாலாட்டு (33 ஈரடிப்பாடல்), ஆரைநகர்பேச்சியம்மன்(32ஈரடிப்பாடல்) . கல்லடி உப்போடை பேச்சியம்மன் ( 31


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கடிப் பாடல் ) , ஆரைநகர் வம்மிக்கேணி மாரியம்மன் ( 44 ஈரடிப்பாடல்கள் ) , காளியம்மன் தாலாட்டு ( 33 ஈரடிப்பாடல் ) . புன்னைச்சோலை காளி (28 நான்கடிப் பாடல் ) புல்லுமலை அன்னையர்கள் தாலாட்டு ( நாக கன்னித் தாயார் மீது 12 பாடல்கள் , காளிகாம்பாமீது 5 பாடல்கள் , மாரியம்மன்மீது 5 பாடல்கள் , பேச்சியம்மன்மீது 10 பாடல்கள் என அனைத்தும் நான்கடிப்பாடல்கள் ) இவ்வாறு கிராமியத் தெய்வங்களின்மீது தாலாட்டுப்பாடல்களை பாடியுள்ளார் .

கிழக்கிலங்கையின் கிராமியத் தெய்வ வழிபாட்டில் இன்றியமையாதது காவியம். இவ்விசை வடிவமே அனைத்துத் தெய்வங்கள் மீதும் பாடட்பட்ட இசைவடிவமாகும் .அதுமட்டுமன்றி ஓரே தருவினையும் மெட்டினையும் உடையது. அருள் அவர்களும் இம்மரபிலிருந்து வழுவாது தன் காவியப் பாடல்களைப் படைத்திருக்கின்றார் . பைரவர் காவியம் (12 பாடல்கள்),மஞ்சந்தொடுவாய் வீரபத்திரர் (10 பாடல்கள்),நரசிங்கருபன் (11 பாடல்கள்),ஆஞ்சநேயர் (11 பாடல்கள்) , முனைக்காடு நாகலிங்கேஸ்வரர் (11 பாடல்கள்) , ஆரைநகர் கண்ணகை அம்பாள் (11 பாடல்கள்) , பேச்சியம்பாள் (11 பாடல்கள்) , நாவலடி கடலாட்சி ( 13 பாடல்கள்) , ஆரைநகர் படபத்திரகாளி (17 பாடல்கள்) , ஏற்றம் புல்லுமலை நாககன்னி (12 பாடல்கள்) , மாவிலங்கத்துறை ஸ்ரீ காமாட்சி அம்மாள் (12 பாடல்கள் ) என இவரது இறையின்பக் காவியங்கள் அமைந்திருக்கின்றன. இவை

தந்தனத னாதனத னாதனத னானா
தனதான னாதந்த னாதந்த னானா
தந்தனத னாதனத னாதனத னானா
தனதான னாதந்த னாதந்த னானா
என்னும் தருவில் மரபு மாறாது அமைந்திருக்கின்றன.

அருள் அவர்களது இந்நூலில் பேச்சியம்மன் மீதும் முத்துமாரியம்மன் மீதும் இரு கரகப்பாடல்கள் உள்ளன. இரண்டும் வெவ்வேறு மெட்டுக்களில் அமைந்துள்ளன. அருள் அவர்கள் தம் இறையின்பப்பாவாரம் நூலில் ஆரையம்பதி எள்ளுச்சேனை ஸ்ரீ சித்திவிநாயகர் மீதும் செல்வாநகர் சிவனேஸ்வரர் மீதும் ஊஞ்சலப் பாடல்களை பாடியுள்ளார். இவரது ஊஞ்சல் பாடல்கள் காப்புடன் ஆரம்பித்து 11 ஊஞ்சல் பாடல்களின் பின் வாழி பாடி தொடர்ந்து எச்சரிக்கை , பாராக்கு , லாலி எனும் இசைவடிவங்கள் முறையே அமைந்து மங்களத்தில் முடிவுறுகிறது . இவற்றில்

" மூலவனாய் வீற்றிருக்கும்விநாயகர் வாழி
முதற்பொருளாய் காத்திருக்கும் அகுந்தனும் வாழி"
என வருகிறது

தொடர்ந்து

"அரனாரின் புதல்வா ஐங்கரனெ எச்சரிக்கை
கருடவாகனன் மருகா கணபதியே எச்சரிக்கை
ஆதிசிவ காமியம்மை பாலா எச்சிக்கை
ஆரைநகரமர்ந்த ஆனை முகவா எச்சரிக்கை"
என எச்சரிக்கைப் பாடலும்

" ஆதிசிவன் மைந்தா ஆனைமுகவா பராக்கு
ஆரைநகர் தன்னிலுறை ஐங்கரனே பராக்கு
வாமி சிவகாமி யருள்மைந்தா பராக்கு
பாவ விமேசனமுடை பகவா பராக்கு என
பராக்குப்பாடலும் தொடர்ந்து

ஆரைநகர் லாலி ஆறுமுகவா லாலி
பூதகணம் சூழுகின்ற சித்தி புத்திபாலா லாலி லாலி
என லாலிப்பாடலும் பாடி மங்களத்துடன் முடிவுறுகிறது.

மேலும் பக்தி இலக்கியப் பாடல் வகையில் திருப்பள்ளியெழுச்சி ஓர் வகை . தெய்வத்தை புலரும்பொழுதில் சயனத்திவிருந்து எழும்புமாறு வேண்டிப் பாடும் பாடல்களாகும். இதனை முதன்முதலில் மணிக்கவாசகரின் திருவாசகத்தில் காணலாம் அவை " போற்றியென் வாழ்முதலாகிய பொருளே" என்று தொடங்கி நான்கு சீர்கள், எட்டடிகள் கொண்ட பத்துப் பாடல்களைக் கொண்டுள்ளது. அப்பாடல்கள் ஒவ்வொன்றும் "எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே" என முடிவுறுகிறது . அந்தவகையில் அருள் அவர்கள் மூன்று திருப்பள்ளியெழுச்சிகளை இயற்றியிருக்கிறார். ஆரையம்பதி எள்ளுச்சேனை ஸ்ரீ சித்தி விநாயகர் , ஈழத்து திருச்செந்தூர் முருகன் .நிசப்த ஸ்ரீ கிருஸ்ணன் ஆகிய தெய்வங்களின்மேல் பாடப்பட்ட இவரது பள்ளியெழுச்சிகள் பெரும்பாலும் அத்தெய்வத்தின் வரலாற்றையும் சூழலையும் பிரதாபங்களையும் கூறி இறைவனைத் துயில் எழுப்புவதாக காணப்படுகிறது .

"ஓமெனும் மந்திர மோதின ரொருபால்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாவாரம் பாடிப் பணிந்தன ரொருபால்
பூ மல ராரம் புனைந்தன ரொருபால்
புகழ் பாடிப் பண்ணிசைத்தன ரொருபால்
தேவர்கள் வாழ்த்தொலி தொனித்தன வொருபால்
ஆராதித் தக முருகின ரொருபால்
ஆலயத் தமர்ந்தரு ளாரைநகர்ப் பதியோய்
ஆனை முகனே பள்ளி யெழுந்தருளாயே"

இவ்வாறு " இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்" என்னும் திருவாசகத்தினை ஒத்த அந்தியப் பிராசங்களுடன் அமைந்துள்ளமை சிறப்பு.

மேலும் ஏராளமான பக்திப் பாசுரங்கள் , பஜனைப் பாடல்கள் , ஆக்கப்பாடல்கள் போன்றவற்றை இறையின்பப் பாவாரத்திற் காணவாம் . சில தருக்களுடன் காணப்படுகின்றன . சில பாடல்கள் தொகையறாவுடன் ஆரம்பித்து பல்லவி ,அனுபல்லவி, சரணம் என கீர்த்தனை அமைப்பில் காணப்படுகின்றன . அவற்றில் சிலவற்றிற்கு சுருட்டி , மோகனம் , ரஞ்சனி என ராகங்களையும் குறிப்பிட்டிருக்கின்றார். அந்தவகையில் இவர் நாட்டார் இசை வடிவங்களில் மட்டுமல்ல கர்நாடக இசையிலும் பரிச்சய முடையவராக தெரிகின்றார்.

இவரது பாடல்கள் அடங்கிய மேலும் ஒரு நூலை 2022 இல் வெளியிட்டிருக்கின்றார் . "பத்தாலயப் பாவாரங்கள் என்னும் இந் நூல் மட்டக்களப்பு மாவட்டத்தின் வெவ்வேறு பிரதேச செயலாளர் பிரிவுகளில் கோயில் கொண்டெழுந்தருளிய தெய்வத்தின்சிறப்புக்கள் ,அக்கோயில் வரலாறு , சடங்கு ,வழிபாட்டுமுறைகள் போன்றவற்றை உள்நின்றுருகிப் பாடியிருக்கின்றார். பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயம், ஆரையம்பதி கடற்கரை நரசிங்கர் ஆலயம், இருதயபுரம் மேற்கு வாசுகியம்மாள் ஆலயம் , பருத்திச்சேனை மீனாட்சி அம்பாள் ஆலயம், முனைக்காடு முத்துமாரி அம்பாள் ,முனைக்காடு வீரபத்திர் ஆலயம் ,மஞ்சந்தொடுவாய் ஆலடி விநாயகர் கண்ணகை ஆஞ்சநேயர் ஆலயம், குமாரத்தன் ஆலயம், கொல்லைநுலை பேச்சியம்மன் ஆலயம், விளாவட்டுவான் வீரமாகாளி ஆலயம் ஆகிய பத்து ஆலயங்கள் மீது அவர் இயற்றிய பாடல்களே பத்தாலயப் பாவாரங்கள் என்னும் பக்தி இலக்கியமாகும் . இந்நூலிலும் கும்மி, காவியம் , காவடி ,தாலாட்டு , பஜனை , போற்றி , அர்ச்சனை போன்ற இசைவடிவங்களே காணப்படுகின்றன .

அருள் அவர்களது பக்திபாக்கள் பக்திப்பெருக்கு நிறைந்தவையாக மக்களுக்கு பக்தி உணர்வை ஊட்டுவதுடன் அவை சமகாலப் பிரச்சனைகளையும் பேசுகிறது. .

வெள்ளையர் ஆட்சியை ஒருங்கிணைத்தார் -கள்ள
உள்ளத்தார் உரிமை தர மறுத்தார்
எல்லைகளை பறித்து இடரிழைத்து
தொல்லைகள் செய்கின்றார் வல்லவளே

( இ.இ.பா பக் 135)

என சமகால இனமுரண்பாடுகளைப் பேசுகிறது .

நிலவின் ஒழியிலே பேதமுன்டோ? - பூக்கும்
மலரதன் மணத்திலே சாதியுன்டோ? காற்று
மழையில் மத மமதையுண்டோ? -ஏற்க
எண்ணாத நெஞ்சங்கள் நஞ்சு தாயே

( இ.இ.பா. பக்- 134)

என்னும் பாடலிலும் மேலும்

இரண்டல்ல ஒன்றே நாமென்று எடுத்துரைக்க
இப்புவியில் எத்தனையொ உவமானம் வைத்தாய்
உப்பு நீரில் கரைந்தால் உப்புவேறோ? நீரும் வேறோ?
தப்பிதம் கற்பிப்போரே சாதி சமயம்
பிறப்பிலுண்டோ?

(இ.இ.பா பக்- 284)

ஏந்து செல்வ நாடு சென்று நிதியீட்டினாலும்
வேந்தர்முதல் மாந்தர்வரை பிறப்பிலொன்றேயென்று..

( இ.இ.பா.-பக்- 285)

என சமநீதி பேசி சாதிக் கொடுமைக்கு எதிராக கேள்வி தொடுக்கிறார். அதனை இறைவியிடம் முறையிடுகிறார்.

இவரது பாடல்கள் நமது சமுகம்சார்ந்த வழிபாட்டு முறைகள் , சடங்கு முறைகள் , தெய்வங்களின் பால் நிகழ்ந்த அதிசயங்கள் வரலாறுகள், சமுக நம்பிக்கைகள் , பண்பாடுகள் ,கலைகள் , வழக்காறுகள், என்னவற்றை பதிவு செய்கின்றன . அவை வரும் காலத்திற்கான இந்த சமுகத்தின் செய்தியாகும்.

மட்டுநகரின் கிராமங்களது இயற்கை எழிலை ஆங்காங்கு கூறி மகிழ்கிறார் " " கார்பொழி மஞ்சு கொஞ்சு மஞ்சந்தெடுவாய்" , "வங்கக் கடல் ஒலிக்கும் கிழக்கே" "மட்டு வாவி மீனினமிசைக்கும் மேற்கே" " தேனூறும் தேற்றாத்தீவு" . இவ்வாறு பல இடங்களில் காணலாம். இலங்கையில் நடந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனக்கலவரங்கள் , அழிவுகள் ,சூறாவளி , ஆழிப்பேரலையால் வந்த அழிவுகள் போன்றவற்றையும் இப் பாடல்களில் ஆங்காங்கு பதிவு செய்திருப்பதைக் காணலாம். இவரது கண்ணகையம்மன் பாடல்கள் ஈழமக்களின் பார்வையில் கண்ணகியம்மனின் முக்கியத்துவம் பற்றியும் வரலாறுபற்றியும் கூறுகிறது . கிழக்குப் பிரதேசத்தின் சடங்கு வழிபாட்டில் முக்கியம் பெறும் பாடல்களின் தொகுப்பு அடங்கிய சீமான் கணபதிப்பிள்ளை அவர்கள் ஏடுகளிலிருந்து தேடித்தொகுத்தளித்த "மகாமாரித்தேவி திவ்யகரணி" என்னும் தொகுப்பு நூல்களிலுள்ள காவியம் போன்ற பாடல்களை தனது காவிய அமைப்பிலும் மரபுமாறாது பேணியிருப்பதுடன் பல பாடல்களில் தனித்தும் வேறுபட்டும் தன்னைப் பதிவு செய்திருக்கிறார் . இவ்வாறு அருள் அவர்களது நூல் வடிவில் காணப்படும் பக்தி இலக்கியங்களின் சிறப்புக்கள் காலத்தால் அழியா நம் கிழக்குப் பிரதேசத்து மக்களது பண்பாட்டின் பொக்கிஷங்கள் எனலாம்.

ஆரையூர் .மூ.அருளம்பலம் அவர்களின் இன்னுமொரு பரிணாமத்தின் தோற்றம் ஒலிப்பேழைகள். அவரது இறையிசைப் பாக்கள் அடங்கிய ஒலிப்பதிவுகளாகும். அவற்றுள் ஆரம்பகாலத்தில் ஒலிநாடாக்களாகவும் ஏனையவை இறுவட்டுக்களாகவும் வெளிவந்துள்ளன. அவை இறையின்பப் பாவாரம் , பத்தாலய பாவாரங்கள் ஆகிய அவரது நூலிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாடல்களாகும் . இவரது கலை முயற்சியானது தனியே பாடல்கள் எழுதுவதோடு நில்லாது ஒலிப்பேழை (இறுவட்டு) வெளியிடுதல் வரை சென்றிருக்கின்றது.அவரது பாடல்கள் அடங்கிய மொத்தம் 30 ஒலிப்பேளைகள் இதுவரை வெளிவந்துள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்திலே அதிக ஒலிப்பேழைகளுக்கு வரியெழுதி வெளியிட்ட பெருமையை ஆரையூர் அருள் பெற்றுக் கொண்டதனால் கலைப்பணியுடன் இம் மண்ணையும் இவர் பெருமைப்படுத்துகிறார்.

வெளியிட்டுள்ள ஒலிபபேழைகள் (குறுந்தகடுகள்)

1.1992ம் ஆண்டு மட்/ஆரையம்பதி சிவனேஸ்வரர் ஆலயம் (காவடி, ஊஞ்சல்)

2.1993ம் ஆண்டு மட்/ஆரையம்பதி கண்ணி அம்மாள ஆலயம் (கும்மி, தாலாட்டு, பக்திப்பாடல்கள்)

3.1994ம் ஆண்டு மட்/ஆரையம்பதி பேச்சியம்மாள் ஆலயம் (காவடி, கும்மி, தாலாட்டு, கரகம், காவியம்)

4.1995ம் ஆண்டு மட்/ஆரையம்பதி செல்வநாகர் காளி கோயில் (தாலாட்டு, கும்மி, ஆக்கப்பாடல்கள்)

5.1996ம் ஆண்டு மட்/ஆரையம்பதி வம்மிக்கேணி மாரி அம்பாள் ஆலயம் (கரகம், காவடி, தாலாட்டு, ஆக்கப்பாடல)

6.1997ம் ஆண்டு மட்/கோளாவில் மாரியம்மாள் ஆலயம் (கரகம், காவடி, தாலாட்டு, ஆக்கப்பாடல்)

7.2001ம் ஆண்டு மட்/ஆரையம்பதி வடபத்திர காளி கோயில் (புதிய ஆக்கப்பாடல், காவியம்)

8.2001ம் ஆண்டு மட்/கல்லடி உப்போடை பேச்சியம்மாள் ஆலயம் (கும்மி, காவடி, தாலாட்டு, ஆக்கப்பாடல)

9.2002ம் ஆண்டு மட் /புதுக்குடியிருப்பு கண்ணகி அம்மாள் ஆலயம் (கும்மி, தாலாட்டு, பக்திப்பாடல்கள்)

10.2002ம் ஆண்டு மட் /மஞ்சந்தொடுவாய் வீரபத்திரர் காவியம்

11.2003ம் ஆண்டு மட் /ஆரையம்பதி ஆலயடி ஆதி வைரவர்

12.2004ம் ஆண்டு மட் /திமிலதீவு கிருஸ்ணர் ஆலயம் (காவடி, ஆக்கப்பாடல்கள்)

13.2005ம் ஆண்டு மட் /ஆரையம்பதி கண்ணகி அம்பாள் ஆலயம் (கூறைதாலிப் பாடல்கள்)

14.2006ம் ஆண்டு மட் /புன்னைச் சோலைக் காளி கோயில் (காவடி, தாலாட்டு, ஆக்கப்பாடல்கள், பக்திப்பாடல்கள்)

15.2008ம் ஆண்டு மட் (காவடிப்பாடல்கள்) ஆனைப்பந்தி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்

16. 2010ம் ஆண்டு மட்/கல்லடி உப்போடை பேச்சியம்மாள் ஆலயம் (பக்திப்பாடல்கள் - 13)

17.2011ம் ஆண்டு மட்/நாவற்குடா ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம் (காவடி, கும்மி, பக்திப்பாடல்கள்)

18.2012ம் ஆண்டு மட்/ஆரையம்பதி ஸ்ரீ கந்தசாமி ஆலயம் ( காவடி, கும்மி, பக்திப்பாடல்கள்)

19.2013ம் ஆண்டு மட்/ஆரையம்பதி கண்ணகி அம்பாள் "சிலம்புச் செல்வி" (காவடி, கும்மி, பக்திப்பாடல்கள்)

20.2013ம் ஆண்டு (மட் /ஆரையம்பதி வடபத்திரகாளி ஆலயம் "வடபத்திரகாளிகாம்பா"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21.2014ம் ஆண்டு மட்/புல்லுமலை ஸ்ரீ நாககன்னி ஆலயம் "நாககன்னி"
22.2014ம் ஆண்டு மட் /ஆரையம்பதி ஸ்ரீ பரமநயினார் ஆலயம் "ஸ்ரீ பரமநயினார்" (ஐயனார்)
23.2015ம் மட்/முனைக்காடு ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலயம் "ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் பாமாலை"
24.2016ம் ஆண்டு மட்/மகிழடித்தீவு ஸ்ரீ கண்ணகையம்மாள்
25.2018ம் ஆண்டு மட்/ஆரையம்பதி கண்ணகி அம்பாள் ஆலயம் "ஆரையூர் கண்ணகை" (காவியம், பகதிப்பாடலக்ள்).
26.கொல்லைநுலை பேச்சியம்மன் பாடல்கள்
27.ஆரைநகர் கந்தன் பாடல்கள்
28.மஞ்சந்தொடுவாய் கண்ணகையம்மன் பாடல்கள்
29.ஆரைநகர் நரசிம்மன் பாடல்கள்
30.நாவற்குடா கண்காணிப் பிள்ளையார் பாடல்கள்

ஆரையூர் மூ.அருளம்பலம் அவர்களுடைய ஒலிப்பேழைகளில் பல உள்ர் கலைஞர்கள் இசையமைத்துள்ளதுடன் சென்னையைச் சேர்ந்த சதீஸ் அவர்களும் இசையமைத்திருக்கின்றார். மேலும் நம்நாட்டு பாடகர்கள் பலர் பாடியிருப்பதோடு இந்தியக் கலைஞர்களும் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.சதீஸ், ஜனனி, ஜுட் நிரோசன் , பிரதீபன், சிவா , மோகன் , அமுதசாகரன், ஏ.செல்வக்குமார் போன்ற பலர் கும்மி ,காவியம் போன்ற பாரம்பரிய இசைமெட்டுக்களுக்கு இசை அமைப்புச் செய்ததுடன் ஏனைய பாடல்களுக்கு இசையத்துள்ளனர் . மேலும் திரு. பத்மஸ்ரீ ,அகலியா , கு. சபேஸ்காந் , சாந்தினி. தருமநாதன் ,மு.நமசிவாயம் , பு.காயத்திரி, பு.டிலக்சி, ராஜ்,சர்வேஸ்வரன், லிங்கேஸ்வரராஜா ,ஸ்ரீரம்யா , இரா.தெய்வராஜன் , கேமா , சுவா , காயத்திரி , சாயி சங்கர் ,நீரஜா , விகாஸ் , டிலாணி , சபேசன் , ரிசிகேசவன் , போன்ற இலங்கைக் கலைஞர்களும் திரு. மாணிக்கவிநாயகம் , கிருஸ்ணராஜ், மார்ட்டின், ஆனந்து, முகேஸ் , தெய்வராஜன் , உசாராஜ் , ரேணுகா , தீபா , சோபியா போன்ற தென்னிந்தியக் கலைஞர்களும் பாடிய பெருமை ஆரையூர் அருள்அவர்களைச் சாரும்.

ஆரையூர் அருள் அவர்கள் இயற்றிய சடங்கு பாடல்கள் பலவற்றிற்கு அவரே இசையமைத்துள்ளார். அவரது கண்ணகை அம்மனின் கூறைதாலிப் பாடல் . ஊஞ்சல் பாடல் என்பன புதிய இசை மெட்டில் காணப்படுகின்றன. தற்கால இலததிரனியல் சாதனங்களின் வளர்ச்சி அவரது சடங்கு பாடல்களில் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இப்பாடல்களில் நவீன வாத்தியங்களுடன் பாடப்பட்டு ஒலி,ஒளிப்பதிவுகள் செய்யப்படுகின்றன. இதனையும் ஒரு வளர்ச்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது . அந்தவகையில் அவர் இற்றைக்காகி காலத்தோடு ஒட்டிப் பயணிப்பதையும் அவதானிக்க முடிகிறது. மேலும் அவர் இன்றுவரை தன் செயற்பாடுகளில் ஓய்வொழிச்சலின்றி பயணித்துக்கொண்டே இருக்கும் செயல்வீரர் . முத்தமிழ் வித்தகன் வாழ்ந்த மண்ணில் இயல் இசை நாடகம் மூன்றிலும் குறையாப் பணியாற்றிவரும் மூ.அருளம்பலம் அவர்களுக்கு கிழக்குமண் பெரும் கடமைப் பட்டிருக்கின்றது.

வாசிக்கப்பட்டவை
1.ஆரையூர் அருளம்பலம் , இறையின்பப் பாவாரம் , 2016 ,**A.R.T.Printers** ,திருகோணமலை
2.ஆரையூர் அருளம்பலம் , பத்தாலயப் பாவாரங்கள் ,2022 ,ஸ்ரீமுருகன் இந்துமாமன்றம் வெளியீடு ,மட்டக்களப்பு
3.செல்வாநகர் சிவன்மேல் காவடிப்பாட்டு , பிரதி ,1992
4.க.நிலாணி,கலாபூஷணம் மட்டக்களப்பு ஆரையம்பதி மூ. அருளம்பலம் அவர்களின் கோயில் சடங்குப்பாடல்களில் இசை பற்றிய ஆய்வு . ஆய்வுக்கட்டுரை , 2017 , இசைத்துறை , கலைப்பீடம் , யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் .
நேர்காணல்
அருளம்பலம் .மூ , ஆரையம்பதி , வயது 75 , ஓய்வுபெற்ற அதிபர் , தேசியக் கலைஞர்
தகவல்கள்
ஒலிநாடாக்கள் ,இறுவட்டுக்கள் **You Tube** , இணையத்தளம் ,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரையூர் அருளம்பலத்தின்

# பன்முக ஆளுமைக்குக் கிடைத்த சிறப்புக்கள்

சு.சந்திரகுமார்,
முதுநிலை விரிவுரையாளர்,
நுண்கலைத்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.

கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஆரையூர் அருளம்பலம் தமது வாழ்நாள் முழுவதையும் பிரதேசத்தின் கலை பண்பாட்டு வளர்ச்சிக்கு அர்ப்பணித்த கலைஞர் ஆவார். இவர் தமது சிறுவயதில் இருந்து தமக்கான கலைப் பயணத்தைத் தமது பிரதேச வாழ்வியலினூடாக, கூத்துக் கலையினூடாக, சடங்கினூடாக முன்னெடுத்தவராவார். பாடசாலையின் அதிபராக் கடமையாற்றி, சமூகத்தின் தேவைக்கேற்ப இயங்கி வருபவர். படைப்பாற்றலும், ஆக்கத்திறனும் நிறைந்த அருளம்பலம் தமக்குரிய வெளிகளில் தமக்கான படைப்புக்களைச் சமூக நலனுக்காகவும், கலைக்காகவும், வளர்த்து வருகின்றார். இந்தநிலையில் அவரது அயராத கலை வழிப் பணிகளுக்கு வழங்கப்பட்ட விருதுகள், பட்டங்கள், பாராட்டுக்கள், கௌரவிப்புக்கள் எண்ணிலடங்காதவையாகும். இவர் அமைதியான பண்பான மனிதராகத் திகழ்பவர்.

'ஆரையூர் அருள்' எனும் புனைபெயரில் தனது கலை, இலக்கியப் பயணத்தை வெவ்வேறு துறைகளில் முன்னெடுத்தார். சமூகம், பொருளாதாரம், சமகால அரசியல் போக்குகள் முதலியவற்றை சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், வில்லுப்பாட்டு, நாடகங்கள் ஊடாக எழுதி வெவ்வேறு தளங்களில் வெளியிட்டு ஆக்கபூர்வமான தகவல்களை மக்களின் நலனுக்காக வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன், மட்டக்களப்பின் கூத்தரங்க மரபிலும் தனது இடையறாத பணியினை ஆற்றி வரும் ஆளுமையுமாவார். வடமோடி கூத்து, தென்மோடி கூத்து, வசந்தன் கூத்து, சமூகக் கூத்து போன்ற கூத்து வடிவங்களைத் தமக்கு ஏற்ப, தமது புலமைத்துவத்தைப் பயன்படுத்தி எழுதி, ஊருக்குள் அண்ணாவிமாருடன் இணைந்து பயிற்றுவித்து வருகின்றார். கூத்தரங்கின் ஆட்ட, தாளங்கள், கதைக் கட்டமைப்புக்கள், பாத்திர வார்ப்புக்கள் முதலானவற்றைச் செவ்வனே தமது எழுத்துக்களில் பிரயோகித்துள்ளமை அண்மையில் கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையினரின் பாரம்பரிய அரங்க விழா மாமாங்கத்தில் நடைபெற்ற பொழுது 31.07.2024 அன்று ஆற்றுகை செய்யப்பட்ட 'இறைவனும் புலவனும்' எனும் தென்மோடிக் கூத்து இவரால் எழுதப்பட்டது. இக் கூத்தைப் பார்த்த பொழுது அறிந்துகொள்ள முடிந்தது. ஆரையூர் மட்டக்களப்பில் முக்கியமான பன்முக ஆளுமை கொண்ட கலை வளர்ச்சிக்கான நிபுணராகக் காணப்படுகின்றார். படைப்பாற்றலும், திறனும் நிறையப் பெற்றதால் அவருக்கு பல விருதுகளும், கௌரவிப்புக்களும் வந்து குவிந்துள்ளன. வாழும் பொழுது ஓர் ஆளுமையை வாழ்த்துவதும், பாராட்டுவதும் அவரது வாழ்நாளை அதிகரிப்பதோடு, அவரைப் போல் மற்றவர்களும் உருவாகுவதற்கும் வழிப்படுத்தும்.

ஆரையூர் காலத்திற்குக் காலம் தமக்கான எழுத்துப்பணிக்காகவும், சமூகப்பணிக்காவும், கலைப்பணிக்காகவும் பல வழிகளிலும், பல நிலைகளிலும், பல விழாக்களிலும் அரசுசார்ந்த, அரசுசாராத நிறுவனங்கள், ஊரின்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கலைக்கழகங்கள் ஊடாக விருதுகள், பாராட்டுக்கள் கௌரவிப்புக்களைப் பெற்றுள்ளார். அந்த அமைப்புக்கள் இவ்வாறு ஒரு கலைஞனின், சமூகப் பணியாளனின் சேவைக்குக் கொடுத்த மதிப்பையும், சிறப்பையும், பாராட்டையும் செய்தமை அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும். அவ்வாறே ஆரையூர் அருளம்பலத்தையும் பல பிரமுகர்கள் மக்கள் முன் சிறப்புச் செய்துள்ளனர்.

ஆரையூர் அருளம்பலத்திற்குக் கிடைத்த பட்டங்களும் விருதுகளும் எமக்கு உணர்த்துவது அவர் தமது வாழ்நாளைத் தொடர்ச்சியான கலை, இலக்கிய, சமூகச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தியமையாகும். 1997ஆம் ஆண்டு அரச அதிபரால் கொடுக்கப்பட்ட சிறந்த 'கூத்துக்கலைஞர்' விருது தொடங்கி 2023ஆம் ஆண்டில் அனாமிகா பண்பாட்டு மையத்தால் 'தலைக்கோல்' விருது கொடுக்கப்பட்டது ஈறாக ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியாக ஏதோ ஒரு வகையில் அவரது திறமைக்குப் பட்டங்களும், விருதுகளும் கிடைத்துள்ளன. ஒரே ஆண்டில் அதிகமான விருதுகளைப் பெற்ற ஆண்டுகளாக 2009, 2014, 2019, 2023 ஆகியன அமைகின்றன. இதில் அரசாங்கத்தினால் தேசிய ரீதியாக வழங்கப்படும் 'கீர்த்தி ஸ்ரீ' விருது (2009), 'கலாபூசணம்' விருது (2010) ஆகியன குறிப்பிடத்தக்கன. இதற்கான மதிப்பீடு பல மட்டங்களில் நடத்தப்பெற்று, சரியான முறையில் கண்காணிக்கப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டு முறையாக இவ்விருது அரசினால் வழக்கப்படும் முதன்மை விருதுகளாகும். இவருக்கு கலாசார அமைச்சால் தேசிய கலைஞர் விருதும் 2019ஆம் ஆண்டு கிடைத்துள்ளது உள்ளூர் மட்டம் தொடங்கி, பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய ரீதியாக விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்ற முதுசமாக ஆரையூர் அருளம்பலம் திகழ்கின்றார். இவரது விருதுகளின் வகைகளைப் பார்த்து உண்மையலேயே மகிழ்ச்சியளிக்கின்றது கலைஞர், கலைச்செம்மால், கவியரசர், பல்கலைமாணி, கலைமுத்து, பல்கலைவித்தகர், இலக்கிய வேந்தர், மரபுக்கலை மன்னன் போன்ற குறிப்பிடத்தக்க விருதுகளாக அமைகிறன. இதனை நோக்கும் பொழுது, அருளம்பலம் கலையால் வாழ்த்தப்படும் நிபுணராக வெளிப்படுகின்றார். சமூக சேவைக்காக இறைஞான தேசிகர், இறைகவிமாமணி, சமூக தீபம், செம்மொழிப் புலவர் ஆகியன கிடைத்துள்ளன. இலக்கியத்திற்காக இலக்கிய விருது, இலக்கிய வேந்தர், வில்லுடிப்பாட்டு, வீசுதென்றல் விருது ஆகியன குறிப்பிடத்தக்கன. அவரது திறமைக்காக கிடைக்கப்பெற்ற பட்டங்களையும், விருதுகளையும் பின்வருமாறு ஆண்டு அடிப்படையிலும், வழங்கியோர் அடிப்படையிலும் அறியலாம்.

1) 1997 - கூத்து கலைஞர் (முன்னாள் அரசாங்க அதிபர் திரு.சண்முகம்)

2) 1997 - அண்ணாவியார் (மண்முனைப் பற்று சாகித்திய விழா)

3) 2002 - நாட்டுக் கூத்து கலைஞர் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஜோசப்பரராஜசிங்கம்)

4) 2004 - சமாதான நீதவான் (நீதி அமைச்சர்)

5) 2009 - கீர்த்தி ஸ்ரீ தேசிய விருது (முன்னாள் பிரதி நீதி அமைச்சர் புத்திர சிகாமணி)

6) 2009 - கலைஞர் கௌரவிப்பு (மண்முனைப் பற்று பிரதேச கலாச்சார பேரவை)

7) 2009 - கலைஞானி (ஆரையம்பதி மகா வித்தியாலய நட்புறவு குழு)

8) 2010 - முதலமைச்சர் விருது (கிழக்கு மாகாண சபை - முதலமைச்சர்)

9) 2010 - கலாபூசணம் தேசிய விருது (இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களம்)

10) 2011 - இறைஞான தேசிகர் (நாவற்குடா ஸ்ரீ முத்துமாரியம்மன் அறங்காவலர் சபை)

11) 2012 - சாதனையாளர் விருது (ஆரையம்பதி சமூக அபிவிருத்தி சபை)

12) 2013 - இறைகவிமாமணி (ஆரையம்பதி வடபத்திர காளியம்மாள் நிர்வாக சபை)

13) 2013 - கலைச் செம்மல் (மட்டக்களப்பு மாவட்ட கலாசார பேரவை)

14) 2014 - கவியரசர் (புல்லுமலை நாக கன்னியம்பாள் ஆலய நிர்வாக சபை)

15) 2014 - ஆரையம்பதி ஸ்ரீ ஐயப்பன் ஆலய பதிவாளர் சபை வாழ்த்து மடல்

16) 2014 - பல்கலைமாமணி (கல்லடி உப்போடை நொச்சிமுனை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், ஸ்ரீ பேச்சியம்மாள் ஆலய நிர்வாகிகள்)

17) 2015 - திறமைக்கான தேடல் விருது, "கிராமத்து உள்ளங்கள்" (லக்டோ மீடியா நெட்வெர்க் ஸ்ரீலங்கா)

18) 2015 - சமூக தீபம் (ஒற்றுமைக்கான உறவு பாலம்)

19) 2015 - செம்மொழிப் புலவர் (முனைக்காடு நாகலிங்கேஸ்வரர் ஆலய பரிபாலன சபை)

20) 2017 - இலக்கிய விருது (கிழக்கு மாகாணம் - இறையின்பப் பாவாரம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21) 2017 - இயக்குனர் இமயம் பாரதிராஜாவின் கலைஞர் விருது

22) 2018 - கலை முத்து கலைதீபம் பட்டமும் தேசாபிமானி விருதும் (லக்டோ மீடியா)

23) 2018 - சாமஸ்ரீ தேசாபிமானி விருது (அகில இன நல்லுறவு ஒன்றியம்)

24) 2019 - பல்கலைவித்தவர் (ஆர்.கே.மீடியா, இலங்கை)

25) 2019 -இலக்கிய வேந்தர் (ஒற்றுமைக்கான உறவு பாலம்)

26) 2019 - தேசிய கலைஞர் (கலாசார அமைச்சு)

27) 2020 - மரபுக்கலை மன்னன் (கலாசார பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு)

28) 2021 - வில்லிசை வித்தகர் (நாகசக்தி கலா மன்றம்)

29) 2021 - தேனக தீபம், அறிவுப் பொக்கிசம் (லக்டோ மீடியா)

30) 2022 - கலை அருவி ("அ" கலையரங்கம்)

31) 2022 - வில்லுடிப்பாட்டு "கிழக்கு மாகாண இலக்கிய விருது"

32) 2023 - கலைப்பாவரசு (லக்டோ மீடியா)

33) 2023 - வீசுதென்றல் வீசுது (தென்றல் சஞ்சிகை குழு)

34) 2023 - "தலைக்கோல்" விருது (அனாமிகா பண்பாட்டு மையம்)

ஆரையூர் அருளம்பலத்திற்குக் கிடைத்த பாராட்டுக்களும் கௌரவிப்புக்களும்

அடுத்து ஒரு கலை, இலக்கியச் செயற்பாட்டாளனுக்குக் கொடுக்க வேண்டிய 'புகழ்ச்சியும் மரியாதையும்' மக்கள் மத்தியில் வைத்து பாராட்டுக்களையும் கௌரவிப்புக்களையும் செய்வதாகும். இவ்வாறு கலையில் ஈடுபடுவோரை அவ்வெளியில் வாழ்த்திக் கௌரவிப்பது சிறப்பானது. மனித வாழ்வில் சேர்நிலையான சக்தியைக் கொடுத்து மனசாற நினைத்து கௌவவிப்பது அந்த மனிதரை அந்த சேர்நிலை எண்ணம் வாழவைப்பதாகும். அதுவும் கலைஞர் ஒருவருக்குப் பாராட்டுக்களும் கௌரவிப்புக்களும் குவியும் பொழுது அவரை மீளமீள புதிது புதிதாகப் பிறக்கவைத்து, புதிதாகக் கலைகளையும் படைப்பக்க வைக்கும். ஆரையர் அருளம்பலத்தின் கலை, இலக்கிய, சமூகப் பணிகளின் பயணத்தில் அவருக்கு ஊர்மக்களும், கலைக்கழகங்களும், அரச நிறுவனங்களும் பல்வேறு நிலைகளில் கௌரவிப்புக்களைச் செய்துள்ளனர். இதனால், அவர் தனது படைப்பாங்க வெளியை அகலப்படுத்த வழிவகுத்துள்ளது. கலை இலக்கியப் படைப்புக்களுக்கு வழங்கப்பட்ட விருதுகளின் பொழுது இவ்வகை பாராட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளது.

பாராட்டுக்களும் கௌரவிப்புக்களும்

1) 2002 - நாட்டுக் கூத்து கௌரவிப்பு

2) 2007 - மனித உரிமைகள் அமைப்பு சமாதானச் சான்றிதழ்

3) 2009 - சாகித்திய விழா, நாட்டுக் கூத்து கௌரவிப்பு

4) 2009 - சேவை நிறைவு பிரியாவிடை

5) 2010 - கலாபூசண தென்றல் சஞ்சிகை

6) 2010 - வீரகேசரி கலாபூசண அரச விருது

7) 2010 - கலை இலக்கிய சேவை பாராட்டு

8) 2010 - சங்கமம் கலாபூசண விருது

9) 2010 - மாகாண தமிழ் இலக்கிய விழா

10) 2011 - நமது தூது பாரம்பரிய கூத்துக்கலைக்கு உயிரூட்டிய கலாபூசணம் மூ.அருளம்பலம்

11) 2011 - கிழக்கு மாகாண முதலமைச்சர் கலாபூசணம் விருது

12) 2011 - தென்றல் இறுவெட்டு வெளியிட்டமைக்கான பாராட்டு

13) 2011 - ஆரையம்பதி சமூக அபிவிருத்தி அமைப்பு நாட்டுக் கூத்து இலக்கியம் கிராமிய கலைக்கான பாராட்டு

14) 2012 - சகலகலாவல்லவன் பாராட்டு (கதிரவன் சஞ்சிகை)

15) 2012 - நாட்டார் கலை கற்றல் போட்டிக்கான சான்றிதழ்

16) 2012 - கவிதைகள் தொகுப்பு இலக்கிய விபரம் போட்டி

17) 2012 - சிறுவர் கலைப் போட்டிக்கான சான்றிதழ்

18) 2012 - உலக தமிழிலக்கிய மாநாட்டுச் சான்றிதழ்

19) 2012 - சிறுவர் கதைக்கான சான்றிதழ்

20) 2012 - இறைஞான தேசிகர் பட்டச் சான்றிதழ்

21) 2013 - இலக்கிய விழா கலைஞர் கௌரவம்

22) 2013 - கிராமத்து உள்ளங்கள் நூல் வெளியீட்டுச் சான்றிதழ்

23) 2014 - எல்லாம் வேசமே ஆக்கத்திற்கான சான்றிதழ்

24) 2014 - இலக்கிய விவரணப் போட்டிக்கான சான்றிதழ்

25) 2014 - எங்கள் இலங்கை நாடு கவிதைக்கான சான்றிதழ்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

26) 2016 - தேசிய இலக்கிய விழா சிறுவர் கதைச் சான்றிதழ்

27) 2016 - கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விருது தேர்வு நடுவருக்கான சான்றிதழ்

28) 2017 - அண்ணாவிமார்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வுக்கான வளவாளர் சான்றிதழ்

29) 2017 - கிழக்கு மாகாண இலக்கிய விருது பெற்றமைக்கான சான்றிதழ்

30) 2017 - இறையின்பப் பாவாரம் பாராட்டு. தென்றல் சஞ்சிகை

31) 2018 - தேசிய இலக்கிய விழா நாட்டார் பாடல்களுக்கான சான்றிதழ்

32) 2018 - கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விருது தேர்வு நடுவருக்கான சான்றிதழ்

33) 2019 - திறமைக்கான தேடல்

34) 2019 - பல்துறை சார்ந்தோருக்கான விருது

35) 2019 - பல்கலை வித்தகர் சான்றிதழ்

36) 2021 - வளவாளர் விருது. காத்தான்குடி பிரதேச செயலகம்

37) 2021 - கிழக்கு மாகாண இலக்கிய விருது (தமிழ் கூத்தியல்)

38) 2022 - கூத்து விருது. "அ" கலையரங்கம்

39) 2022 - தமிழ் மருத மாமணி

40) 2022 - உலக சாதனையாளர் (பகைமாட்சி அதிகாரம்)

41) 2023 - உலக சாதனையாளர் (அறன் வலியுறுத்தல் அதிகாரம்)

42) 2023 - இலக்கிய விருது (பத்தாலய பாவாரங்கள்)

43) 2023 - 1000 கலைஞர்கள் 1000 கவிதைகள் (வரிசை எண்-143 (2024.01.06) உலக சாதனை.

இவ்வாறு ஆரையூர் அருளம்பலம் தமது வாழ்நாள் கலை, இலக்கியப் பயணத்தில் தனது பன்முக ஆளுமையை வெளிப்படுத்தியால் கிடைக்கப் பெற்ற விருதுகள், பட்டங்கள், கௌரவிப்புக்கள் ஆகும். தொடர்ச்சியாக உங்களது கலைப்பயணம் சமூகத்திற்காகச் செய்யப்பட வேண்டும். நீங்கள் உங்கள் சேவையை உடல் உள நலத்துடன் செய்ய வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரையூர் அருளின் கட்டுரைகள் பற்றிய நோக்கு

மா.உலககேஸ்பரம்
SLEAS, பிரதிக் கல்விப் பணிப்பாளர்
(ஓய்வு நிலை)



தமிழ் இலக்கிய துறையில் தன்னை நிலை நிறுத்தி சாதனைகளைப் புரிந்து பல விருதுகளுக்கும் பாராட்டுகளுக்கும் சொந்தக்காரனாக விளங்கும் ஆரையூர் அருளம்பலத்தின் சிறப்பு எண்ணிலடங்காதவை கவிஞனாக, எழுத்தாளனாக, நடிகனாக, இலக்கிய விற்பண்ணராகத் திகழும் இவரின் கலைப்பணியானது என்றென்றும் எச் சமூகத்தினராலும் பாராட்டி கௌரவிக்கப்பட வேண்டிய தொன்றாகும். தற்போது அருகி வரும் எமது பாரம்பரிய கலைகளுக்கு உரமூட்டுவதாக இவருடைய கலை இலக்கிய செயற்பாடுகள் அமைந்துள்ளன. இதற்கு கூத்துக்கலை, வில்லுப்பாட்டு, கும்மி, கரகாட்டம் என்பன சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

ஆரையூர் அருள் கலை, இலக்கியத் துறை வளர்ச்சிக்கு ஆற்றி வரும் பங்களிப்புக்காக கலாசார அமைச்சு "கலாபூஷணம்" விருது வழங்கி கௌரவித்துள்ளது. மேலும் இவரால் வெளியிடப்பட்ட கிராமத்து உள்ளங்கள் இறையின்ப பாவாரம் எனும் நூல்களுக்கு திறமைக்கான தேடல் விருதும் கிடைக்கப்பெற்றமை இவரது திறமைக்கு சான்றாகும். இவ்வாறே "செம்மொழிப் புலவர்" எனும் பட்டம் இவரது எளிமையான போக்கிற்கும் பெருமையை வெளிப்படுத்தாத இயல்புக்கும் புலமைக்கும் மிகப் பொருத்தமாக உள்ளது.

ஆரையூர் அரும்பலத்தின் படைப்புகளாக சிறுகதை, கட்டுரை, கவிதை, நாடகம், வில்லுப்பாட்டு, சடங்குப் பாடல்கள், கூத்து என சமூகத்தின் பண்பாட்டுக் கோலங்களை பல வடிவங்களாக எடுத்தியம்பியுள்ளார். இவருடைய கட்டுரைகளில் முப்பத்தைந்திற்கும் மேற்பட்ட கட்டுரைகளை இனங்காண முடிகின்றது. இவற்றுள் வரலாறு சார்ந்த கட்டுரைகள், நிகழ்கால கதைகள், அறிஞர்களின் சிந்தனைகள், இந்து மத வழிபாட்டு முறைகள், இலக்கியத்தோடு தொடர்புபட்ட கல்வி முறை என்பன மையக்கருவாக காணப்படுகின்றன. இக்கட்டுரைகள் வெளிப்படுத்தும் கருத்துக்களையும் சிறப்பம்சங்களையும் விரிவாக நோக்குவோம்.

இலக்கியம் சார்ந்த கட்டுரைகளில் கலை இலக்கியமும் கல்விச் செயற்பாடும், சிறுவர் இலக்கியம், இலக்கிய விபரணம், கவிதை அமைப்பு என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. கலை இலக்கியமும் கல்வி செயற்பாடும் எனும் கட்டுரையில் கலை இலக்கியங்களை கல்வி செயற்பாட்டுடன் எவ்வகையில் தொடர்புபடுத்தலாம் என்பதை தெளிவுபடுத்துகின்றது. இவர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு மனிதநேய பண்புகள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக திரட்டி தருவது கலையும் இலக்கியமுமே என்கின்றார். ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் கட்டுரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டு இலக்கியமே தலையாய கலையாகும் என தெளிவுபடுத்தியுள்ளார்.

மகாபாரதம், இராமாயணம், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கியங்களில் மனித வாழ்வியலில் ஒழுக்க அறநெறிகளின் ஊடாக வெளிக்காட்டுவதையும் அவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை. மேலும், இக்கட்டுரையில் கலை, இலக்கியம் என்பன ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என கூறுவதனூடாக இவை கல்வி செயற்பாடுகளில் முன்னெடுக்கப்படும் தளங்கள் எனவும் விளக்கியுள்ளார். கலை இலக்கியங்களை கல்வி செயற்பாட்டுடன் இணைப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகரிப்பதற்கான அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது. முறைசார் கல்வித் திட்டமிடலில் இலக்கியங்கள் தொடர்பாக புதிய செல்நெறிகள் இணைக்கப்படும் போது கலை இலக்கியங்களை பாதுகாக்க முடியும் என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

மேலும் சிறுவர் இலக்கியம் எனும் கட்டுரையானது சிறுவர் பாடல்கள் எனும் தலைப்பிலுள்ள நூலுக்கு எழுதிய விமர்சனமாக அமைந்துள்ளது. இதில் சிறுவர் இலக்கியமும் நவீன இலக்கியங்களில் ஒன்று என்பதை வலியுறுத்துவதுடன் சிறுவர் இலக்கியங்களை எழுதுகின்ற பலரும் உளவியல் தொடர்பான அறிவியல் குறைந்தவர்களாகவும் சிறுவர்களாக மாறாமல் பெரியவர்களாக நின்று எழுதுகின்றார்கள் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார் இதில் சூழலியல் தொடர்பான விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு குறிப்பிட்ட சமூகத்தின் வாழ்க்கை முறைகளை உதாரணங்கள் மூலம் விளக்கியிருப்பதை காணமுடிகின்றது. அத்துடன் நூலின் சிறப்பம்சங்கல் சுட்டிக்காட்டி, தவிர்க்கப்பட வேண்டியவை, சேர்க்கப்பட வேண்டியவற்றையும் விளக்கியுள்ளார்.

மு.அருளம்பலம் அவர்கள் "இலக்கிய விபரணம்" எனும் தலைப்பில் ஆக்கிய கட்டுரை ஒரு சிறுகதை இலக்கிய தொகுப்பாக நோக்கக் கூடியது. விபரணத்தில் வரும் சொற்பிரயோகங்கள், மொழி நடை, சிறுகதையில் உள்ள உட்பொருளுக்கு கொடுக்கும் விளக்கம் என்பன மற்றவர் மனதை பண்படுத்துவதாகவும் சுவைமிக்க சொற்றாழம் உடையதாகவும் அமைந்துள்ளது. மேலும் கனவுலகம் எனும் நூல் பற்றி குறிப்பிடும் போது சமகால விடயங்கள் மட்டுமின்றி ஏனைய எழுத்தாளர்களின் கவனத்திற் கெட்டாத புதிய பிரச்சினைகள் தனிமனிதன் பற்றிய விமர்சன நோக்கு முறைகள் என்பன வித்தியாசமான வாசிப்பு அனுபவத்தினை அளிக்கக் கூடியதாக உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

விபரணத்தின் மகுடமாக "மகரதோரணம்" பற்றி நோக்குகின்றார். இதில் உள்ள மொழிப் பிரயோகம் சில சமயங்களில் நகைப்புக்குரியதாக கூறி மொழிபெயர்ப்பாளர் சுவாமிநாதனின் சிங்கள இலக்கிய சொற்களஞ்சியங்களில் உள்ள பாண்டித்தியத்தினை எடுத்துக்காட்டுவதாக கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கட்டுரைகளின் வசன நடை, உட்பொருள் என்பன அருளம்பலத்தின் ஆற்றலையும் திறனையும் வெளிப்படுத்துவதாக உள்ளது.

இவ்வாறே இவருடைய படைப்புகளில் விபுலானந்தர், இராமானுஜர், சுவாமி விவேகானந்தர் முதலான அறிஞர்களின் கருத்துக்களும் சமூகப் பணிகளும் கட்டுரைகளாக அமைந்துள்ளன. "விபுலானந்தரின் சமரச சமத்துவ சமூக பணி" எனும் கட்டுரையில் தலைப்பிலேயே கட்டுரையின் மையக்கருத்துக்கள் உள்வாங்கி இருப்பதை அவதானிக்க முடியும். விபுலானந்தர் பற்றிய சகல விடயங்களும் வாசகர் மனதில் ஊற்றெடுக்கும் வகையில் கட்டுரையின் வசனநடை அமைந்துள்ளது. இதில் விபுலானந்தர் குறிப்பிட்ட ஓர் இனத்திற்கு மாத்திரமின்றி அனைத்து சமூகத்திற்கும் கிடைத்த மாபெரும் பண்பாட்டு கலைப் பொக்கிஷம் என விவரித்துள்ளார். சமரச சமத்துவ சமூகப் பணியின் ஊடாக தூங்கி கிடந்த சமுதாயத்தினை வீறு கொள்வதற்கு கையாண்ட உத்தி முறைகளை தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளார். சாதிக் கொடுமையை தகர்த்தெறியவும், தாழ்ந்த சமுதாயத்தினை மேம்படுத்தவும் கல்விதான் முக்கியம் என்பதை உணர்த்தி இதற்கு மட்ஃ சிவானந்தா பாடசாலை சான்றாக அமைந்துள்ளதை தெளிவுபடுத்தியுள்ளார். சமூகத்திற்கு தேவையான சமரச நோக்குக்கு வித்திட்டவர்களில் ஆரம்ப கர்த்தா விபுலானந்தர் என்பதை இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

இராமானுஜர் கணிதத் துறைக்கு ஆற்றிய பங்களிப்பை சுபீட்சம் சஞ்சிகையில் இவருடைய கட்டுரையை அவதானிக்க முடிந்தது. இராமானுஜர் வாழ்க்கையை சுருக்கமாக குறிப்பிட்டு சில கணித


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுணுக்குகளையும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறே சுவாமி விவேகானந்தர் பற்றிய கட்டுரையில் விவேகானந்தரின் சமூக மற்றும் சமத்துவம் சார்ந்த சிந்தனை தொடர்பாகவும் அவருடைய பணிகள் தொடர்பாகவும் விளக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சாதி வேற்றுமையை கண்டித்து அதன் கொடூரத் தன்மையிலிருந்து விடுபட விவேகானந்தர் கையாண்ட முறைகளை சுருக்கமாக கூறியுள்ளார். சாதி வேற்றுமை, சமய, சமூக முன்னேற்றத்திற்கும் ஒரு தடைக்கல் என கட்டுரையின் உட்பொருளை வலியுறுத்தி உள்ளார். விவேகானந்தர் கல்வி தொடர்பான குறிப்பிட்ட நோக்கங்கள் சுருக்கமாக கூறி கல்வியின் இறுதி நோக்கு மனிதத்தன்மை தருவதாக இருக்க வேண்டுமென தெளிவாக சுட்டிக்காட்டப்படுகிறது.

கலாபூஷணம் அருளம்பலம் அவர்களின் இலக்கிய படைப்புக்களில் இந்து மதத்துடன் தொடர்பு பட்ட கட்டுரைகளும் உள்ளடங்குகின்றன. இவற்றுள் மண்முனை பிரதேச பெண் தெய்வ வழிபாடு, காட்சி தந்த பேச்சியம்மன், இந்து ஆலய அமைப்பு, இந்து மதத்தின் சிறப்பம்சம் சைவ சமயத்தில் கண்ணகி வழிபாடு, விநாயக விரதம், நான் கண்ட நாகசக்தி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மண்முனை பிரதேச பெண் தெய்வ வழிபாடு எனும் கட்டுரையில் சக்தி வழிபாட்டின் தத்துவம் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இப்பிரபஞ்ச தோற்றத்திற்கு மூலாதார சக்தி ஆதிபராசக்தி என்பது சாக்த மதத்தின் முடிந்த முடிவென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பெண் தெய்வ வழிபாட்டின் பத்தாசி முறை பற்றியும் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். மேலும் கணபதி வழிபாடு, விநாயக விரதங்கள் போன்ற கட்டுரைகளில் விநாயக தத்துவம், விரதம் அனுஷ்டிக்கும் முறைகள் என்பன சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. அத்துடன் காட்சி தந்த பேச்சியம்மன், சிறப்பு மிகு சிவராத்திரி, நான் கண்ட நாகசக்தி என்பவற்றில் தெய்வத்தின் மகிமைகளும் பெருமைகளும் இலகுவான எழுத்தமைப்பில் விளக்கப்பட்டுள்ளது.

இவருடைய கட்டுரைகளில் மட்ஃ வடமோடி, தென்மோடிகூத்துக்கள், எமதுபிரதேசமரபுக்கலைகள் (நிகழ் கலைகள்) என்பன கலைகள் தொடர்பான கட்டுரைகளுக்கு சான்று பகிர்கின்றன. மட்ஃ வடமோடி தென்மோடி கூத்துக்கள் எனும் கட்டுரையானது எமது சமூக பாரம்பரியத்தில் பின்பற்றப்படும் வட, தென்மோடி கூத்து பிரதிகள் பற்றி எழுத்தாளப்பட்ட கருத்துக்களாகும். இதில் கூத்தின் அடிப்படைத் தன்மைகள் விளக்கப்படுவதுடன், அண்ணாவியார் செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பாகவும் விளக்கப்பட்டுள்ளது. அண்ணாவிமார் ஆடல் பாடலில் பழக்கம், திறன், இரசனை உடையவர்களாகவும் மத்தளம் அடிக்கும் வித்தகத்துடன் இம்மியும் பிழையில்லாமல் கூத்தினை வழி நடத்திச் செல்பவராக அமைதல் வேண்டுமென குறிப்பிட்டுள்ளார். எமது பிரதேச கூத்துகள் கையெழுத்து பிரதிகளில் பாடுபொருளாக மகாபாரதம் இராமாயணம் ஆகிய இதிகாச கதைகள் எழுத்தாளப்படுகின்றன. கடந்த சில தசாப்தங்களில் கூத்து மீளுருவாக்கம் நவீன மயமாக்கல் உருவாக்கத்தின் போது சமகால சம்பவங்களும் கூத்துப் பிரதிகளில் உள்வாங்கப்பட்டிருப்பது ஆரோக்கியமான தோன்று என கருதுகின்றார், கட்டுரையின் இறுதியில் கூத்துக்களை நவீனத்துவம் பெறுவதற்கான நல்ல ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டு இருப்பது சிறப்பான தொன்றாகும்.

அடுத்து பிரதேச மரபுக் கலைகள் தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையானது தற்கால சமூகத்திற்கு எமது பிரதேசத்திற்குரிய பாரம்பரிய மரபுக் கலைகள் தொடர்பான விடயங்களை வெளிக்கொணர்கின்றது. மரபுக் கலைகளில் காவடி, கும்மி, வில்லுப்பாட்டு, கரகம், இசை நாடகம், தெருக்கூத்து, பொம்மலாட்டம் என வகைப்படுத்தி அவற்றின் சிறப்பம்சங்களை விளக்கியுள்ளார். காவடி, கும்மி, கரகம் என்பன ஆலய சடங்குகள், திருவிழாக்களில் போது நடைபெறுகின்றன. எமது பிரதேசத்தின் பண்பாட்டு அடித்தளத்தினை நிலை நிறுத்திய கூத்துக்கலை பற்றியும் விரிவாக விளக்க முயன்றுள்ளார். கூத்தின் வகைகளை குறிப்பிட்டு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பாகவும் விளக்கி இறுதியில் மரபுக் கலைகள் பற்றிய அம்சங்களை எதிர்கால சமூகம் அறிந்து கொள்ள இக்கட்டுரையில் இதன் முக்கியத்துவத்தினை குறிப்பிட்டுள்ளார்.

பொதுவாக அருளம்பலம் அவர்களின் கட்டுரைகளை நோக்கும் போது பலதரப்பட்ட கட்டுரைகளை காணக்கூடியதாக உள்ளது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிகாச புராணக் கதைகள், சமூக சீர்திருத்த கதைகள், அறிஞர்களின் கருத்துக்கள் போன்ற வகைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன கட்டுரைகளில் உட்கருத்துக்களுக்கேற்ப தலைப்புக்கள் அமைய பெற்றுள்ளன. பெரும்பாலும் வசன நடையை பொறுத்தளவில் படித்தவர் மட்டுமின்றி பாமர மக்களும் வாசித்து பயன்பெறக்கூடிய வகையில் உயிரோட்டம் உள்ளதாக விளக்கப்பட்டுள்ளன. இவ்வாறே வரலாற்று கதைகள் சித்தரிக்கும் போது இலகுவான வசன நடையில் கடின சொற்களை தவிர்த்து கையாளப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. கட்டுரையின் தன்மைகளுக்கேற்ப அணிப் பயன்பாடுகளும் கையாளப்பட்டுள்ளன இனமத பேதம் இன்றி சமரச சமத்துவ சிந்தனைகள் கட்டுரைகளில் மெருகூட்டப்பட்டுள்ளதோடு பல்துறை சார்ந்ததாகவும் அமைந்துள்ளது.

பொதுவாக எமது சமூகத்தில் இனங்காணப்படுவோரில் "ஆரையூர் அருள்" என அழைக்கப்படும் மூ.அருளம்பலம் ஐயா அவர்கள் பல்துறை சார்ந்த கலையாக்கச் செயற்பாடுகளை படைத்து வருபவர் இவருக்கு வழங்கப்பட்ட "பல்கலை வித்தகர்" எனும் பட்டம் பொருத்தமாக உள்ளது. அண்மையில் இவர் "அறன் வலியுறுத்தல்" எனும் அதிகாரத்தில் உள்ள குறள்பாக்களை மரபுக் கவிதை முறையில் எடுத்துக் கூறி உலக சாதனையை பெற்றுள்ளதாக அறிகின்றோம். இவ்வாறு கிடைக்கப்பெற்ற பாராட்டுக்களும் விருதுகளும் எண்ணிலடங்காதவை இவற்றையெல்லாம் ஒரு தனி மனிதனால் பெற்றுக்கொள்ள முடியும் எனின் இவரின் திறமை, ஆற்றல், புலமை என்பவற்றை யாராலும் மதிப்பிட முடியாது என்றால் மிகையாகாது.

பின்னிணைப்பு

மூ.அருளம்பலம் அவர்கள் ஆக்கிய கட்டுரைகள்.

1)"பரிட்சயமான காவியங்களில் வரும் காவிய நாயகர்கள்" (1998) முதலாமிடம், மண்முனை தென்மேற்கு பிரதேசம்

2)"இந்து மதத்தின் சிறப்பம்சம்" (1998) இரண்டாமிடம், மண்முனை தென்மேற்கு பிரதேசம்

3)"கும்பாபிஷேகம்" (1999) வசந்தம்

4)"மனித சமூகத்திற்கு கணினியின் பங்களிப்பு" (2000) இரண்டாமிடம், அம்பாறை மாவட்டம்

5)"கணிதத் துறைக்கு இராமானுஜரின் பங்களிப்பு" (2001) இரண்டாமிடம், பட்டிப்பளை பிரதேசம்

6)"இந்து ஆலய அமைப்பும் கிரியைமுறைகளும்" (2001)

7)"அருளாட்சி செய்யும் ஆரையூர்க் கண்ணகை" (2003) தினகரன்

8)"சைவ சமயத்தில் கண்ணகி வழிபாடு" (2004) தினகரன்

9)'சைவ சமயத்தில் கணபதி வழிபாடு" (2004) தினகரன்

10)"விநாயக விரதங்கள்" (2005)

11)ஆரையம்பதி ஆகாயப் பேச்சி" (2006) தினகரன்

12)முதியோரைப் புறக்கணிப்பர் சமுதாய விரோதிகள்" (2007) இரண்டாமிடம்

13)"சமுதாய முன்னேற்றத்தில் இளைஞரின் பங்கு" (2008) இரண்டாமிடம் மண்முனை பற்று

14)"அமரர் நல்லையா ஆற்றிய சமூக, பொருளாதார பணிகளும் பயன்களும்" (2011) கதிரவன்

15)"மண்முனை பற்று கிராமிய கலைகள்" (2012) முதலாமிடம், மண்முனை பற்று

16)கவிதைகள் தொகுப்பு விமர்சனம்" (2012) முதலாமிடம், மண்முனை பற்று, மூன்றாமிடம், மாவட்ட செயலகம்

17)"சிறுகதை நூல் விமர்சனம்" (2012) முதலாமிடம், மண்முனை பற்று

18)"நாட்டார் கலை கற்றல் போட்டி" (2013) முதலாமிடம், மட்டக்களப்பு மாவட்டம்

19)'நாட்டார் கலைகள்' (2013) முதலாமிடம், மட்டக்களப்பு மாவட்டம்

20)மண்முனைப் பற்றுப் பிரதேச பெண் தெய்வ வழிபாடு" (2013) சிகரம் சஞ்சிகை

21)"நாட்டார் பாடல்கள்" (2014) முதலாமிடம்

22)மட்டுநகர் மறவா நாட்டுக்கூத்து நாயகன் த.நல்லலிங்கம்" (2014) தென்றல்

23)மாந்திரிக செயல்முறைகள்" (2014) முதலாமிடம், மட்டக்களப்பு பிரதேச செயலகம்

24)'இலக்கிய விபரணப் போட்டி (2014) முதலாமிடம், மண்முனை பற்று பிரதேச செயலகம்

25)"ஏற்ற இறக்கம்" (2014) முதலாமிடம், மண்முனை பற்று

26)"சுவாமி விவேகானந்தரின் சமூக சமத்துவ சிந்தனைகள்" (2018) தென்றல்

27)'விபுலானந்தரின் சமரச சமத்துவ சமூகப்பணி" (2018) தென்றல்

28)ஆரையம்பதியில் வீரத்தமிழன் இராவணன்" (2018)

29)'மட்டக்களப்பு வடமோடி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மோடிக் கூத்துப் பிரதிகள்" (2018)

30)"கணபதிப்பிள்ளை அதிபர் அவர்களின் நினைவுப் பட்டாங்கி" (2018)

31)'வாழ்வை வளமாக்கிய பாரம்பரிய தும்புக் கைத்தொழில்" (2018)

32)'சிறுவர் இலக்கியம்" (2019) முதலாமிடம், தேசிய இலக்கிய விழா

33)'நாட்டார் கலை கற்றல்" (2020) முதலாமிடம், தேசிய இலக்கிய விழா

34)"எமது பிரதேச மரபுக் கலைகள்" (2020) முதலாமிடம், தேசிய விருது

35)"காட்சி தந்த பேச்சியம்மாள்" (2020)

36)"கணிதத் துறைக்கு இராமானுஜரின் பங்களிப்பு" (2020) சுபீட்சம்

37)'வாசிப்பதன் மூலம் பண்புடைய சமூகத்தை உருவாக்கல்" (2020) சுபீட்சம்

38)"கவிதை அமைப்பு" (2021) சுபீட்சம்

39)இலக்கிய விபரணம்" (2021) முதலாமிடம், பிரதேச செயலகம்

40)"சுந்தர கலைஞன் சுப்பிரமணியம்" (2021) சுபீட்சம்

41)"சிறப்புமிகு சிவராத்திரி" (2021) சுபீட்சம்

42)'பாரம்பரிய நெல்லினமும் பயனும்" (2021) சுபீட்சம்

43)கலை இலக்கியமும கல்விச் செயற்பாடும்" எழுகதிர்

44)"நான் கண்ட நாகசக்தி"

45)"அருகி வரும் விருந்தோம்பல் பண்பாடு"



# ஆரையூர் அருள்

**திரு மூத்ததம்பி சிவகுமாரன்.**

**கலைப் பட்டதாரி,**

**பட்டப்பின் கல்வி டிப்ளோமா, பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா, பணி ஓய்வு அதிபர் (இ.அ.சே 1), சைவப் புலவர்.**

எழுசீர் விருத்தம்
விளம் மா விளம் மா
விளம் விளம் மா

முத்தமிழ் செழித்துச் சொத்தெனக் காக்க
முயல்கிறாய் திறனுடன் தோன்றி
வித்தகம் நிறைந்த வளமிகு முத்தாய்
வியனுல குய்யவே வந்தாய்
சத்தியம் காத்தே நித்தமும் வாழ
சகலரும் இனிதுற ஏற்றே
இத்தரை சிறக்க அருளுடன் எழுந்த
இன்முகம் இனிதுற வாழ்க !

மகத்துவம் பெற்ற குறைகளை ஆசான்
மாணவர் கற்றனர் உன்னால்.
இகத்தினில் வயதும் தடையிலை என்றே
இணைந்துநீ பெற்றனை பட்டம்
அகமது நிறைய அதிபராய்த் தேறி
ஆண்டனை அனைவரும் போற்ற
முகமது மலர்ந்த செழிப்புறு தமிழே
முழுவுல கும்தொழும் உன்னை!

எழுபது கடந்த போதிலும் நீயோர்
எழிலுறு இளையவன் தானே
எழுதிடும் ஆக்க மெலாமுனைப் பேசும்
எங்கணும் அருளென அன்பாய்
முழுமதி யுடைய புலவனாய் ஆனாய்
முதல்நிலை இலக்கியத் தாலே
பழுதிலாப் பாவ லனாகியே பாரில்
பளிச்சென ஒளிர்ந்திடு முத்தே

வில்லிசை கூத்தும் கும்மியும் நன்றாய்
விளையுதே செழிப்புடன் ஓங்கி
பல்திறப் பாக்கள் காவடிச் சிந்தும்
பரமனைப் புகழ்ந்துமே பாடும்
தொல்தமிழ் காக்கும் புலவனும் ஆக
தோன்றுதே காவியப் பாடல்
நல்லருள் பெற்ற நற்கவி யாக
நானிலம் போற்றிட வாழ்க!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரையூர் அருளின் கலை, இலக்கியச் செயற்பாடுகள்

பாவலர் -வில்லூர்ப் பாரதி
(திரு.க.முரளிதரன்)



ஆரையூரின் அருளம்ப லத்தார் என்பார்
ஆற்றியநல் கலையிலக்கிய ஆக்கம் தன்னை
ஆரமெனக் கோத்தழகாய்த் தந்தே னிங்கே
ஆனபுகழ் அம்மனுக்கே சேரு மென்பேன்
பாரமென ஆனபோதும் கவியில் கோக்கப்
பதமதனைத் தந்தாளென் தமிழா மன்னை
சீரழகாய்ச் சேர்த்தியற்றிச் சேர்த்தேன் நானும்
செந்தமிழென் தாய்க்கேபுகழ் சேரு மென்றும்.

(1)

பட்டிருப்புக் கோட்டத்தின் போட்டி தன்னில்
பங்கேற்றே "அவளென்னும்" தலைப்பி லுள்ளம்
தொட்டநல்ல சிறுகதையை எழுதி வல்லார்
தூக்கினரே முதலிடத்தைப் பெற்றுச் சான்று
விட்டிடாமல் தினக்கதிரில் எழுதிப் பின்னர்
வீறுடனே "சமுதாயத் தராசா" மென்னும்
இட்டிட்ட தலைப்பினிலே இரண்டா யிரத்தில்
எழுதியதைத் "தினக்கதிரில்" பிரசு ரித்தார்.

(2)

இரண்டாயி ரத்துமூன்றில் குருகு லத்தில்
இருந்துவரும் சஞ்சிகையில் கல்வி சார்ந்த
சிறந்ததொரு தலைப்பாகும் "மாண வர்க்குச்
சீர்மையக்கல் வி"யெனும்த லைப்பில் தந்தார்
இரண்டாயி ரத்துப்பத்தில் சிகரம் தன்னில்
எழுதினரே "பாரம்கு றைந்த" தென்னும்
சிறந்ததொரு தலைப்பினிலே தந்து பின்னர்
சிறுகதையாம் "நினைவலை:கண் டதேவ சந்தம்

(3)

"ஒற்றுமையே உயர்வுதரும்" தலைப்பில் மீள
ஓய்ந்திடாது ஆண்டதுவாம் பன்னி ரண்டில்
போற்றிடவே மாவட்டப் போட்டி ஒன்றில்
புகழோங்க முதலாமி டத்தைப் பெற்றார்
ஆற்றலுடன் மண்முனையாம் பற்று தன்னில்
ஆண்டதுவாம் பதினாங்கில் சிறுவர்க் கான
போற்றுநல்ல "பொறாமையது வேண்டா" மென்றும்
தப்புக்கான தண்டனைத லைப்பில் தந்தார்.

(4)

இரண்டாயி ரத்துப்ப தினாறாம் ஆண்டில்
இடைவிடாது மண்முனையாம் பற்று தன்னில்
இரண்டாவ தாகிப்பின் அதேத லைப்பில்
எம்மட்டுப் பிரதேச செயல கத்தில்
இரண்டாவ துதடவைதாம் முதலி டத்தை
எழுதியவர் பெற்றதந்த தலைப்போ இங்கு
தரமாகும் "தந்திரமி ருந்தால் மந்திரம்
தானெதெற்காம்" என்பதுவாம் ஆகு மன்றோ

(5)

பிரதேச செயலகம்மண் முனையாம் பற்றில்
பிரியமுடன் "நினைவலைகள்" எனும்த லைப்பில்
இரண்டாயி ரத்துப்ப தினாறி னைந்து
ஈட்டினரே "முதலிடத்தைப்" பெருமை சொல்ல
இரண்டாயி ரத்துப்பத் தொன்ப தன்னார்
எழுதியிட்டார் "நன்றிக்க டனெனும்" தலைப்பில்
சிறந்ததொரு சிறுகதையைச் "சுபீட்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்னும்"
சிற்றிதழில் சீர்புலமை அருளம்ப லத்தார்.

(6)

தேசியமாம் மட்டத்தில் இரண்டா மிடத்தைத்
தேர்ந்திட்டார் "உயர்ந்தவுளம்" சிறுக தைக்காய்
ஆசியதை அம்மனிடம் பெற்ற அன்னார்
அயராது ஆண்டிருப தில்தொ டரந்தும்
ஆசையுடன் "மனமாற்றம்" சுபீட்சம் தன்னில்
அச்சாக்கித் தடம்பதித்துக் கண்டா ரின்பம்.
வாசமுற வருமாண்டா மிருபத்தி ரண்டில்
"முதலையும் மூர்க்கனும்"சி றுகதை தந்தார்

(7)

"நன்றும்தீ தும்பிறர்த ரவாரா" தென்றும்
"நெஞ்சகநி னைவுகளென்றும்" கதைகள் தன்னை
என்றும்தான் எழுதுகின்ற சுபீட்சம் தன்னில்
இட்டவரோ பெரும்புகழை ஈட்டி நின்றார்.
சென்றந்த இருபத்தோ ராமாண் டிற்தான்
சிறுகதையாம் "வாழ்வழித்த தொழிலாம் கல்வி"
என்றுபின்னர் எழுதியவர் தொடர்ந்தும் மீள
இருசிறுவர் கதையெழுதிப் பெற்றார் சான்று.

(8)

தென்மேற்கு மண்முனையாம் பிரதே சத்தில்
தோற்றியவர் ஆண்டதுவாம் தொன்னூற் றெட்டில்
முன்வைத்த தலைப்பதுவாம் "காவி யத்தில்
முன்நிற்கும் காவியத்து நாய கர்கள்"
என்பதனில் முதலிடத்தைப் பெற்றுப் பின்னர்
"இந்துமதச் சிறப்பம்சம்" எழுதி யாண்டில்
மண்முனையாம் தென்மேற்குப் பிரதே சத்தில்
மகிழ்ந்திரண்டாம் இடத்தினையும் வென்று
நின்றார்.

(9)

ஆயிரத்தித் தொளாயிரத்துத் தொன்னூற் றொன்ப
தாமாண்டில் "கும்பாபி சேகம்" தந்தார்
போயந்த ஆண்டகல விரண்டா யிரத்தில்
பூத்தபுதுக் கட்டுரைக்கம் பாறை தன்னில்
நாயகனாம் அருளம்ப லத்தார் அன்று
நாடியிரண் டாவதாகும் விருது பெற்றார்.
ஓய்விலாது பட்டிப்பளைப் பிரதே சத்தில்
"கணிதத்தில் இராமனுஜர்" எழுதி வென்றார்

(10)

தினகரனில் இருபத்தோ ராமாண் டில்தாம்
தீட்டிய கட்டுரையின் தலைப்போ அன்னார்
மனம்மகிழ "இந்துஆல யஅமைப்பும் கிரியை தாமும்"
மூன்றாவது ஆண்டினிலே "ஆரை யூரின்
தினமாட்சி செய்யுமெங்கள் கண்ண கைக்கும்"
தினகரனில் கட்டுரைகள் தந்த ளித்தார்
தினகரனில் இரண்டாயி ரத்து நான்கில்
தீட்டினார் "கண்ணகிக்கும் கணப திக்கும்"

(11)

"விநாயகரின் விரதங்கள்" எனும் தலைப்பில்
வீறுகொண்டு இரண்டாயிரத் தைந்தா மாண்டில்
மனம்மகிழ "ஆரையூர்ஆ காயப்பேச் சிக்கு"
ஆறாமாண் டுதினகர னிலும்ப தித்தார்
தினமுமிங்கே எழுதுமவர் ஏழாம் ஆண்டு
தீட்டினார் முதியோரைப் புறக்க ணிக்க
இனங்கண்ட சமுதாய விரோதி யென்றே
எழுதியிரண் டாமிடத்தைப் பெற்றே யன்னார

(12)

இரண்டாயி ரத்தெட்டில் சமுதா யத்தின்
முன்னேற்றத் திலிளைஞர்பங் களிப்பா மென்றே
சிறந்ததொரு தலைப்பீந்து மண்முனைப் பற்றில்
சேர்ப்பித்தே இரண்டாமி டத்தைப் பெற்றார்.
சிறந்தபணி செய்தவெங்கள் "நல்லை யாவைச்"
சிறப்பித்தார் கதிரவனில் எழுதி யன்று
இரண்டாயி ரத்துப்பண் ணிரெண்டில் பெற்றார்
"எழுதிக்கிரா மியக்கலைக்கு" முதலி டத்தை

(13)

மண்முனையாம் பற்றினிலே நடாத்து கின்ற
மாபெரும்போட் டியிலெல்லாம் எழுதி யன்னார்
முன்னின்றே "எல்லாமே வேட மென்னும்"
முத்தமிழில் இசைதரவே பாட லாக்கி
பின்னரவர் "எங்கலிலங் கைநாடு" என்றும்
புதினாங்காம் ஆண்டிலவர் முதலி டத்தை
இன்பமுடன் பெற்றவரோ விருதும் பெற்றார்
இன்றுமவர் பணிசெய்தே வாழு கின்றார்

(14)

பிரதேச செயலகமாம் மண்முனைப் பற்றில்
"பிஞ்சுமழலைப் பூங்கவிதை" பதினாறில்(2016) தந்து
வரமாகும் தேசியமாம் விழாவில் சென்று
வழங்கினார் "பாடுகிறோம் கேளீ" ரென்றும்(2019)
பிரதேச செயலகத்தின் போட்டி ஒன்றில் (2020)
"பாடுவோமே வாழ்த்தெழுதி முதலி டத்தை
கரவொலிகள் வான்பிளக்க விருது மேற்றார்
கவிதையில்"கா" சுபீட்சத்தில் தந்தா ரன்று(2020)

(15)

இணையத்தில் சுபீட்சமதில் இழைத்த பாவின்
ஈடில்லாத் தலைப்பென்றே யான திங்கே
"என்னவென்று சொல்வதுவோ" மற்றும் இங்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏதன்புக்கு விலையென்றும்" இயற்றி மேலும்
கன்னலுடன் " தமிழ்மகளாய் அத்தை மகளே
வந்தாள்"
கவிதையுடன் "வாழ்விங்கு மலர்ந்த" தென்றும்
இன்னிலத்தே "நீதிநானேன் மறைத்தே னென்றும்
இயற்றியவர் சுபீட்சத்தில் இட்டா ரன்று (2021)

"பாரதிநீ மீளப்பி றக்காதி ருத்தல்
பாரினிலே நன்றென்று" மாபா வொன்றை
சீராண்டாம் தொன்னூற்றி ரண்டி லன்று
சீரிதழாம் கிழக்கொளிக்க திரண்டில் தந்தார்
பாரினிலே "ஒற்றுமைக்காய்க் கரமொ லிக்கும்"
பாவதனை ஒளிசஞ்சி கைக்காய்த் தொன்னூற்
றாறாமாண் டில்தந்துபின் தொன்னூற் றொன்பதில்
ஆர்வமுடன் "விபுலனுக்கும் கவிதை" தந்தார்.

சிகரமெனும் சஞ்சிகையில் "மண்முனைப் பற்றாள்
சீரெழிலைக" கவிதையிலே செய்த ளித்தார்
புகழ்சொல்லத் தினக்குரலில் புனைந்த பாவின்
போற்று"தாயோ ஏங்கிநிற்கும்" படிய ளித்தார்.
சிகரமெனும் சஞ்சிகையில் மண்முனைப் பற்றில்
சாகித்தி யவிழாவில் "கவிதை" தந்தார்
பகலவனாம் கதிரவனில் "மண்முனை யாளின்
பற்றதன்சி றப்பைப்" பாவில் தந்தார்.

சிறுவர்தம் உரிமைகூறும் கும்மிப் பாட்டைச்
செம்மையுற ஆண்டிரண்டா யிரத்துப் பத்தில்
பெருமையுடன் கதிரவனில் பிரசு ரித்தார்
பின்னவ்வாண் டி"லாரையூர் அமரன்" தன்னை
சிறப்புறவே தினகரனில் பதித்த ளித்தார்
சிற்றிதழாம் தென்றலிலே "தென்றல் வீச"
பெருமைதரும் பதினோராம் அகவை தன்னில்
பாராட்டி அன்பழகர்குப் பாவும் தந்தார்.

பட்டிருப்பு வலயத்தின் போட்டி ஒன்றில்
பாடியேதான் "நாட்டாரி லக்கி யத்தில்
மெட்டெடுத்துச் "சிறுவர்தம் உரிமை" தன்னை
மேன்மையுடன் பாடிமுதல் இடமும் பெற்றார்
இட்டமுடன் "அமரரான அமர சிங்கம்"
ஏன்பார்க்கும் பாதந்த தந்தத் தென்றல்
விட்டதில்லை "பொதிகையது மலர நன்றே"
புனைந்தாரே பொதிகையதைப் புகழ்ந்தே யன்று

சத்தியவான் சாவித்தி ரியெனும் கூத்தில்
சாவித்தி ரிவேடமேற்று நெறிப்ப டுத்திப்
பத்திரமும் .பாராட்டும் அறுபத்து நான்கில்(1964)
பாடியாடித் தென்மோடிக் கூத்தில் வென்றார்.
அத்தோடும் நில்லாது வடமோ டிக்குள்
ஆழமிவர் ஊடுருவி அளித்த கூத்தாம்
முத்துக்கல் வித்தியால யத்தி லன்று(1974)
மேடைகண்ட "வள்ளி திருமணத்தை"த் தந்தார்.

விழுந்திடாது கூத்ததனின் மரபைக் காக்கும்
விதமிவரோ எழுபத்தைந் தாமாண் டன்று
எழுதியிவர் நெறிப்படுத்தி நவீன மாக
இன்கூத்தாம் "செல்வச் செருக்கை"த் தந்தார்
இலக்குமணன் பாத்திரத்தை இனிதே ஏற்று
எண்பத்தோ ராமாண்டு வடமோ டிக்குள்
பழுதிலாது "வாலிவதம்" படைத்த ளித்தார்
பின்"கீசவன்" வதையதுவும்(1981)ல் தந்தார்.

இடைவிடாது பொத்துவலாம் பள்ளி வந்து
"இடும்பன்வ தை" வடமோடிக் கூத்த ளித்தார்
தொடர்ந்திவரோ(1985) நெறியாள்கை செய்து பின்னர்
தானளித்த "லவகுசா"வ டமோடிக் கூத்தும்
கடந்துபின்னர் தொன்னூற்றி ரண்டில் நல்ல
கதைகொண்டு "அனுமன்வ சந்தன் " தந்தார்
வடமோடிக் கூத்தொன்றில் சீதை யாக
வடிவமேற்று "அனுமான்காண் சீதை தந்தார்.

தந்தையாகும் பாத்திரத்தைத் தானே ஏற்றுத்
தொன்னூற்றி மூன்றிலிவர் வசந்தன் கூத்தும்
வந்தடுத்த ஆண்டுதனில்(1999) மேடை ஏறும்
வாய்ப்பதனைப் பெற்ற"மங்க ளமெனும் தீபம்"
தந்துபின்னர் தென்மோடிக் கூத்தாம் "சூர
சங்காரம்" பாண்டிருப்பு மேடை கண்டு
வந்திவரோ சாவித்தி ரிவேடம் பூண்டு
வாகையுற்றார் "மறலியைவென் றமங்கை" தன்னில்.

வடகிழக்கு மாகாண சபையி லன்று (1997)
வாகைபெற்ற "சுந்தரிவிடு தூது" மற்றும்
தொடர்ந்தளித்த(1998) இரணியசங் காரம்" கூத்தில்
தோற்றியிவர் முதலிடத்தைப் பெற்று நின்றார்
இரண்டாயி ரத்திரண்டில் மட்வல யத்தில்
இரண்டாமி டத்தையதில் வென்று கொள்ளத்
தரமான "குருதட்ச னையெனும்" கூத்தைத்
தந்துபின் "மட்டுமகிமை" கூத்தும் தந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்முக ஆளுமையான ஆரையூர் அருள் அவர்களும் முத்தமிழின் அங்கமான நாடகத் துறையில் அவர்களின் பங்களிப்பும்

சட்டத்தரணி திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினம்,
பிரதேசசெயளாளர்,களுவாஞ்சிக்குடி

கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு நகரில் இருந்து தென்பால் அமைந்துள்ள இயற்கை வனப்புடன் கூடிய பழம் பெரும் கிராமம் ஆரையம்பதி ஆகும். இக்கிராமம் மட்டக்களப்பிலுள்ள ஏனைய கிராமங்களுக்கு முன்னுதாரணமாக பண்பாட்டின் தொட்டியாகவும் கலைகளின் இருப்பிடமாகவும் விளங்குகின்றது. தனக்கென்றொரு பண்பாட்டு பாரம்பரிய கலாசார விழுமியங்களை கொண்டு விளங்குவதுடன் பாரம்பரிய கலை வடிவங்களான கூத்து, மகிடிக்கூத்து என பல பாரம்பரிய கலை வடிவங்களையும் நவீன நாடக வளர்ச்சிக்கும் உறுதுணையாக விளங்குகின்ற கிராமமாகவும் ஆரையம்பதி காணப்படுகின்றது. இவ்வாறாக முன்னெடுப்பிற்கு பல ஆளுமைகளின் தொடர்ச்சியான இருப்பும் செயற்பாடுகளுமேயாகும். இவர்களில் முதன்மைச் சாதனையாளராக குறிப்பிட்டுச் சொல்லப்படும் ஒருவராகவே ஆரையூர் அருள் விளங்குகின்றார். இவருடைய கலைப் பயணங்களில் குறிப்பாக நாடகச் செயற்பாடுகளின் தனித்துவங்களை சான்றுபகர முடியும்.

அவர்கள் 1949.09.19ம் திகதி மூத்ததம்பி அன்னம்மா தம்பதிகளுக்கு மகனாக பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை ஆரையம்பதி இராமகிருஷ்ண மிசன் பாடசாலையில் ஐந்தாம் தரம் வரை கற்று பின்னர் ஆறாம் தரம் தொடக்கம் உயர்தரம் வரை சிவானந்தா வித்தியாலயத்தில் கற்றார். இவர் பாடசாலைக் காலங்களில் இருந்தே கலைச் செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்தியும் கலைச் செயற்பாடுகள் அனைத்தும் இயல்பாகவே இவருள் இருந்தமை இவரது விசேட திறமையாகவும் விளங்குகின்றது. ஐந்தாம் தரம் படிக்கும் போது ஒரு போட்டிக்காக முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் பற்றிய கவிதையை எழுதி முதலிடம் பெற்றார். எனவே சிறுவயதில் இருந்தே இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்ட இவர் கலை இலக்கிய செயற்பாடுகளின் வளர்ச்சிக்கும், தாக்கத்திற்கும் பாடசாலைக் காலங்களில் பங்குபற்றிய போட்டிகள், மாணவர்மன்ற செயற்பாடுகள் போன்றன இவரது கலை இலக்கியத்துறை வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமைந்தது.

இவரது துறைகளாக இலக்கிய செயற்பாடுகள், நாடகச் செயற்பாடுகள், பாரம்பரிய அரங்கச் செயற்பாடுகள் என பல துறைகளில் ஈடுபட்டு பன்முக ஆளுமையாளராக விளங்குகின்றார். இவர் நடிகர், எழுத்தாளர், பாடலாசிரியர் என பயணித்துக் கொண்டு இருக்கின்ற தொடர் செயற்பாட்டாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று மேலைத்தேய கோட்பாடுகளையும் அவர்களது சிந்தனைகளையும் தெரிந்து வைத்திருக்கின்ற அளவிற்கு எமது மாவட்டத்தில் இன்றும் கண்முன்னே வாழ்ந்து கொண்டிருக்கின்ற கலை இலக்கிய செயற்பாட்டாளரான ஆரையூர் அருள் பற்றிய புரிதலும் அவர் பற்றிய தேடல்களும் குறைவாகவே காணப்படுகின்றது. பன்முக ஆளுமையாளரான அருள் பற்றிய பல தரப்பட்ட ஆய்வுகள் வெளிவர வேண்டும் வெளிவரும் போது தான் அருளம்பலத்தின் கலை இலக்கிய செயற்பாடுகள் அடுத்த தலைமுறைகளுக்கு கடத்தப்படும் என்பது திண்ணம்.

காத்திரமான பல்வேறு கலை இலக்கிய செயற்பாடுகளுக்கும் சொந்தக்காரர் ஆரையூர் அருள் அவர்களின் நாடகச் செயற்பாகள் பற்றி எடுத்து நோக்குவது இன்றியமையாததாகும். இவர் ஆரம்ப காலத்தில் நாடகங்களில் நடிகராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து செயற்பட்டு பல நாடகங்களில் பல பாத்திரங்களை தாங்கி நடித்து பார்வையாளர்களின் பாராட்டுக்களையும் பெற்றார். தனது நடிப்பாற்றல் திறமையை வெளிக் கொண்டுவந்த ஆரையூர் அருள் நாடகங்களை தானே எழுதுகின்ற நாடக ஆசிரியராகவும் மிளிரத் தொடங்கினார்.

இவரது நாடகங்களை சமூக நாடகம், சிறுவர் நாடகம், இதிகாச நாடகம், புராண நாடகம், நகைச்சுவை நாடகம், வரலாற்று நாடகங்கள் என வகைப்படுத்தி நோக்கலாம்.

ஆரையூர் அருள் அவர்களால் எழுதப்பட்ட சமூக நாடகங்கள் இவரது காலப் பகுதியில் சமூகங்களில் காணப்படுகின்ற பிரச்சினைகளையும் அவர்கள் எதிர்கொள்கின்ற சவால்களையும் மையப்படுத்தியதாகவே அமைகின்றன. இவரால் எழுதப்பட்ட சமூக நாடகங்களாக "சமர்ப்பணம், நல்லதம்பி, புதியவிதி சமைப்போம், அளவான குடும்பம், பெரியோரை கனம் பண்ணுவோம், தியாக தீபம், இணைந்த இதயங்கள் " போன்ற நாடகங்களைக் குறிப்பிடலாம்.

சிறுவர் நாடகங்களையும் சிறுவர்களது மனநிலைக்கு ஏற்ப அவர்களது கற்பனைத் திறனுக்கு ஏற்ப நாடகங்களை எழுத வேண்டும். சிறுவர் நாடகம் எழுதுவதென்பது ஒரு சாதாரண விடயமல்ல. அவற்றை சவாலாக ஏற்று சிறுவர்களுக்கு உரிய வகையில் சிறுவர்களுக்கு சிறந்த கருத்துக்களை எடுத்துக் கூறுகின்ற நாடகங்களாக இவரது சிறுவர் நாடகங்கள் விளங்குகின்றன. இவரால் எழுதப்பட்ட சிறுவர் நாடகங்களாக "ஒரே தாய்பிள்ளை, மரவளம் வளர்ப்போம், கல்வியே கலங்கரை விளக்கு, முயற்சியே திருவினையாக்கும், கல்வி அழகே அழகு, உண்மை விளங்குது" போன்ற சிறுவர் நாடகங்களை எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதிகாச மற்றும் புராண நாடகங்கள் "குந்தியின் வரம்" " ஊர்வசி பெற்ற சாவம்" "இறைநம்பிக்கை" போன்ற இதிகாச புராண நாடகங்களை எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அது மாத்திரமன்றி நகைச்சுவை மற்றும் வரலாற்று நாடகங்களான " சிலைகளும் சிரிக்க வைக்கும்" நகைச்சுவை நாடகமும் "மாயவேட மன்னன்" வரலாற்று நாடகம் போன்றவற்றையும் எழுதியுள்ளார்.

ஆரையூர் அருள் அவர்களது மேற்கூறப்பட்ட நாடகச் செயற்பாடுகளை வைத்துப் பார்க்கின்ற போது ஈழத்து தமிழ் நாடக வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை வழங்கி வருகின்றமை படம் போட்டுக் காட்டுகின்றது. இவரது நாடகப் பிரதிகள் ஒவ்வொன்றும் கற்றலுக்கும் ஆய்வுக்கும் உரியவை. இப்பிரதிகள் பிரதேச ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் பாராட்டுக்களையும் பரிசில்களையும் பெற்றவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பன்முக ஆளுமையாளராக விளங்குகின்ற ஆரையூர் அருள் அவர்களின் கலை இலக்கிய செயற்பாடுகளை பாராட்டி அவர்களுக்கு பல்வேறுபட்ட விருதுகளும் கௌரவங்களும் வழங்கப்பட்டுள்ளன. அந்தவகையில் இலங்கை அரசின் அதியுயர் விருதான கலாபூசன விருதையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே மேற்கூறப்பட்ட விடயங்களை தொகுத்து நோக்குகின்றபோது ஆரையூர் அருள் அவர்கள் ஈழத்தமிழர்களின் பண்பாட்டு நடைமுறைகளுக்கும் அப்பண்பாடு இன்றும் உயிர்நாடியாக இருப்பதற்கும் உரிய செயற்பாட்டினை தனது கலை இலக்கியச் செயற்பாட்டின் ஊடாகவும் நாடகச் செயற்பாட்டிற்கூடாகவும் புரிந்துள்ளார் என்பதோடு பன்முக ஆளுமையாளராகவும் இன்றுவரையும் தொடர் செயற்பாட்டாளராகவும் பயணித்துக் கொண்டிருக்கின்றார். இவரது செயற்பாடுகள் அனைத்தும் வருங்கால தலைமுறைகளுக்கு ஒரு படிப்பினையாக அமையும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. கிழக்கு மாகாணத்தின் முதன்மை சாதனையாளரான ஆரையூர் அருள் அவர்களின் கலை, கலாசார, பண்பாட்டு செயற்பாடுகள் மேலும் தொடரட்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரையூர் அருளின்

# பத்தாலய பாவாரங்கள்

கலாநிதி த.மேகராசா (கவிஞர் மேரா)
விரிவுரையாளர்,
தமிழ் கற்கைகள் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

ஆரையூர் அருள்' என எல்லோராலும் நன்கு அறியப்பட்ட அருளம்பலம் அவர்கள் பத்து ஆலயங்களை மையப்படுத்தி கும்மி, காவியம், தாலாட்டு, காவடிப்பாடல் என பல வடிவங்களில் இயற்றிய பாடல்களை "பத்தாலய பாவாரங்கள்" என்ற நூலாக வெளியிடுவது மகிழ்ச்சி தருகிறது. 1988 ஆம் ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் எழுதிய பாடல்களையே இப்பெயரில் இப்போது நூலாக்கி நமக்குத் தருகின்றார். நாற்புது வருடங்களாக பல்வேறு இலக்கிய முயற்சிகளில் ஓயாது ஈடுபட்டு வரும் இவர் இதற்கு முன்னரும் பல நூல்களை வெளியிட்டுள்ளார். அவற்றுள் பல நூல்கள் விருதுகளைப் பெற்றுள்ளன. மட்டக்களப்பு இலக்கிய வளர்ச்சியில் ஆரையூர் அருள் அவர்களுக்கு முக்கியமான இடமுண்டு. அவரது இந்நூல் கோயில் வரலாறு, இறைவன் - இறைவியின் செயற்கரிய செயல்கள், வழிபாட்டம்சங்கள் முதலானவற்றை எடுத்துக்கூறும் வகையில் அமைந்துள்ளன.



கோயிலை மையப்படுத்தி பாடல்களைப் பாடுகின்ற மரபு நீண்ட தொன்மையுடையது. சங்க காலத்தில் எழுந்ததெனக் கருதப்படும் திருமுருகாற்றுப்படையில் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திரு ஆவி நன்குடி, திரு ஏரகம் என்னும் நான்கு தலங்களில் முருகன் எழுந்தருளியுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது. சங்க மருவிய காலத்தில் காரைக்கால் அம்மையார் திருவாலங்காடு என்னும் ஊரில் கோயில்கொண்டுள்ள சிவபெருமான் மீது "திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தைப் பாடியுள்ளார். இது திருவாலங்காடு என்ற கோயிலில் குடிகொண்டுள்ள சிவபெருமானைப் பற்றியதாக அமைந்துள்ளது. பல்லவர் காலத்தில் முன்னைய காலங்களை விடவும் கோயில் வழிபாடு முக்கியத்துவம் பெற்றது. இக்காலத்தில் வெளிவந்த மாணிக்கவாசகரது 'கோயில் திருப்பதிகம்' முக்கியமானதாகும். விஜய நகர நாயக்க மன்னர் காலத்தில் திருவாரூர் சிவபெருமான் மீது பாடப்பட்ட திருவாரூருலா, மதுரை சொக்கநாதர் மீது பாடப்பட்ட சொக்கநாதர் உலா, காசிவிசுவநாதர் மீதும் தலத்தின் மீதும் பாடப்பட்ட காசிக்கலம்பகம் எனப்பல நூல்கள் வெளிவந்தன. இவ்வாறு காலத்திற்குக் காலம் கோயில் வரலாறு, மகிமை பற்றியும், கோயிலில் குடிகொண்ட இறைவன் பற்றியும் பல்வேறு இலக்கியங்கள் வெளிவந்துள்ளன. இதன் தொடர்ச்சியாகவே ஆரையூர் அருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் 'பத்தாலய பாவாரங்கள்' என்ற நூல் அமைகிறது. இது முக்கியமான இலக்கியப் பேணுகையாகும்.

பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயம், ஆரையம்பதி கடற்கரை நரசிங்கர் ஆலயம், இருதயபுரம் மேற்கு வாசுகி அம்மாள் ஆலயம், பரித்திச்சேனை மீனாட்சி அம்பாள் ஆலயம், முனைக்காடு முத்துமாரி அம்பாள், முனைக்காடு வீர பத்திரர் ஆலயம், மஞ்சந்தொடுவாய் விநாயகர் கண்ணகை ஆஞ்சநேயர் ஆலயம், குமாரத்தன் ஆலயம், கொல்லநுலை பேச்சி அம்மன் ஆலயம், விளாவட்டவான் காளி அம்பாள் ஆலயம் என்பவையே அந்த பத்து ஆலயங்களுமாகும். இவ்வாலயங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் வெவ்வேறு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்டவை. ஆலயங்கள் பற்றியும், அங்கு நடைபெறும் வழிபாட்டு நடைமுறைகள் பற்றியும் அறிந்து அந்த ஆலயம் சார்ந்த சமூகத்தின் ஒரு பிரதிநிதியாக நின்று பக்தியுணர்வோடு இச்செய்யுட்களை நூலாசிரியர் இயற்றியுள்ளார்.

ஒரு சமூகத்தின் நிலைபேற்றுக்கும் அடையாளப்படுத்தலுக்கும் அச்சமூகம் சார்ந்த வரலாறு முக்கியமானதாகும். வரலாற்றுப் பேணுகை இல்லாத சமூகம் கால வெள்ளத்தில் அழிந்துபோய்விடும் என்பது திண்ணம். காலனித்துவ காலத்தில் கீழைத்தேய பண்பாட்டையும் வரலாற்றையும் சிதறடிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்றன. கீழைத்தேயத்தவர்களே தமது பண்பாட்டையும் வரலாற்றுப் பாரம்பரியங்களையும் கீழ்நிலைப்படுத்தி மேலைத்தேயப் பண்பாடே சிறந்ததென்று கொண்டாடத் தூண்டியது காலனித்துவம். இத்தகைய நிலையில் நமது சமூகம் சார்ந்த வழிபாட்டு நிலை சார்ந்து உள்ள வரலாறுகளை, சமூக நம்பிக்கைகளை, வழக்காறுகளை பாடல்களினூடாக வெளிப்படுத்தி அவற்றை ஆவணப்படுத்துதல் முக்கியமானதாகும். இத்தொகுப்பிலுள்ள பாடல்களில் கோயிலுடன் தொடர்புடைய வரலாறு வெளிப்பட்டு நிற்பது இத்தொகுப்பின் ஒரு தனித்துவமெனலாம்.

பண்டாரியாவெளி நாகதம்பிரான் கும்மிப் பாடல்கள் பண்டாரியாவெளியில்(நாககட்டில்) நாகதம்பிரான் ஆலயம் உருவாகிய கதையைக் கூறி இறுதியில் நாகதம்பிரானை வாழ்த்திப்பாடுவதாக அமைகின்றது. குறிப்பாக ஐந்து பெண் குழந்தைகளோடு நாகமும் ஒரு பெண்ணின் வயிற்றில் பிறந்தமை, நாகத்தோடு பிறந்த பெண் குழந்தை நாகம்மா என்ற பெயர் பெற்றமை, தந்தை இறந்து போனமை, தாயால் வளர்க்கப்பட்ட பெண் குழந்தைகள் பின்னர் திருமணமானவை, நாகம்மைக்கு குழந்தை பிறந்த வேளையில் நாகம்மையின் கணவன் இறந்தமை, அதனைத் தொடர்ந்து நாகம்மையின் தாயும் இறந்தமை, பின்னர் நாகம்மையோடு பிறந்த நான்கு சகோதரர்களும் சீதனத்தைப் பிரித்தெடுக்க வந்தமை, சீதனத்தை ஐந்தாகப் பிரித்தமை, நாகத்திற்குச் சீதனப்பங்கு பிரிக்கப்படாமையால் நாகம்மையும் நாகமும் கோபமடைந்தமை, பின்னர் சொந்தங்கள் வேண்டாமென்று நாகம்மை தன் பிள்ளையோடும் தன்னோடு பிறந்த நாகத்தோடும் கற்பரசி கண்ணகி சிலையோடும் மண்முனை ஆற்றைக் கடந்து சென்றமை, எதிர் நின்று கொல்ல வந்த காட்டெருமையை மடக்கிப் பிடித்தமை, எல்லோரும் அதிசயித்து நின்றமை, கண்ணகி சிலையை மகிழடித்தீவு மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப அவர்களிடம் கொடுத்துவிட்டு பண்டாரியாவெளிக்குச் சென்றமை, அங்கு புற்றுக்குள் நாகம் செல்ல, நாகம்மை கடுக்காமுனை சென்றமை, நாகம் புகுந்த கட்டு நாககட்டு ஆனமை, நாகத்திற்கு பூசை நடைபெற்றுவந்தமை, கடுக்காமுனையில் வாழ்ந்த நாகம்மையின் வயிற்றுவார் கொம்பிக்கிழவி வயிற்றுவாரானமை என்பனபோன்ற பல்வேறு விடயங்களை இவர் எளிய மொழி நடையில் சாதாரண மக்களுக்கும் விளங்கும் வகையில் பாடியுள்ளார். இக்கும்மிப் பாடல்களில் கூறப்படும் இக்கதை மண்முனைப் பிரதேச மக்களிடையே இன்றும் வழங்கி வருவதாகும். அதனையே அவர் பதிவுசெய்து பக்தியுணர்வாகிய உயிரூட்டியுள்ளார். அவ்விதத்தில் பின்வரும் பாடல்கள் கவனிக்கத்தக்கவையாகும்:

மனநிறைவோடு மகளை எடுத்து - கொண்டு
தன் பாட்டிலே நாகம்மை செல்ல
படையாண்ட வெளிக் குளக்கட்டிலுள்ள
புற்றேறி நாகமும் அமர்ந்ததுவே
அழகான புற்றில் நாகமரம் - அதனை
அக்கா நாகம்மை கண்டுகளித்து
நாள்தோறு முனக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவளிப்பேனென்று
நடந்து கடுக்காமுனை புகுந்தாள்
நாள்தோறும் நாகம்மை நாகத்துக்கு - சென்று
நல்ல பால் முட்டை பழமும் வைக்க
இச்செயற்பாடு கண்ட ஊரவரும் - வந்து
இப்படி நாங்கள் செய்வோமென்றார்.

நாகம் குடிகொண்ட இடம் - அதுவே
நாக கட்டென மக்கள் அழைத்து
நாகம்மை வயிற்றுவா ரென்றும் - கொம்பி
கிழவி தத்தியென அழைத்தனரே.

இதேபோன்று முனைக்காட்டு வீர பத்திரர் வரலாற்று கும்மிப் பாடலில் முனைக்காடு ஆலயத்தின் தொன்மையினைக் கூறி கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர். தேரோட்டம் முடிந்த பின்னர் திருவேட்டை ஆடுவதற்காக வீரபத்திரர் ஆலயத்திற்கு வருகின்ற செய்தியும் கூறப்பட்டுள்ளது.

பண்டைய காலப் பழம்பதிதானிது
மட்டுநகரின் முதல் பதிதான்
மண்முனை தென் மேற்கினிலே
உண்மையுள்ள வொரு பதிதான்.
எண்நூறு ஆண்டுகளுக்கு முன் வந்த
தொன்மைப் பதி யிதுவென்று
வஞ்சியரே வந்தவர் பதியில்
சொல்லிக் கும்மி யாடுங்கடி.

மட்டுநகர் மன்னன் தருமசிங்கனின்
சித்திரதே ருட்சபம் முடிய
கொக்கட்டி நாதர் திருவேட்டைக்கு
தித்திக்க முனைக்காடு வருவார்.
கண்டி மன்னன் விமலதர்ம சூரியன்
வந்து திருவேட்டையோடு
குடுக்கை கூறும் நிகழ்வு கண்டு
குதூகலித்ததைக் கூறுங்கடி

இவ்வாறு மட்டக்களப்பை தருமசிங்க மன்னன் ஆட்சி செய்தமை, கண்டி மன்னன் விமலதருமசூரியன் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தோடு தொடர்புபட்டிருந்தமை உள்ளிட்ட உண்மை வரலாறுகளை இவர் பதிவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். கோயில் உருவாக்கம் தொடர்பான இத்தகைய விடயங்களை வெளிப்படுத்தியுள்ள அதேவேளை குறிப்பிட்ட தெய்வத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படுகின்ற புராணக் கதைகளையும், கருத்துக்களையும் பாடல்களில் ஆரையூர் அருள் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வகையில் இவர் ஆரையம்பதி கடற்கரை நரசிங்கர் ஆலயத்தை அடிப்படையாகக் கொண்டு பாடிய காவடிப்பாடலில் நரசிங்க அவதாரம் தொடர்பாகக் கூறப்படுகின்ற புராணக் கதை முக்கியம்பெறுவதோடு ஆரையம்பதி நரசிங்கரின் அதிசயங்களும், சிறப்புகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

கண்ணுக்கு முன்னாக கண்கண்ட தெய்வமாக
கம்பிரமாக நானிருக்கக்கண்டும்
என்னை மதிக்காம லவன் நாமமுரைக்காய்
அந்த அரி எங்கிருக்காயெனக் கேட்க
என்னுள்ளும் உன்னுள்ளு மிருக்காரப்பா
மண்ணிலுள்ள வஸ்துவிலு மிருக்காரப்பா
தூணிலும் துரும்பிலும் இருக்காரப்பா
தூய அரி எங்கும் நிறைந்தவ ரென்றான்

காட்டடா அந்த கள்ள மாயன்
இந்த தூணிலு மிருக்கானா வென்று கேட்டு
ஓட்டுவேனென்றுரைத்து தூணை அடித்து
ஓங்கியே உதைத்தானே பலம்கொண்டு
தூணிரு கூறாகப் பிளக்க உள்ளிருந்து
நரவடிவ கரிமுகத்தோடு நகைசெய்து
இரணியனை பிடித்திழுத்து மடிகிடத்தி
கிழித்திரண மணிக்குடலை எடுத்தாயப்பா

புராணக்கதையை கவிஞர் இங்கு எடுத்துரைக்கும் பாங்கு தொடர்ந்து கேட்கும்ஃ படிக்கும் ஆர்வத்தைக் கூட்டுவதாக உள்ளது. முனைக்காடு வீரபத்திரர் மீதும் இவர் பாடல்களைப் பாடியுள்ளார். அதில் முனைக்காடு வீரபத்திரர் காவியம் முக்கியமானதாகும். இதில் வீர பத்திரரின் அவதாரக் கதையும் வீர பத்திரர் முனைக்காட்டிற்கு வந்தமர்ந்த கதையும் கூறப்படுகின்றன.

பிடிப்புடன் வீரபத்திரர் மேவி வந்து
முனைக்காட்டு தெற்கில் கோயிலமர்ந்தாரே
அமர்ந்திட்ட செய்தி திக்கெட்டும் பரவ
மட்டக்களப்பின் முதல் கோயிலிதுவென்று
பட்டி தொட்டியிலுள்ள பலரும் மகிழ்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிப்பளைக்கே புகலிக் கோயிலென்று
நட்புடன் நாலா திசைகளிலுமிருந்து வந்து
பொற்புடன் அவரைப் போற்றி நிற்க
தப்பாது அனைவரையும் அவரரவணைத்து
எப்போதும் அருளாசியளித்து காத்திருக்காரே

இப்பாடல்கள் அந்தாதி அமைப்பில் பாடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். படிப்பறிவு குறைந்த மக்களும் பாடல்களை மனனஞ்செய்து தலங்களில் பாடி தமது பக்தியை வெளிப்படுத்துவதற்கு அந்தாதி செய்யுளமைப்பு பெருந்துணை புரிவதாகும். தானியற்றிய பாடல்களில் பல்வேறு செய்திகளை வெளிப்படுத்தும் அதேவேளை அவற்றை எளிமையாகன வகையில் பாடியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆலய உருவாக்கத்துடன் தொடர்புடையனவாகக் கூறப்படும் கதைகளில் சில இறைவன் கனவில் தோன்றி கோயில் கட்டுமாறு வலியுறுத்த அதன்படி கோயில் கட்டப்பட்டதாகக் கூறப்படுவனவாகும். இத்தகைய முறையில் ஆலயம் உருவாக்கம்பெற்றமையினையும் இவர் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார். இருதயபுர மேற்கு வாசுகி அம்மாள் ஆலயத்தின் பேரில் இவர் பாடிய கும்மிப் பாடலில் இருதய புரத்தில் வாசுகி அம்மாள் ஆலயம் உருவாகிய கதையோடு அம்பாளின் அருட்டிறனும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. செந்தூரனின் கனவில் வாசுகி தோன்றியமை, செய்தி ஊரெல்லாம் பரவியமை, மாமாங்கேஸ்வரர் தீர்த்த நாளில் செந்தூரனின் உடலில் காட்சிகொடுத்துக் கலந்தமை, பின்னர் ஆலயம் கட்டி வழிபடப்பட்டமை உள்ளிட்ட அதிசயச் செய்திகள் கூறப்பட்டுள்ளன. பின்வரும் பாடல்கள் எடுத்துக்காட்டத்தக்கவை:

அன்னை வாசுகியின் தேச பக்தன்
செந்தூரன் உயர் பரீட்சை எழுத
நெல்லூர் வாசுகி ஆசி பெற்று
நல்லமுறையில் சித்தியும் பெற்றனரே

ஆசி பெற்ற அடுத்த செவ்வாய்க்கிழமை
வாசுகி பின்னிரவு கனவில்
தோன்றி யைந்து சிரசுடனெழுந்து
ஆடிக்காட்சி கொடுத்தனளே

இல்லத்து நிலத்தில் முழுவுருவை
அச்சதாக அவபதித்த தடத்தை
மெய்சிலிர்க்கக் கண்டு வியக்கையிலே
இச்செய்தி ஊரெல்லாம் பரவியதே

ஈதென்ன அதிசயம் என்று புகழ்ந்து
ஊரவ ரெல்லாரும் திரண்டு வந்து
மாலவன் சோதரி வாசுகிதானென்று
வாயார வாழ்த்தி வணங்கினரே

ஏதோவொரு மரத்தின் கீழ் சூலத்தையோ, வேலையோ, முகக்களையையோ, கருங்கல்லினையோ வைத்து வழிபட்டு வந்து பின்னர் கொத்துப் பந்தலமைத்தும், ஓலைக்குடிசையமைத்தும் வழிபட்டு பின்னர் பெருங்கோயிலாக உருவாகிய கதைகளும் பல கோயில்களின் உருவாக்க வரலாறாகக் கூறப்படுகின்றன. அவ்வகையில் பரித்திச்சேனை மீனாட்சி அம்பாள் காவடிப் பாடலில் பரித்திச்சேனையில் மீனாட்சி அம்பாள் ஆலயம் உருவாகிய வரலாறு பின்வருமாறு கூறப்பட்டுள்ளமையை எடுத்துக்காட்டலாம்.

ஆல மர விருட்சத்தின் கிழ் அண்ணாவியார்
அழகிப் போடி பொன்னம்பலம் மீனாட்சி
முகக்களை வைத்து வழிபட்டு வந்த காலம்
ஆண்டு நாற்பத்தைந்து ஆனதன் பின்பு
ஊரவர் ஒன்று கூடி ஓலைக் குடிசை கட்டி
ஆண்டுக்கொருமுறை மூன்று நாட்கள்
திருவிழாச் செய்து வரத் தித்திப்பா யேற்று
திருவுருள் புரிந்து வந்த மீனாட்சியம்மா

கோயில்கள் மீது இவர் பாடிய பாடல்கள் இறைவனை வாழ்த்திப்பாடுவனவாகவும் இறைவனிடம் வேண்டுதல் செய்வனவாகவும் உள்ளன. பண்டாரியாவெளி நாகம்மைகாவியம் பண்டாரியாவெளிநாகதம்பிரானை வாழ்த்துவதாகவும் நோய்களிலும் விச சந்துகளிலிருந்தும் காக்குமாறு வேண்டுவதாகவும் அமைந்துள்ளது.

அம்மா உந்தனருள் பார்வை பட்டால்
அனைத்து விச சந்துக்களு மோடிடும்
நம்பிடு பக்தருள்ள மென்று மமரும்
நாகம்மா நலமோ டெங்களைக் காரும்
காத்திடுவென்றதும் கருணைதனை காட்டி
காசினியிலுயர் புற்றில் புகுந்து
பூத்த புதுமலர் முக படமெடுத்தாடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தூக்கனுபவங்கள் காட்டிடுவா தாரணியில்

முனைக்காடு முத்துமாரியம்மன் மீது பாடியுள்ள கும்மி, காவடி, தாலாட்டுப் பாடல்களும் காத்தருள வேண்டுவனவாக அமைந்துள்ளன. பரித்திச்சேனை மீனாட்சிஅம்பாள்கும்மிவசந்தன்,மீனாட்சிஅர்ச்சனை, தாலாட்டு என்வற்றில் மீனாட்சி அம்பாளின் சிறப்புகள் சிறந்த முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இதனைப்போன்றே ஏனைய கோயில்களைப் பற்றிய பாடல்களும் பல்வேறு செய்திகளை வெளிப்படுத்திப் பாடப்பட்டுள்ளன.

இனக்குழுக்களின் வரலாற்று வேர்கள் கேள்விக்குட்படுத்தப்படுவதும் மாற்றியமைக்கப்படுவதுமாகத் தொடரும் இன்றைய காலச் சூழலில் பத்தாலய பாவாரங்கள் போன்று பலநூறு ஆலய பாவாரங்கள் உண்மையாகவும் சமூகப்பொறுப்புடனும் இயற்றப்படவேண்டியது அவசியமாகும். அத்தோடு பலவேறு அழுத்தங்களுக்கு முகங்கொடுத்துத் திண்டாடும் மனிதர்களுக்கு வழிப்படுத்தலாக இறையின்ப பாவாரங்களும் தேவைப்படுகின்றன. இத்தகைய சூழலில் ஆரையூர் அருள் அவர்களின் இந்நூல் முக்கிய வரவாகும். விஞ்ஞானத்தின் அபரீத வளர்ச்சியில் மனிதன் தன்னைப் பறிகொடுத்து நிற்கும் இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழ்ப் பக்தி இலக்கிய மரபை இந்நூலினூடாக நீட்சி செய்திருப்பதும் பாராட்டப்படவேண்டியதாகும். எதிர்காலத்தில் உள்ள வரலாறுகளை காவுகை செய்து இளைய தலைமுறைக்குக் கடத்தத்தக்க இன்னும் பல ஆக்கமுயற்சிகளை நூலாசிரியர் செய்யவேண்டுமென வாழ்த்துகிறேன்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அகவை எழுபத்தைந்தில் கால்பதிக்கும் ஆரையூர் அருள்

த. தட்சிணாமூர்த்தி
தலைவர் ஸ்ரீ முருகன் இந்து மன்றம்
ஆரையம்பதி

மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்கே கிலோமீற்றர் 10க்கு அப்பால் அமைந்தள்ள பழம்பெரும் பதியாம் ஆரையம்பதி கிராமத்திலே அவதாரம் செய்தவர் ஆரையூர் அருள். இவரது இயற்பெயர் மூத்ததம்பி அருளம்பலம் சிறுவயதில் இருந்தே கல்வியில் மிகுந்த ஆர்வம் கொண்ட இவர் தனது கல்விப்படிப்பை முடித்து பாடசாலையில் மிகுந்த கரிசனையுடன் அதிபராக கடமையாற்றினார். ஆரையம்பதி கிராமம் பல ஆலயங்களையும், கத்தோலிக்க தேவாலயத்தையும், அண்மை கிராமங்களில் பள்ளிவாசல்களையும் கொண்டமைந்த கிராமமமாகும்.இங்கு வைத்தியர்கள், பொறியியலாளர்கள், அரச அதிபர்கள், கல்வியலாளர்கள் என பல பேர்கள் உள்ளாரகள். அதேபோல் கலைத்துறையிலும் பல்வேறுபட்டவர்கள் உள்ளார்கள். ஆனால் ஆரையூர் அருள் என்று அழைக்கப்படும் திரு.மூ.அருளம்பலம் அவர்கள் தனக்கே உரித்தான பன்முக ஆற்றலையும் ஆக்க, இலக்கிய படைப்பாளியுமாக கடந்த 50வருடங்களுக்கு மேலாக புலமை மரபை கொண்டு நாட்டக்கூத்து, நாடகம், கவிதை, சிறுகதை, கட்டுரை, வில்லுப்பாட்டு, பாடலாக்கம், நூல்வெளியீடு போன்ற ஆக்கப்படைப்பாளியாக காணப்பட்டார்.

சத்தியவான் சாவித்திரி எனும் நாட்டுக் கூத்தினை நெறியாழ்கை செய்து சாவித்திரி பாத்திரம் ஏற்று பெண் வேடத்தினையும் மிகவும் சாதுர்யமாக பொறுப்பேற்று நடித்தவர். எந்த பாத்திரமானாலும் அதை மிகவும் சிறப்பாகவும் கண்ணியத்தோடும் செய்து முடிப்பார். இதே போல் தனது புத்தக வெளியீடுகளில் மிகவும் நேர்த்தியாக 'இறையின்ப பாவாரம்' எனும் புத்தகத்தை மிகவும் அற்புதமாக விநாயகர் துதி, நாமகள் துதி, கும்மி பாடல், காவடி பாடல், தாலாட்டு, காவியம், கரகம், ஊஞ்சல் பாட்டு, திருப்பள்ளி எழுச்சி, பக்தி பாசுரங்கள் பஜனைப் பாடல்கள் ஆக்க பாடல்கள் மங்களம் என பல ஆயிரக்கணக்கான பாடல்களை வெளியிட்டு வைத்து அந்த காலத்தில் தேவார முதலிகளால் அருளப்பட்ட தேவாரப் பாடல்களைப் போல் இந்த இறையின்பாவரத்தை வெளியீடு செய்தவர். இவரது ஆக்கங்கள் அனைத்தும் தன்னிகரில்லாத நூல்களாகவே காணப்பட்டது அதேபோல பத்தாலய பாவாரங்கள் என்னும் பக்தி இலக்கியத்தையும் ஸ்ரீ முருகன் இந்து மன்றத்தின் அனுசரணையுடன் வெளியீடு செய்தவர். அதுமட்டுமல்லாமல் இவரது திறமை இலங்கையில் மட்டுமல்ல இந்தியா உட்பட உலகின் பல நாடுகளிலும் போற்றப்படுகின்றது. திருவள்ளுவரினால் இயற்றப்பட்ட திருக்குறளினை இந்தியாவில் உள்ள நிறுவனத்தின் ஊடாக மிகவும் திறமையாக கவிதை தொகுப்பாக செய்து அதற்குரிய பரிசினையும் வென்றவர் என்றால் அது மிகையாகாது. இசைத்தட்டின் ஊடாக பல பாடல்களை பாடி வெளியீடு செய்தவர் என்றால் அது நாம் செய்த பெரும் புண்ணியம். கலை இலக்கியத் துறையில் தன்னலங்கருதாப் பணிபுரிந்து பல நூல்களை வெளியீடு செய்ததுடன் பல இறுவெட்டுக்களை வெளியீடு செய்தவர். இவரை பாராட்டி கூத்துக்கலைஞன் அண்ணாவியார், கலை ஞானி, இறைஞான தேசிகர், இறைக்கவி மாமணி, கலைச்செம்மல், கவியரசர், பல்கலைமாணி, சமூக தீபம், கலைமாமணி, செம்மொழிப் புலவர் முதலான பட்டங்களை இந்து சமய கலாசார அமைச்சு மற்றும் பல சமூக அமைப்புகள் வழங்கி கௌரவித்துள்ளன. இவரது சமயம் சமூகப் பணிகள் மேலும் தொடர வேண்டும் இன்னும் பல ஆக்கங்களையும் கவிகளையும் இவர் தர வேண்டும் என்று வேண்டிக்கொண்டு அகவை 75-ல் கால் பதிக்கும் ஆரையூர் அருள் என அழைக்கப்படும் திரு மூ. அருளம்பலம் ஐயா அவர்களை வாழ்த்தி வணங்கி விடைபெறுகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியிலும் பலராலும் ஈர்க்கப்பட்ட ஒரு கலைஞராவர்

**அ.பி ஆனந்த ராஜன்**

நான் அறிந்தவரை இவர் வில்லுப்பாட்டில் மட்டுமின்றி பல துறை ஆற்றல் கொண்டவர் அதாவது நாடகம் கவிதை, கூத்து, சிறுகதை, கட்டுரைகள், விமர்சனம், கரகம், கும்மி, காவலாட்டம், காவியம், காவடி, தாலாட்டு, ஊஞ்சல் கிராமிய பாடல்கள் என பல்துறை கலைகளிலும் தனக்கே உரிய தனித்துவமான பரிட்சயமும் பாண்டித்துவமும் பெற்றவர்.

தமிழ் தின வில்லுப்பாட்டு போட்டியின் தலைப்பு கேற்ப எழுத்துரு ஒன்று தேவை எனக் கேட்கின்ற போது எந்தவித மறுப்புகளும் தெரிவிக்காமல் தனது நேர காலத்தை முற்று முழுதாக செலவு செய்து குறித்த காலத்தில் குறித்த நேரத்தில் அதற்கான எழுத்துருவை தயார் செய்து தருவார்

அது மட்டுமின்றி அதில் வரும் வசனங்களை எவ்வாறு பேசுவது, பாடல்களை எவ்வாறு மெட்டுக்களுடன் பாடுவது பாட்டுக்கான இசையை எவ்வாறு இசைக்க வேண்டும் என்று மாணவர்களுடன் நின்று சொல்லியும் தருவார்.

கலாபூசணம் ஆரையூர் அருளம்பலம் ஐயா அவர்களை நான் சுமார் 15 வருடத்திற்கு மேலாக அறிவேன் இந்த அறிமுகமானது வில்லுப்பாட்டின் ஊடாகவே எமக்கு இடையில் ஏற்பட்டது. நான் நாடகமும் அரங்கிலும் கற்பிக்கும் ஒரு ஆசிரியராகையினால் எனக்கு வில்லுப்பாட்டின் மீது கொண்ட விருப்பத்தினால் அதனை மாணவர்களை கொண்டு ஆற்றுகை செய்து போட்டிகளில் வெற்றி பெற வைக்க வேண்டும் என்பதை எனது அவாவாகும். இதற்கு வழிகாட்டியாக கலைகளில் பாண்டித்துவம் பெற்ற ஒருவரை நான் தேடிய போது எனக்கு அறிமுகமானவரே ஆரையூர் அருளம்பலம் ஐயா அவர்கள்.

இவர் எமது நாட்டுக்கு கிடைத்த மாபெரும் ஒரு கலை பொக்கிசமாகும். இவரது கலை இலக்கியச் செயற்பாடுகளினால் தேசியம் வரை சென்று வெற்றியும் பெற்றுள்ளன. என்பதையும் இங்கு கூறலாம் மேலும் இவர் இறைப்பக்தி நிறைந்தவராகவும் அமைதியான சுபாவம் உடையவராகவும் எளிமையானவராகவும் எப்போதுமே சிரித்த முகத்துடனே காணப்படுவார். இவர் ஒரு சிறந்த எழுத்தாளராக இருப்பதால் பல நூல்களையும் எழுதி புகழ்பெற்றதுடன் பாராட்டுகளையும் பெற்றுள்ளார்

இவரின் நற்பண்புகளுக்கு ஏற்றால் போல் இவரது துணைவியாக எப்போதும் சிரித்த முகத்துடன் எல்லோரையும் வரவேற்று உபசரிக்கும் நற்பண்புடையவராகவும் தந்தைக்கும் தாய்க்குமீடாக ஒரு மகனும் இவருக்குள்ளார்.

புலவர் ஆரையூர் அருளம்பலம் ஐயாவின் 75ஆவது அகவை தினத்திற்காக இவரை வாழ்த்துவதோடு நீடுழிகாலம் இவர் வாழ்ந்து எம்மண்ணுக்கும் எம்தேசம் எங்கும் கலைப்பணியாற்ற வேண்டுமென வாழ்த்தி வணங்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் எழுந்த முன்னோடி பக்தி இலக்கியம்

**பேராசிரியர் செ.யோகராசா குறிப்பிலிருந்து...**

காலப்பின்னணியுடனும் சமகால இலக்கியச் செல்நெறியுடனும் ஒப்பிட்டு நினைவு கூர்ந்து அவ்வடிப்படையில் இப்பக்தி இலக்கிய தொகுதி பற்றிய மனப்பதிவுகளை எடுத்துரைப்பது பயனுடையது. எனினும் சமகால நவீன இலக்கியம் சார்ந்த படைப்புப்போலன்றி இது முற்பட்ட பல்லவர்கால பக்தி இலக்கியத்துடனும் தொடர்புபட்டிருப்பது வெளிப்படையானது. பல்லவர்கால பக்திப்பாடல்களில் இப்பாடல்களில் இடம்பெறும் தெய்வங்களான விநாயகர், சிவன், முருகன், விஸ்ணு, வைரவர், நரசிங்கர், வீரபத்திரர், கண்ணகை, மாரி, காளி, பேச்சி, மீனாட்சி, காமாட்சி, கடலாட்சிபோன்றவர்கள் முக்கியம் பெற்றதில்லை. ஈழத்தில் கூட பிறபிரதேசங்களில் இத்தகைய தெய்வங்கள் மீது பாடப்படுவதில்லை என்பது முதலில் மனங்கொள்ள வேண்டியதாகின்றது. இவ்விதத்தில் எப்பொழுதும் எங்கும் பாடப்பட்டு வெளிவராத மொத்தமாக மூவாயிரத்து பத்துப்பாடல்களைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமின்றி முற்பட்ட கால எழுத்து இலக்கியங்கள் போன்று பத்ததியாக ஏட்டில் வழங்கப்பட்டனவாகவும் மட்டக்களப்பு பிரதேசத்தில் இத்தகைய பாடல்மரபு காணப்படுகின்றது. இவ்வாறான முன்னோடிப்பாடல் தொகுப்பொன்று "மகாமாரி திவ்விய பிரபந்தம்" 1970இல் திரு.சி.கணபதிப்பிள்ளை (அட்டைப்பள்ளம்) என்பவரால் நூலுருப் பெற்றுள்ளது. இந்நூலிலுள்ள பாடல்கள் யாரால்? எப்பொழுது? பாடப்பட்டதென்பது தெரியாத ஒருதொகுப்பு நூலாகும். இவ்வாசிரியர் ஊரூராகச்சென்று ஏற்கனவே பாடிய பாடல்களைத் தொகுத்தே வெளியிட்டிருப்பது வெளிப்படை ஆனால், இறையின்பப்பாவாரம்" பாடல்கள் யாவும் ஆரையூர் அருள் அவர்களால் கடின உழைப்பால் இயற்றப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விதத்தில் அதிக பாடல்கள் கொண்ட முன்னோடி நூலாகவிருப்பது விதந்துரைக்கத்தக்கது. பல கோவில்கள் மீது பாடப்பட்டுள்ளன. இவ்விதத்தில் மொத்தமாக 3010பாடல்கள் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இவற்றுள் சில,

"பேருலவு பெரிய போரதீவு தன்னில் பெருமை யுறக் கோவில் கொண்டமர்ந்த பத்திரகாளி மேல் கும்மிபாடுவதற்கு முத்துலிங்க விநாயகர் காப்பாமே" என்றவாறு காப்புச்செய்யுளுடன் ஆரம்பிக்கின்றன. மேலும் சில, தல வரலாறு பற்றிக்கூறுகின்றன.

"மாந்தை மானகரை ஆண்டிருந்த
பேரரச விஸ்வதேவன் தன்னைந்து
பேரரிய பெண் பிள்ளைகளை பஞ்ச
வாச்சாரியார்க்கு மணம் செய்தனரே."

வர்ணனையாகவுள்ளன சில,

ஆறு கிராமங்கள் சேர்ந்து நிருவகி
பேறுபெற்ற செட்டி பாளையத்தே
நீர்கொண்ட வம்மிமர நிழலுறை
பார்புகழ் கண்ணகை நீயேயம்மா."

அருட் சிறப்புப்பற்றித் தொடர்கின்றன.

"அன்பு வடிவம் ஆனவளே - காளி
அறம் வளர்த்த அன்னையாளே
துன்பக்கடலிலே மூழ்கிட முன்னரே
தோணியாய் வந்து துணைபுரிவாய்"

ஆலய அமைப்புப்பற்றி விபரிக்கின்றன

"மட்டக்களப்பு வாவியோடிக் - கூடி
வங்கக் கடலோடு சங்கமிக்கும்
அமிர்தகழிப் பதி தேடியமர்ந்த
ஆனைமுக வப்பனைப் பாடிடுவோம்"

சில தலங்களில் அதிகாலையில் விசேடமாக நடப்பவை பற்றிக்கூறுகின்றன.

"நாளும் அதிகாலை வேளையிலே
நாவற்குடா கங்காணியார் கோவிலிலே
கூறிடு நற்சிந்தனை கேட்ட பின்னரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரார் பணிசெய்யச் செல்வாரடி"
பல மாறிப் புதுமைகள் பற்றி எடுத்துரைப்பன.
"கந்த புராணத்திற்குப் பதிலாயிங்கு - திருச்செந்தூர்ப்
புராணமே படித்து
பொருள் விளங்கப்பயன்கூறும் புதுமையை
மண்டூர் பதியிலே கண்டிடலாம்.
சமய நிலையில் தலங்கள் சிலவற்றின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைக்கின்றன.
"கேதாரகௌரி விரதத்திற்கு - என்றும்
ஆதாரமிக்ககாளி கோவிலென்று
நூற்றியென்பது வருடங்களாய்
நோற்றுவார் மக்கள் விரதமிங்கு
ஈழத்தில் வேறு இடங்களில் காணமுடியாதவாறுள்ள விசேடமான சடங்கு முறைபற்றி வெளிப்படுத்தப்படுகின்றன.

"வேலூர் பத்திரகாளி விசேடம், ஆகமமுறைப்படியும், பத்ததி முறைப்படியும் பூசை, சடங்குகள் நடப்பது என்பது அத்தகைய விடயங்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். சடங்குகளில் பாடப்படும் பாடல்களில் மட்டுமின்றி, பஜனைப் பாடல்களாக அளிக்கை செய்யப்படுகின்றனவும் இந்நூலில் இடம்பெற்றிருக்கின்றன.

ஈழத்திலெழுந்த வேறெந்தப் பக்திப்பாடல்களையும் விட சமகாலப் பிரச்சினைகள் சிலவற்றை வெளிப்படுத்துவது இத்தொகுப்பின் தனித்துவங்களுள் தலையானது.
"அதர்மம் தலை தூக்குதம்மா கண்ணகித்தாயே
தர்மம் காக்க மனமில்லையோ
ஆஸ்த்தி அழியுதம்மா ஆச்சியே காருமம்மா
எல்லை பறிபோகுதம்மா
தொல்லைதனைத்தீரும்மம்மா
சீலம்மிகு பௌத்த அவதாரம் எடுத்து
புனித சித்தாத்தர் போதனைச் சிதைத்து
சனநாயகப் போர்வை போர்த்து ஏய்க்கார்
கேசவனே கேடு செய்த இராவணனும்
போர்க்களத்தில் நிராயுதனாய் நின்ற போது
இன்றுபோய் நாளைவா என்றுரைத்தாய்..
பாம்பணையில் பள்ளிகொள்ளும் பச்சைமாலே
தேம்பியழு எங்கள் துயர் துடைக்கவா வா
தமிழர்தம் பண்பாடு செழிக்கும்படி வேண்டுவன சில
தாரோங்கு கலைஞானம் தரணியில் வாழ
தன்னருளாம் ஓங்காரா வுன்தாள் போற்றி

இத்தொகுதிப் பக்திப்பாடல்களின் தனித்துவமான சிறப்புகளை மேற்கண்டவாறு வெளிப்படுகின்றது.

இனி, இப்பாடல்களின் எடுத்துரைப்பு முறைபற்றிக் கவனிக்கலாம். பாடல்வடிவம் என்று நோக்கும் போது, மரவுவழிப்பட்ட, கும்மி, காவடி, அகவல், காவியம், தாலாட்டு, ஊஞ்சல், கரகம் முதலியவற்றொடு, அவ்வழி சேராத திருப்பள்ளியெழுச்சி முதலானவையும் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

எல்லாப்பாடல்களுமே இசைக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும் சில தொகையறா, பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் என்றவாறு பகுப்பு நிலையிலும் வெளிப்பட்டுள்ளன. மைலம்பாவெளி காமாட்சி இசைச் செழுமை கருதி சில பாடல்கள் வித்தியாசமான பாடல் முறையில் வெளிப்பட்டுள்ளன.

"மயிலம் பாவெளி சன்னிதி வந்த போதிலே - காமாட்சி
கவிதந்தால் இசையோடு எந்தன் நாவிலே
பாடுவோம் வாரீர்
சூடுவோம் வாரீர் - பாமாலை
சூடுவோம் வாரீர்
சில பாடல்களிலே பேச்சிமொழி இடம்பெறுவது உணர்ச்சி பூர்வமான நெருக்கத்தை வெளிப்படுத்துகின்றது.

கூடும் அடியவர்க்கும் - காளி
பாடும் பாவணருக்கும்
நாடும் வரமளிக்க - ஆத்தா
தேடி ஓடி வருவா"
"வேப்பிலை கைபிடித்து - காளி
வேதனை தீர்த்திடுவா
கூப்பி கரம் தொழுதா - அத்தக்
தூக்கி துயர்துடைப்பா"
மாசி மாதம் கண்ட உத்தமரு - நம்ம
மாமாங்க தேசிகரு
அறிந்திடுதம்பி - அவர்
வாசம் வீசுது நேசமெல்லாம்
புரிந்திடுதம்பி

இத்தகைய பாடல்களின் இனிமை, ஓசை, சந்தம், எளிமை என்பவற்றிற்கு எடுத்துக்காட்டுக்கள் இவ்வாறு இறையின்பப்பாவாரத்திலுள்ள அனைத்துப்பாடல்களும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒன்றையொன்று மிஞ்சி நிற்பத பாவலரின் புலமைத்துவத்தைப் பறைசாற்றி நிற்கின்றன.

திருமூலர் 3000திருமந்திரங்களைக் கூட கூடுவிட்டு கூடு பாய்ந்து ஒருவருடத்திற்கு ஒருபாடலாக பாடியதாக அறியக்கிடைக்கின்றது. ஆனால் இப்பாவலர் 3010 பாடல்களையும் பாடியிருப்பது, இதுவரை இலங்கையிலோ, இந்தியாவிலோ, நானறிந்தவரை வேறு பக்தியிலக்கிய நூல்கள் வெளிவரவில்லையென்பது ஈன்று குறிப்பிடத்தக்கது. கல்முனை தமிழ்ச்சங்கத் தலைவர் பரதன் கந்தசாமி தமது சிறப்புரையில் இந்நூலானது ஆசிரியர் ஆரையூர் அருளின் வாழ்நாள் வரலாற்றுச் சாதனை" எனக்குறிப்பிட்டிருப்பது மிக மிகப் பொருத்தமான கூற்றாகும். கவிஞர் தமிழ்மாமணி அகளங்கன் 25ஆகஸ் 2019 தமிழ்தந்தியில் இறையின்பாவாரம் ஒரு வரலாற்று பொக்கிசம் தலைப்பிட்டு இந்நூல் இந்த நூற்றாண்டில் ஈழத்தில் வெளிவந்த மிகப்பெரும் கவிதை நூல் என்றும் அவரது அறிமுகவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளமை மனக்கொள்ளத்தக்கதாகும்.

# ஆரையூர் அருளம்பலம்

-தமிழ்க்கீரன்
கல்மடு, கல்குடா, மட்டக்களப்புத் தமிழகம்.

ஆரைநகர் வாழ்கின்ற அருளம் பலனார்
அருந்தமிழ் வளர்க்கும் அகன்ற அகனார்
பாரோர் அறிந்த பைந்தமிழ்ப் பாவலர்
பண்புடன் பழகும் நற்றமிழ்க் காவலர்
சான்றாய் விருதுகள் சாலப் பெற்றவர்
சங்கத் தமிழுரைக்கும் செந்தமிழ்க் நாவலர்
ஈன்ற மண்ணிற்கு ஏற்றம் தன்னை
இனிதே சேர்த்திடும் ஈழ மைந்தரே.

நவீனம் மரபு நாடிப் போற்றி
நல்ல நூல்கள் நயமுற யாத்து
நாடும் வீடும் நலந்தான் காண
நல்ல வழியை நயம்பட உரைத்தீர்
கேடு முனிந்து கோடு அகற்றிக்
குணமது மொழிந்தீர் குவலயம் காக்க
வாது அற்ற வியன்தமிழ்ப் பாக்கள்
வழங்கி வைத்தீர் வையகம் ஏமுறவே.

கட்டுரை கவிதை கவின்தமிழ்ப் பாக்கள்
கருத்து நிறைந்த சிறுகதை நாடகம்
நாட்டுக் கூத்து நலந்தரும் வில்லுப்பாட்டு
கேட்டு மகிழ நன்று தந்தீர்
ஏட்டிலும் இறுவட்டிலும் எண்ணிலாக் கவியெழுதி
எழுத்து வாழ என்றும் உழைத்தீரே
நாட்டில் உள்ளோர் நன்மை பெறவே
நற்கலை பழகி வளர்த்து வந்தீரே.

ஈழத்து ஆலயங்கள் இன்புகழ் கூறும்
இறையின்பப் பாவாரம் இயற்றித் தந்தீர்
வாழ்த்துப் பாக்கள் வாரி வழங்கி
வார்த்தையில் பற்பல வித்தைகள் செய்தீர்
மண்வாசனை கமழும் மாத்தமிழ்க் கவிகள்
மட்டின் மணம்வீசும் மனமகிழ் கவிகள்
எம்மவர் அறிய இல்லங்கள் நிறைய
ஒற்றுமை மந்திரம் ஓதி வைத்தீரே.

அவளந்த நினைவு நெஞ்சக நினைவு
அகத்தே அழிந்த ஆசை எனநல்
சமுதாயத் தராசு உயர்ந்த உள்ளம்
நினைவலை மனமாற்றம் எனப்பல சிறுகதை
சமர்ப்பணம் நல்லதம்பி சதிமதி விதியும்
புதிய விதி சமைப்போம் நல்ல
கல்வியே கலங்கரை விளக்கம் எனப்பல
நாடகங்களும் நவின்றீர் நற்றமிழ் அதிலே.

மண்வாசம் கமழும் மண்முனைப் பற்றெழிலாள்
மட்டின் மாண்புகூறும் கவியெனும் களஞ்சியம்
ஒற்றுமை விதைக்கும் ஒற்றுமைக்
கரவொலியொலிக்கட்டும்
நாட்டுப் பற்றையூட்டும் எங்கள் இலங்கைநாடும்
முத்தமிழ்ப் புகழ்கூறும் தமிழைப் போற்றிப்பாடுவோம்
நீதி நான் ஏன் மறைந்தேனென்று
முத்தெனக் கவிகள் நயமுடன் தந்த
வித்தகக் கவிஞர் அருளம்பலம் வாழ்கவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெறி தவறாத நீங்கள் நீண்ட புகழோடு நிறைவாக வாழ்வீர்

ஆரையம்பதி ஆ.தங்கராசா

பவளவிழா காணுகிற தம்பி அருளம்பலமே நீடுழிவாழ்க!
புவியில் பிறந்தோர் பவித்திரமான வாழ்க்கை வாழ்ந்தால்
எவரும் மதிப்பர்! ஏற்றமுடன் வாழ்த்தி நிற்பர்!
அந்த மதிப்புக்குரித்தான வாழ்க்கைக்கு நீங்கள் எடுத்துக்காட்டே!
தவம் போன்ற வாழ்வில் தாய்தந்த அன்புப்பிணைப்பில்
துயரத்தை எதிர்த்துப்போராடி முன்னேற்றப்பாதையிலே கால்பதித்தீர்!
ஆவலாய் படித்து இளம்வயதிலே கல்வியிலே முன்னேற்றம் கண்டு
அன்னையின் முயற்சியால் உத்தியோகம் கண்டு சிறப்புற்றீர்!

அன்புள்ள இரு அக்காமாரின் நேசமானபாசத்தால் ஒழுக்கசீலனாகி
உண்மை நேர்மை பொய்சொல்லாத் தூய வாழ்வு வாழ்ந்து
என்றும் நல்ல மனிதனாய் வலம்வந்த புகழ்பெற்றீர்!
ஏழை மாணவர்களின் கல்வி சிறக்க எந்த நாளும் உழைத்து
பண்புக்கு உரித்தவராய் பலபேரும்போற்றிப் பாராட்ட
பொற்காலவுலகம் தோன்ற எழுத்துப்பணியில் ஆர்வம் கொண்டீர்!
எந்நாளும் ஓய்வில்லாமல் பேனாவைக் கையில் எடுத்து
எழுத்தே தெய்வமென அழிவில்லாத கவிதைதந்த பாரதியின் பாதை நின்றீர்!

எழுத்தே மூச்சென்றோய்வில்லாமல் எழுதிக்குவித்தீர்கள்!
ஏற்றமுடன் நீங்கள் எழுதிய தெய்வீகப்பாடல்கள்
அழுத்தமாக கோவில்தலங்களில் தினமும் ஒலிக்கிறதே!
அம்மன்புகழ்பாடி சிவன்முருகன் பிள்ளையார் பாடல்களை
எழுகதிராய் இன்பத்தமிழால் தந்ததைக்கற்றோர் போற்றிப்புகழ்கின்றாரே!
எதனை நீங்கள் விட்டு வைத்தீர் கூத்துக்கலையை செம்மைப்படுத்தி
பழந்தமிழின் பெருமையை வடமோடி தென்மோடிக்கூத்தை வளப்படுத்தி
பெருமைக்குரிய கூத்துக்கலையின் செழுமைக்கு உயிர்கொடுத்தீரே!

நாட்டார் பாடல்களை நவீனப்படுத்தி அதன் சிறப்பக்களை
எழுச்சிகொண்ட எண்ணக்கருக்களால் செதுக்கியெடுத்து
எட்டுத்திக்கும் நாட்டார் பாடல்களை எடுத்துச்சென்று
இன்பத்தமிழின் பெருமைக்கு ஊற்றுக்காலாய் நின்றீரே!
பட்டுப்போகாமல் முதுமொழிகளை விடுகதைகளை பாட்டிமார்கதைகளை
பாங்காகவெழுதி நாட்டாரிலக்கியத்தை வளர்த்தீரே!
கட்டுக்குலையாத ஊஞ்சல் பாடல்களை காவடிப்பாக்களை
கும்மி கரகாட்டப்பாடல்களை ஏட்டிலே எழுதிதந்தீர்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தர்களும் காவிய மேதைகளும் ஏற்றமுடன் காட்டித்தந்த
சுந்தரமான வில்லுப்பாட்டை துணிவுடன் கையிலெடுத்து
அந்த நாளில் நகைச்சுவை நடிகர் கலைவாணர் கிருஸ்ணன் பாடித்துதித்த
இன்பம் பொங்க கவிஞர் சுப்பு ஆறுமுகம் தமிழ்நாடெங்கும் ஒலிக்கச் செய்த
இந்த மண்ணின் மாஸ்டர் சிவலிங்கம் விளையாடிய வில்லுப்பாட்டை
நீங்கள் அருளம்பலமே மட்டக்களப்பில் வில்லுப்பாட்டை தழைக்கச் செய்தீர்
சுந்தரமான தமிழில் சிறுகதை நாடகம் கட்டுரை விமர்சனம் கவிதை என்று விட்டுவைக்காமல
செம்மொழியாம் தமிழ் உயரதொண்டு செய்யுமுங்களை இறைவன் வாழ வைப்பார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பழைமைவாதிகள் பெருமைவாதிகளாக தம்மை தாமே புகழ்ந்துகொள்வதில்லை. இதற்கு இலக்கணமானவர் ஆரையூர் அருள். இம்மண்ணில் அவதரித்து 75 ஆண்டுகள் கடந் திருக்கின்ற சூழலில் தமிழ் இலக்கியத் துறைக்கு இவர் ஆற்றி வருகின்ற சேவை அவரின் வயதின் பல மடங்குகள் கடந்தவையென்றே கூறமுடியும். அவ்வாறிருந்தும் அமைதியாக, ஆடம்பரமின்றி இருந்து கொண்டிருக்கின்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஆலயங்கள் பலவற்றின் வரலாறு, அற்புதங் களை அறிய வேண்டுமாயின் இவரது “இறையின்ப பாவாரம்”, “பத்தாலய பாவாரம்” போன்ற நூல்கள் மிகவும் துணை புரிகின்றன. இந்நூல் பாடல்களாக அமைந்திருக்கின்றன. இதுபோன்றதொரு நூல் ஈழத்தில் 20, 21 ஆம் நூற்றாண்டுகளில் எழவில்லையென ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

மேலும் இவரால் எழுதப்பட்ட “வில்லடிப் பாட்டு”, “தமிழ் கூத்தியல்” போன்ற நூல்கள் ஈழத்து தமிழ் இலக்கியத்துறைக்கு கிடைத்த பொக்கிசங்களாகும்.

இலக்கியத்துறையில் ஆர்வமும், தமிழ் மீதான பற்றும், கலைகள் மீதான ஈடுபாடும் கொண்டவருமான “ஆரையூர் அருள்” பற்றிய நூலொன்றினை தொகுக்க வேண்டுமென்ற அவா ஏற்பட்டது. இதன் காரணமாக அவரின் 75வது ஆண்டு பிறந்த தினத்தில் “பவளவிழா நாயகன்” என்ற பெயரில் நூலினை வெளியிட எண்ணியிருந்தேன். இதற்காக அவரின் ஆளுமை குறித்த விடயங்களை கட்டுரைகளாகவும், கவிதைகளாகவும் பெற்றுக்கொண்டேன். அவை அனைத்தும் இந்நூலில் வெளிவருகின்றன.

– வயிரமுத்து துசாந்தன் –



ISBN 978-624-98705-2-9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org